REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 டிசம்பர் 9 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

1932 - 2021 89

வரு. 89 இல. 292 | Thursday 09, December, 2021 | 20பக்கங்கள் | 30/-




## சமையல் Gas வெடிப்பினால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு

**அரசு வழங்க ஏற்பாடு என்கிறார் லசந்த அழகியவண்ண**



சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்களினால் ஏற்பட்ட உடைமைகள் மற்றும் உபகரணங்கள் சேதங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் உரிய நட்டஈடு வழங்கப்படுமென இராஜாங்க அமைச்சரான லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பாகங்களில்

06

## சபையில் நடந்த மோதல்; சபாநாயகரால் 11 பேர் கொண்ட குழு நியமிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்றத்தில் கடந்த 03 மற்றும் 04 நாம் திகதிகளில் ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்பு எம்.பிக்களிடையே ஏற்பட்ட மோதல் நிலைமை தொடர்பாக ஆராய்ந்து எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க பரிந்துரை வழங்குவதற்காக

06

## இந்தியாவில் விடுதலையாகவுள்ள வாழைச்சேனை மீனவர்கள் குறித்து டக்ளஸ் கலந்துரையாடல்



இந்தியக் கடற்படையினரால் மீட்கப்பட்ட வாழைச்சேனை மீனவர்களையும் அவர்களது படகையும் நாட்டுக்கு கொண்டு வருவது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நேற்று கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக் கடற்றொழிலாளர்களின்

06

## பொறியியலாளர் பிரியந்த குமார படுகொலை சம்பவம்:

# சம்பந்தப்பட்டோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பாக். அரசிடம் இலங்கை கோரிக்கை



**பாராளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேக்கர தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பாகிஸ்தானில் இலங்கை பொறியியலாளர் படுகொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதுடன் இந்த படுகொலையுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தான் அரசாங்கத்திடம் எமது அரசாங்கம் கோரியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேக்கர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை இப் படுகொலை தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் எடுத்துள்ள

06



பாகிஸ்தானில் மத அடிப்படைவாதிகளால் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவின் இறுதிக்கிரியைகள் நேற்று அன்னாரின் கனேமுல்ல இல்லத்தில் நடைபெற்று பொல்ஹேன பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் மனைவி, பிள்ளைகள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.
படம்: சிந்தக்க குமாரசிங்க

## பிரித்தானியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு விரிவாக்கம்

**பாதுகாப்பு செயலாளர் கமல் உறுதியளிப்பு**




இலங்கை மற்றும் பிரிட்டனுக்கிடையில் நிலவும் பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தொடர்ந்தும் வழங்குவதாக பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற

06

## டிசம். 04க்கு முன்னர் விநியோகித்த LP Gas சிலிண்டர்களை மீளப் பெற நடவடிக்கை

**லிற்றோ Gas நிறுவனம் அறிவிப்பு**




வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகள் ஆகியவற்றுக்கு விநியோகிக்கப்பட்ட எரிவாயு கொள்கலன்களை மீளப் பெறவுள்ளதாக லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் 04 ஆம் திகதிக்கு

06

## 10 இலட்சத்தை கடந்த பூஸ்டர் தடுப்பூசி ஏற்றல்

**தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு தெரிவிப்பு**




இலங்கையில் பூஸ்டர் ஊசியாக பைஸர் தடுப்பூசியை மூன்றாவதாக செலுத்தி கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்துள்ளது.

பைஸர் மூன்றாம் தடுப்பூசி 37 ஆயிரத்து 578 பேருக்கு செலுத்தப்பட்டதை தொடர்ந்தே இந்த அதிகரிப்பு

06

## ஈஸ்டர் தாக்குதலுடன் நிறுத்தப்பட்ட இலங்கை – போலந்துக்கான விமான சேவை மீள ஆரம்பம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்த இலங்கைக்கும்போலந்துக்குமிடையிலான நேரடி விமான

06

## இந்திய முப்படை தளபதி பயணித்த ஹெலி விபத்து!

**தமிழகம் நீலகிரியில் சம்பவம்; 13 பேர் பலி**



இந்திய முப்படைகளின் தளபதி பயணித்த ஹெலிகொப்டர் தமிழகத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ள நிலையில், ஐவர் ஆபத்தான நிலையில்

06

## அமைச்சரவை, இராஜாங்க அமைச்சர்கள் விபரம்; அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சட்ட மாஅதிபருக்கு உத்தரவு

**நீதிமன்றம் நேற்று அதிரடி உத்தரவு**



தற்போதைய அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு சட்ட மாஅதிபருக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய அமைச்சரவையின் நியமனம் அரசியலமைப்பின் விதிகளை மீறுவதாக தெரிவித்து, பொறியியலாளர் கபில ரேணுகாவினால் அடிப்படை உரிமைகள் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந் நிலையில் அம்மனு மீதான பரிசீலனை

06



இலங்கை வந்துள்ள அகில இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன் நீதி அமைச்சர் அலி சப்ரியை நேற்று முன்தினம்(07) நீதி அமைச்சில் சந்தித்தார்.

## அரசுக்கு எதிராக நேற்று கொழும்பில் போராட்டம்



நாட்டின் தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதாக தெரிவித்து கொழும்பில் நேற்றுபோராட்டப் பேரணியொன்று கொழும்பு,கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நடத்தப்பட்டது.

யுகதனவி மின் நிலையத்தின் பங்குகள்

06

## சபையில் இடம்பெற்ற மோதல் குறித்து உரிய நடவடிக்கை அவசியம்

**இல்லையேல் நீதிமன்றம் செல்ல நேரிடும்**



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் செயற்பாட்டுக்காக தாக்குவது, அவமதிப்பது, வேண்டுமென்றே இடையூறு செய்வது உச்ச

06

## சிவகரனிடம் TID வாக்குமூலம் பதிவு

**தலைமன்னார் விஷேட நிருபர்**




தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் இரண்டரை மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

06

## பாடசாலைகளில் கொவிட் கொத்தணிகள் அபாயம்

**PHI சங்கத் தலைவர் எச்சரிக்கிறார்**



பாடசாலைகளுக்குள்ளும் கொவிட் கொத்தணிகள் உருவாக ஆரம்பித்துள்ளன. இந்த நிலைமை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லையெனில் மீண்டும் பாடசாலைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை சகலரும் நினைவில் கொள்ள வேண்டும் என இலங்கை

06

## ஹற்றன் பகுதியில் கோரவிபத்து; ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை, மகன் பலி



**ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த உடரட மெனிக்கே ரயிலில் மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் அவர்களின் மகன் ஆகியோர் உயிரிழந்துள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திம்புளை – பத்தனை போகாவத்தை

06

## பெண்ணொருவரின் தோள்பட்டையை துளைத்த ஐந்து அடி இரும்பு கொக்கியை அகற்றி வைத்தியர்கள் சாதனை

**காலி, கராப்பிட்டிய ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை**



காலி, கராப்பிட்டிய வைத்திசாலையில் பெண் ஒருவருக்கு அபூர்வ சத்திரசிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரத்கம, மொரொய்துடுவ பிரதேசத்தை சேர்ந்த பெண்ணின் இடது கை தோள்பட்டை வழியாக ஊடுருவிய மீன் பிடிக்க பயன்படுத்தும் ஐந்து அடி இரும்பு

06

### விக்கல் வீராச்சாமி



தமிழக ஐயா காதர் மொகிதீனின் விருந்துபசாரத்தில மு.கா. எம்பிக்கள் எல்லாரும் தலைவரோட ஒற்றுமையா இருக்கிறத பாத்தியலே....

நல்ல விஷயம், பாக்க சந்தோசமா இருக்கு, அப்படியே தலைவருக்கு புத்திமதி சொல்லி அவரையும் அரசாங்க பக்கம் கொண்டு வந்துட்டா சமூகத்துக்கு நல்லதுதானே...!!!



இலங்கை வந்துள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் உள்ளிட்ட குழுவினரை கௌரவிக்கும் முகமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஏற்பாடு செய்திருந்த இராப்போசன நிகழ்வு நேற்று முன்தினம் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய உயர்ஸ்தானிக துணைத் தூதுவர், தமிழ் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



புரவலர் புத்தகப் பூங்கா ஏற்பாடு செய்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் கே. எம். காதர் மொஹிதீன் ஆகியோருடன் கொழும்பு வந்த தூதுக் குழுவினர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் (6) கொள்ளுப்பிட்டியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தினகரன்,தினகரன் வாரமஞ்சரி,வண்ணவானவில் பிரதம ஆசிரியர் தெ.செந்திவேலவர் பேராசிரியர் காதர் மொஹிதீனுக்கு பொன்னாடை போர்த்தியதுடன் புரவலர் புத்தகப் பூங்காவின் 27வது வெளியீடான வீ.தன பாலசிங்கம் எழுதிய" ஊருக்கு நல்லது சொல்வேன் நூலின் பிரதியையும் கையளித்தார்.

''அமாக்க வாசம்'' எனும் நூலுக்கான அரச தேசிய விருது பெற்ற கவிஞரும் எழுத்தாளருமான அல் அஸுமதும் பேராசிரியரை பாராட்டி கௌரவித்தார் (படங்கள் அஷ்ரப் ஏ சமத்)



# சர்வதேச இசைக்கல்விக்கான இலங்கைத் தூதுவருக்கான விருது





அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரான வண பிதா அருட் கலாநிதி எஸ். சந்ருபெர்னாண்டோவிற்கு தமிழகத்தின் தலைநகர் சென்னை சுகஜீவ பேராலயத்தில் (06) திங்கட்கிழமை அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச இசைக்கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைக்கான தூதுவருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் .

தமிழகத்தின் பிரபல தொழிலதிபர் வி.ஜி. பி. நிறுவனத்தின் உப தலைவரும் சுகஜீவிய பேராலயத்தின் தலைவருமான வி.ஜி.எஸ் . காடினல் செல்வராஜின் அழைப்பில் சென்ற அருட்கலாநிதி வணபிதா எஸ். சந்ரு பெர்னாண்டோவிற்கு சிறப்பு விருதான சாதனை சர்க்கரவர்த்தி வழங்கி கௌரவிக்கப்பட்டார் .

வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி. சந்தோசம் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

ஜெருசலேம் வேதாகமப் பல்கலைக்கழகத்தின் நினைவுச் சின்னத்தை பணிப்பாளர் எபி நேசர் வழங்கிவைத்தார். எட்டோ மிஷன் இந்தியா நினைவுச்சின்னத்தை பிஷப் இஸ்ரேல் ராஜப்பாவினால் வழங்கி வைக்கப்பட்டது .



இலங்கை தமிழ் மாதர் சங்கத்தின் கிரிஸ்மஸ் பண்டிகை கொண்டாட்டம் சங்கத் தலைவி திருமதி மலர் பொன்சேகா தலைமையில் நிர்வாக குழுவின் ஏற்பாட்டில் அண்மையில் ஹேட்டேல் சினமன் கிரேன் லோங்டன் கிறில்லில் நடைபெற்றது. நிகழ்வில் கிருஷ்மஸ் கீதம் இசைப்பதையும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும், நடன நிகழ்வுகளையும் காணலாம்

**தொழுகை நேரம்**

07 முதல் 09 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.49 |
| லுஹர் | 12.04 |
| அஸர் | 03.25 |
| மஃரிப் | 05.55 |
| இஷா | 07.09 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் கார்த்திகை 23

ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தமரண யோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | மறதி |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | செலவு |
| மீனம் | கோபம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)



பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா (பிம்ஸ்டெக்) கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டென்சின் லெக்ப்ஹெல் (Tenzin Lekphell), நேற்று (08) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தபோது...



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் BMICHஇல் நேற்று நடைபெற்ற சாமஸ்ரீ விருது வழங்கும் நிகழ்வின்போது நிகழ்ச்சி ஏற்பாட்டுக்குழு அமைப்பாளர் டாக்டர் ஜொஹான் பெரேரா, பிரதமரின் இந்துமத விவகாரங்களுக்கான இணைப்பாளர், சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா ஆகியோர் முன்னாள் ஜனாதிபதியுடன் எடுத்துக்கொண்ட படம்.

கிண்ணியா படகு விபத்து விவகாரம்

## மூன்று சந்தேக நபர்களுக்கும் டிச. 16 வரை விளக்கமறியல்

***றொட்டவெவ குறூப் நிருபர் அப்துல் சலாம் யாசீம்***

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று (08) இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த மூவருக்கான விளக்கமறியலை தொடருமாறு உத்தரவிட்டார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் கிண்ணியாபெரியாற்றுமுனை பகுதியைச் சேர்ந்த முகமது அலி முகமது ரியாஸ் (40வயது) அப்துல் முத்தலிப் பஸ்மி (35வயது) ஜமால்தீன் முபாரக் (35வயது) எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் கடந்த 23ஆம் திகதி படகுப் பாதை கவிழ்ந்ததில் மாணவர்கள் உட்பட 06 பேர் உயிரிழந்ததுடன் படகுப் பாதை செலுத்திய சந்தேகநபர்கள் தலைமறைவாகி இருந்தனர். இவர்கள் கடந்த நவம்பர் 24ஆம் திகதி கிண்ணியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே சந்தேக நபர்கள் மூவரையும் டிசம்பர் 16ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கட்டளையிட்டார். இதேவேளை கிண்ணியா நகர சபை தவிசாளர் படகுப்

06

அரசாங்கம் உறுதியளித்தவாறு

## முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை

***லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்***



புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக அரசாங்கம் உறுதியளித்தாலும் இன்னும் அது நிறைவேற்றப்படவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சு மற்றும் பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. சிறு கைத்தொழில் முயற்சிகளுக்கு வங்கிக்கடன்கள் மூலம் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் எதுவும் நடைபெறவில்லை. இதனால் முன்னாள் போராளிகள் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுமளவுக்கு நிலைமை மாறியுள்ளது. பலர் தற்கொலையும் செய்துள்ளனர்.

பல முன்னாள் போராளிகள் வீதிகளில் கையேந்தி யாசகம் பெறும் நிலை காணப்படுகின்றது. எனவே அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசு எந்த வசதி வாய்ப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லையென்றார்.

## கொழும்பு ஸ்ரீ காயத்ரி தேவி மகா காளியம்மன் ஆலய வருஷாபிஷேக விழா

கொழும்பு கொட்டாஞ்சேனை மேபீல்ட் ஒழுங்கை அன்னை ஸ்ரீ காயத்ரி தேவி மகா காளியம்மன் ஆலய வருடாந்த வருஷாபிஷேகப் பெருவிழா நாளை (10) வெள்ளிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு மகா கணபதி சூரிய காயத்ரி கலச பூஜை காயத்ரி சித்தர் சுவாமி முருகேசு மகரிஷியின் பிரதம சீடரும் தென் ஆபிரிக்கா மற்றும் கொழும்பு காயத்ரி பீடங்களின் தலைவருமாகிய வண. சுவாமி ஸ்ரீ சங்கராநந்தா மகராஜ் தலைமையில் நடைபெறும்.

சுகாதார வழிமுறைகளுக்கு அமைய ஆரம்பமாகவுள்ள விழாவில் மாலை 5 மணிக்கு விசேட யாகம், பூஜை, பஜனை மற்றும் சுவாமிகளின் அருளுரை என்பனவும் மறுநாள் 11 சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு காயத்ரி தேவிக்கு அபிஷேகம் அலங்காரம் நடைபெறும்.

## முள்ளிவாய்க்கால்: 2020இல் நினைவுதினம் அனுஷ்டித்தவர்கள் பிணையில் விடுதலை

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்தினரென கடந்த ஆண்டு மட்டக்களப்பு கிரான் பகுதியில் கைது செய்யப்பட்ட 10 பேரும் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எதிராக லவக்குமார் என்பவருக்கு நீதிமன்றம தடை உத்தரவு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் உட்பட 10 பேர் அன்றையதினம் நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்குத் தீபச் சுடர் ஏற்றி, கடலில்

06

Gas சிலிண்டர் வெடிப்பு விவகாரம்

## உரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசின் உடனடி நடவடிக்கை அவசியம்

*அநுரகுமார திஸாநாயக்க எம்.பி*

***லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்***



நாட்டில் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்களால் மக்கள் தற்போதும் பெரும் அச்சத்துடன் வாழ்வதாக தெரிவித்த ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, இப்பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப் பிரச்சினைக்கு தீர்வாக எரிவாயு கம்பனி, நிறுவனங்கள் மற்றும் வீட்டுப் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை மீள பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது. ஆயினும் அந்த எரிவாயு சிலிண்டர் திறக்கப் படாமல் இருப்பது அவசியம் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது. அது எந்த வகையிலும் சாத்தியமாகாது. ஏனெனில் எரிவாயு சிலிண்டர்கள் வீட்டுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ உபயோகத்திற்காக எடுத்துச் செல்பவர்கள் அதனை உடனடியாகவே பாவனைக்கு எடுத்திருப்பார்கள் என்பதை நுகர்வோர் அதிகார சபை புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வர்த்தக அமைச்சின் வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

அரசாங்கம் பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளையும் மட்டுப்படுத்தலையும் அறிவித்துள்ள நிலையில் அந்த அறிவிப்பு மக்கள் மத்தியில் தெளிவில்லாமல் உள்ளன. அது தொடர்பில் அரசாங்கம் மக்களுக்கு தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

அதேவேளை துறைமுகத்தில் அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பெருமளவு

06

## பிம்ஸ்டெக் செயலாளர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா (பிம்ஸ்டெக்) கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டென்சின் லெக்ப்ஹெல் (Tenzin Lekphell), நேற்று (08) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

கடந்த வருடம் நவம்பர் 06ஆம் திகதி பிம்ஸ்டெக் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட லெக்ப்ஹெல்ப் இலங்கைக்கான முதலாவது விஜயம் இதுவாகும்.

2018 – 2020ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், பிம்ஸ்டெக்கின் தலைமைத்துவம் இலங்கைக்கு கிடைத்தது. அக்காலத்தில் ஆரம்ப உறுப்பினராக இருந்துகொண்டு பிம்ஸ்டெக் அமைப்புக்காக இலங்கை வழங்கிய ஒத்துழைப்பை, பொதுச் செயலாளர் டென்சின் லெக்ப்ஹெல் பாராட்டினார்.

பிம்ஸ்டெக் அமைப்பின் ஊடாகக் கட்டியெழுப்பப்படுகின்ற பிராந்திய ஒத்துழைப்பு பயன்மிக்கதாக அமைய வேண்டும். அதேபோன்று, பிராந்தியத்தில் வாழ்கின்ற மக்களுக்கு அதன் பிரதிபலன்கள் நேரடியாக வழங்கப்படக்கூடிய வகையில் அங்கத்துவ நாடுகளுடனும் பொதுச் செயலாளர் அலுவலகத்துடனும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி, பொதுச் செயலாளரிடம் தெரிவித்தார்.

பிம்ஸ்டெக்கின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக அங்கத்துவ நாடுகளுக்கிடையில் முக்கியமான துறைகளைப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கப் பிரிவு என்பன, இலங்கைக்குரிய பிரதான பிரிவுகளாகும். அதற்கான செயற்பாட்டுத் திட்டமொன்றை எதிர்வரும் ஓரிரண்டு மாதங்களில் முன்வைப்பதற்கு திட்ட

06

## ஓமந்தையில் 100 Kg கஞ்சாவுடன் சிக்கிய இருவர் அதிரடி கைது!

ஓமந்தையில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பில் 100 கிலோவுக்கும் அதிக கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கேரள கஞ்சாவுடன் லொறியொன்று பயணிப்பதாக கிடைத்த தகவலுக்கமையவே இந்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது. இதன்போது லொறியிலிருந்து 138 கிலோ 581 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதோடு, லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 46 மற்றும் 28 வயதுகளையுடைய வெல்லம்பிட்டி மற்றும் கொழும்பு 15

06

## அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தை மேம்படுத்துவதற்கு கொரிய அரசாங்க உதவி




அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் வசதிகளை அதிகரிப்பதற்கும் மற்றும் திறன் அபிவிருத்திக்கும் உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கான ஒப்பந்தமொன்று கொரிய சர்வதேச

06

## சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் விவசாயிகள் ஊக்குவிப்பு கலந்துரையாடல்

*அமைச்சர் வியாழேந்திரன் தலைமையில் நிகழ்வு*

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைகள் திட்டத்துக்மைய இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வழிகாட்டலில் ஸ்ரீலங்கா ஹதபிம அதிகார சபையின் ஊடாக சேதனப் பசளை உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடல் அமைச்சில்நேற்றுமுன்தினம் நடைபெற்றது

இக்கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், அமைச்சின் செயலாளர்

06



**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 140.01 | 145.94 |
| கனடியன் டொலர் | 155.95 | 161.79 |
| யூரோ | 223.47 | 232.04 |
| ஜப்பான் யென் | 1.7385 | 1.8041 |
| சிங்கப்பூர் டொலர் | 145.03 | 149.70 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 261.72 | 270.05 |
| சுவிஸ் பிராங்க் | 214.26 | 222.22 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 534.68 | கட்டார் ரியால் | 55.35 |
| குவைத் டினார் | 665.72 | சவூதி ரியால் | 53.73 |
| ஓமான் ரியால் | 523.61 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.88 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் கார்த்திகை மாதம் 23ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜமாதுல் அவ்வல் பிறை 03

### குறள் தரும் சிந்தனை



மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்

மனத்தின் நலம் உயிருக்கு ஆக்கமாக விளங்கும், இனத்தின் நலமோ எல்லாப் புகழையும் வழங்கும்.

## புத்தாண்டு எதிர்நோக்கப்படும் வேளையில் மக்களின் பொறுப்பு

நாட்டில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கை கடந்த சில தினங்களாக அதிகரித்து வருகின்றது. இதனை மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

2020 ஆம் ஆண்டு ஜனவரி முதல் கொவிட் 19 தொற்று உலகிற்கு பெரும் சவாலாக இருந்து வருகிறது. அந்த வகையில் இத்தொற்றின் அச்சுறுத்தலுக்கு இலங்கையும் முகம் கொடுத்த வண்ணமே உள்ளது. இந்நாட்டில் ஏற்கனவே இத்தொற்று மூன்றாம் அலையாக தீவிரமடைந்திருந்த போது அது கடும் அர்ப்பணிப்புகளுடன் பெருவீழ்ச்சி நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து மக்களின் அன்றாட பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டு இத்தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் கட்டம் கட்டமாக தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டு நாட்டில் இயல்புநிலை ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் இந்த தளர்வையும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியையும், இத்தொற்று பரவுதல் அச்சுறுத்தலில் இருந்து நாடு மீட்சி பெற்று விட்டதாகவும் இத்தொற்று கட்டுப்பாட்டு நிலையை அடைந்து விட்டதாகவும் மக்கள் கருதும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மக்களது செயற்பாடுகள் இதனை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதால் கொவிட் 19 தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் கவனயீனமாகவும் அசிரத்தையோடும் நடந்து கொள்பவர்களைப் பரவலாக அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக சமூக இடைவெளியைப் பேணுவதில் மாத்திரமல்லாமல் முகக்கவசம் அணிவதில் கூட அசிரத்தையாக நடந்து கொள்கின்றனர். இதன் விளைவாகவே இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் தற்போது அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

'கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களில் தற்போதைய கவனயீனமும் அசிரத்தையும் நீடிக்குமாயின் 2022 ஆம் ஆண்டையும் இத்தொற்று பரவுதல் அச்சுறுத்தலுடனேயே கடத்த வேண்டி இருக்கும்' என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்திருக்கின்றார்.

அத்தோடு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமும், 'கொவிட் 19 தொற்றுக்கான தற்போதைய அசிரத்தை நீடிக்குமாயின் 2022 ஜனவரிக்குள் இத்தொற்று தீவிரமாகப் பரவும் நிலையை அடையும்' என்று குறிப்பிட்டுள்ளது. உண்மையில் இலங்கை மக்களாகிய நாம் எதிர்வரும் நாட்களில் மிகுந்த பொறுப்புணர்வுடனும் முன்னவதானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நத்தார் பண்டிகையையும் புத்தாண்டையும் இந்நாடு எதிர்கொண்டுள்ளது. இப்பண்டிகையின் நிமித்தம் ஆடை மற்றும் பொருட்கள் கொள்வனவில் அதிக கவனம் செலுத்தப்படும் காலம் இதுவாகும். அதனால் மிகுந்த பொறுப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவது அவசியம்.

இல்லாவிட்டால் 2020 நத்தார் பண்டிகை, புத்தாண்டு மற்றும் சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதிகளில் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் குறித்து அசிரத்தையோடும் கவனயீனமாகவும் நடந்து கொண்டதன் விளைவாக ஏற்பட்ட விளைவுகளை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. குறிப்பாக நாட்டை அடிக்கடி முடக்க வேண்டிய நிலை ஏற்பட்டதோடு மக்களது நாளாந்த வாழ்வாதார செயற்பாடுகளிலும் தாக்கங்கள் ஏற்பட்டன. அத்தோடு நாட்டின் பொருளாதாரமும் தாக்கங்களுக்கும உள்ளாகியுள்ளது. அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்பட ஒரு போதும் இடமளிக்கலாகாது. கொவிட் 19 தொற்று ஒரு தொற்று நோயாக இருப்பதால் அதன் பரவுதலைத் தவிர்ப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உச்சபட்ச பங்களிப்பை நல்க வேண்டியவர்கள் மக்களாவர். இதைவிடுத்து இத்தொற்றின் பரவுதலையும் தொற்றையும் கட்டுப்படுத்துவதற்கு இப்போதைக்கு வேறு மார்க்கங்கள் இருப்பதாக இல்லை. தடுப்பூசி பெற்றிருந்தாலும் கூட இத்தொற்றுக்கு உள்ளாவதையும் அதன் பரவுவதலையும் தவிர்க்க முடியாது,

இந்த நிலையில் இந்நாட்டில் ஏற்கனவே தீவிரமடைந்திருந்து தற்போது பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ள இத்தொற்று எந்த சந்தர்ப்பத்திலும் மீண்டும் தீவிரமடைய முடியும். அதற்கான சாதக சூழலையும் வாய்ப்பையும் எதிர்பார்த்த வண்ணமே உள்ளது இத்தொற்று.

ஆகவே இத்தொற்று மீண்டும் தீவிரமடையத் துணை போகாத வகையில் ஒவ்வொருவரும் முன்னவதானத்துடனும் விழிப்புணர்வுடனும் செயற்படுவது அவசியம். இதனைத் தம் கடமையாகக் கருதி செயற்பட வேண்டியது இந்நாட்டு பிரஜைகளின் பொறுப்பு என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# அரு ஸ்ரீகலையகம், - இந்திய தூதரகம் இணைந்து வழங்கும் 'அபூர்வம்' நாட்டிய நிகழ்ச்சி கொழும்பில்

### -பிரதம விருந்தினராக அமைச்சர் சமல் ராஜபக்ஷ

அரு ஸ்ரீகலையகம் இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து வழங்கும் 'அபூர்வம்' என்ற நாட்டிய நிகழ்ச்சி எதிர்வரும் 11.12.2021 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு பிஷப் கல்லூரி கலையரங்கில் நடைபெற உள்ளது. அமைச்சர் சமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகவும் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்ளே சிறப்பு விருந்தினராகவும் இந்நிகழ்சியில் கலந்து கொள்கின்றனர். கொவிட் தொற்றை முன்னிட்டு சுகாதார வழிமுறைகளுக்கமைய இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அழைப்பாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் ஆர்வலர்கள் இணைய வழியில் பார்வையிடலாம்.



மூத்த ஒளிபரப்பாளர் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையின் முன்னாள் பணிப்பாளர், அண்மையில் அதி உயர் விருதான 'பிரதிபா பிரணாம' என்ற வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் பல விருதுகளை இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் பெற்றவர் கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன். அவர் வங்கியியல் துறையில் நிபுணத்துவம் பெற்ற பொருளாதார பட்டதாரி என்பதோடு புகழ்பெற்ற இசைக்கலைஞர், இசையமைப்பாளர், நடன இயக்குனர் மற்றும் ஊடக ஆலோசகர் என பல ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டவர். அரு ஸ்ரீகலை அரங்கின் நிறுவனர், இயக்குனர், மற்றும் கட்புல, ஆற்றுகைக் கலைகளுக்கான பல்கலைக்கழகத்தின் இசை விரிவுரையாளர். பல்கலாசார இசை நிகழ்ச்சிகளில் ஆற்றல்மிக்க புத்தாக்க முயற்சிகளுக்காக அவர் நன்கு அறிமுகமானவர்.



பல கலைவிழாக்களில் டொக்டர் அருந்ததி கலை இயக்குநராகப் பணியாற்றியுள்ளார். பல முக்கிய சபைகளின் உறுப்பினராக உள்ளதோடு நோர்வே மற்றும் இலங்கைக்கிடையேயான இசைக் கூட்டுறவின் மூத்த ஆலோசகராக இருந்தவர். இலங்கையில் பல்வேறு சமூகங்களிலிருந்து சிறந்த கலைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களை ஒன்றிணைத்து பொதுவான தளத்துக்கு கொண்டு வருவதற்காகச் செயற்பட்ட முன்னோடி அவர்.

ஆற்றுகைக் கலைகள் எனும் புத்துணர்ச்சியூட்டும் ஊடகத்தின் மூலம் நாட்டின் தேசிய நல்லிணக்க முயற்சிகளுக்கு நிலையான பங்களிப்பினை வழங்கியவர். சிங்கள மாணவர்களுக்கு தென்னிந்திய இசையை (கர்நாடக இசை) கற்பிக்குமாறு கவின்கலைகள் கற்கை நிறுவனம் திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதனுக்கு அழைப்பு விடுத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் இனம், மதம் மற்றும் தேசியம் என வேறுபட்டு நிற்கும் மனிதர்களுக்கிடையில் கலை, இசை மற்றும் கலாசாரம் மூலமே இணைப்பை உருவாக்க முடியும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். கலை மற்றும் கலாசாரம் என்பனவே மக்களிடையே அடையாளம், அங்கீகாரம், பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலை உருவாக்குவதற்கான சிறந்த வழிகளாகும் என்ற சிந்தனை கொண்டவர். கலாசார ரீதியாக வேறுபட்ட சமூகங்களைப் புரிந்து கொள்ளல் மற்றும் பரஸ்பர மரியாதை என்பனவற்றின் மூலம் கலாசார ஒருங்கிணைப்பை ஊக்குவித்து பாகுபாடு மற்றும் இனமோதல்களைத் தவிர்க்கலாம் என்ற எண்ணம் கொண்டவர். இறுதி இலக்கினை கொண்ட உரையாடல் மற்றும் கலாசார பாலங்களை இணைந்து உருவாக்குவது நாம் அனைவரும் ஒன்று என்ற உணர்வை ஏற்படுத்தும் பரஸ்பர மரியாதை மற்றும் கலாசார ரீதியாக வேறுபட்ட சமூகத்தைப் புரிந்து கொள்வதன் மூலம் கலாசார ஒருங்கிணைப்பை ஊக்குவித்து பாகுபாடு மற்றும் இனமோதல்களைத் தவிர்க்கலாம். இன்று இனக்குழுக்களுக்கிடையில் அழகான உறவொன்று மலர்வதில் பாரம்பரிய இசை பங்கு வகிக்கின்றது. கர்நாடக இசையை கற்றுத் தருமாறு கட்புல மற்றும் ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகம் அவருக்கு அழைப்பு விடுத்ததோடு தென்னிந்திய இசைக்கான ஒரு பீடத்தினை உருவாக்குமாறும் வழியுறுத்தியவர். இது நமது பாரம்பரிய இசையினை பகிரவும் ஏனைய கலைகளுடன் இணைக்கவும் மற்றும் அதன் மறுமலர்ச்சிக்கும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது. இலங்கையின் பல இன மற்றும் பல் கலாச்சார அடையாளத்தைப் பேண பல்கலைக்கழகத்தால் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை இதுவாகும்.



# மனித நாகரிகத்தை கேள்விக்குறியாக்கிய மதவாத வெறித்தனம்!


மிருகத்தனத்தின் அதியுச்ச கட்டமென அச்சம்பவத்தை வர்ணிக்க முடியும். நாகரிக சமுதாயம் வெட்கித் தலைகுனிய வேண்டிய செயல் அது. கொடிய மிருகங்களால் மாத்திரமே இவ்வாறான செயல்களை ஈவு இரக்கமின்றி மேற்கொள்ள முடியும். அம்மிருகங்களிடம் மனிதாபிமானத்தை சற்றும் எதிர்பார்க்க முடியாது. அது போன்ற மிருகங்களே அவர்கள்.

இலங்கையரான பிரியந்த தியவதனவை அடித்து தாக்கி உயிருடன் தீவைத்து எரித்த மதவெறி பிடித்த காடையர் கும்பலை சர்வதேச ஊடகங்கள் இவ்வாறுதான் வர்ணிக்கின்றன. மனிதநேயம் மிக்கவர்களை மாத்திரமே மனித குலத்துக்குள் உள்ளடக்க முடியும். இவ்வாறான மதவெறி கொண்ட கும்பல்களை காட்டுமிராண்டிகள் என்றே கூற வேண்டியுள்ளது. அவர்கள் காடுகளில் வாழ்வதற்கே பொருத்தமானவர்கள். மதவாதமும் அடிப்படைவாதமும் மேலோங்கிய அந்த காடையர்கள் மனித சமூகத்துக்கு சற்றும் தகுதியில்லாதவர்களாவர்.

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாநிலத்தின் சியால்கோட் நகரில் பணிபுரிந்து வந்த இலங்கையரான பிரியந்தகுமார தியவதன என்ற பொறியியலாளர் மதவெறி பிடித்த அடிப்படைவாத வன்முறைக் கும்பலால் தாக்கப்பட்டு, எரித்து கொலை செய்யப்பட்ட சம்பவம் இலங்கையில் மாத்திரமன்றி உலகெங்கும் அதிர்வலைகளை உண்டாக்கியுள்ளது.

மனித குலமே வெட்கத்துக்கு உள்ளாகியுள்ளது. இவ்வாறும் மனித உருவில் கொடிய மிருகங்கள் உலகில் நடமாடுகின்றனவா என்றே சொல்லத் தோன்றுகின்றது.

இக்குற்றச் செயலில் ஈடுபட்ட காடையர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை நேர்மையாக மேற்கொள்ளப்படுமா என்பதை இனிமேல்தான் பார்க்க வேண்டும். ஏனென்றால் பாகிஸ்தான் நாட்டில் இதுவரை இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டுள்ளன. இந்துக்கள் தாக்கப்பட்டு விரட்டப்பட்டுள்ளனர்.



**பிரியந்த தியவதனவுக்கு நடந்த கொடுமைக்கு நீதி கிடைக்குமா என்பதை இப்போதைக்கு உறுதிப்படுத்த முடியாது. விசாரணை நகர்வுகளை வைத்தே எதிர்காலத்தில் முடிவுக்கு வர முடியும்**



ஆனால் அந்த மதவெறிக் கும்பல்களுக்கு எதிராக சட்டம் பாய்ந்ததில்லை. எனவேதான் பிரியந்தகுமார தியவதனவின் குரூரக் கொலைக்கும் நீதி கிடைக்குமா என்பது சந்தேகமாக உள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தானில் நூற்றுக்கும் மேலானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்ட பிரியந்த குமார தியவடன கனேமுல்ல நகரின் அருகே உள்ள கெந்தலியத்த பகுதியைச் சேர்ந்தவர். பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட பட்டதாரியான இவர், 2010 ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தானிலுள் தொழிற்சாலையில் பணியாற்றி வந்தார்.

சியால்கோட் நகரில் வாசிராபாத் வீதியில் இலங்கையர் தாக்கி, எரிக்கப்படும் நிகழ்வைக் காட்டுவதாகக் கூறி பல காணொளிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றன.அவற்றைப் பார்க்கும் போது நாம் நாகரிக உலகில் வாழ்கின்றோமா அல்லது காட்டுவாசிகள் நிறைந்த உலகில் வாழ்கின்றோமா என்ற சந்தேகமே எழுகின்றது. இலங்கையரை உயிருடன் எரித்து தீவைத்து விட்டு 'ஷெல்பியும்' எடுத்துக் கொண்டுள்ளனர் மதவெறி பிடித்த கொலையாளிகள். எத்தகைய மிருகத்தனம் இது!

இரண்டு நாட்களில் நூற்றுக்கணக்கானவர்களை பொலசார் கைது செய்துள்ளனர், அவர்களில் மேலும் ஆறு முக்கிய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பஞ்சாப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இதுவரை கைது செய்யப்பட்ட 124 பேரில் 19 பேர் பிரியந்த குமார தியவதன கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதில் முக்கிய பங்கு வகித்தவர்கள் என்று அந்நாட்டு பொலிஸ் அறிக்கை தெரிவித்துள்ளது. மேலும் சில சந்தேக நபர்களை பிடிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சியால்கோட் மாவட்ட பொலிஸ் துறை அதிகாரி உமர் சையத் மாலிக் தெரிவித்துள்ளார். ஆனால் நடவடிக்கைகள் எவ்வாறு நகர்கின்றன என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பர்ஹான் இட்ரிஸ், சூர் பட், தல்ஹா, அப்துல் ரஹ்மான், இம்ரான், தைமூர், ஷோயப், ரஹீல், உஸ்மான், ஷஹைப், நசீர், எஸ்திஷாம் மற்றும் ஜுனைத் ஆகிய வெறியர்கள் முக்கிய சந்தேக நபர்களாவர்.

இதேவேளை பிரியந்த குமார எரித்து கொலை செய்யப்படும் போது அவரது உயிரைக் காப்பாற்ற முயன்ற பாகிஸ்தானியரான மாலிக் அத்னன், பிரதமர் இம்ரான் கானினால் 'துணிச்சலுக்கான விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். அவரது மனிதாபிமான செயலானது முழு பாகிஸ்தானுக்கும் கௌரவத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பிரியந்த குமாரவின் குடும்பத்திற்கு மாத சம்பளத்தை தொடர்ச்சியாக வழங்கவுள்ளதாக பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார். இதற்காக சியல்கோட் நகர வர்த்தக சங்கம் நிதியமொன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த நிதியத்திற்கு இதுவரை ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் சேர்க்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.அந்த முயற்சிகளை பாராட்டாமல் இருக்க முடியாது.



ஆனால் பறிகொடுத்த உயிரை மீளப் பெறுவதற்கு பணமோ அல்லது வேறு உதவிகளோ கைகொடுக்கப் போவதில்லை. இதுஒருபுறமிருக்க, பிரியந்த குமார தியவதனவை கும்பல் கொடூரமாகக் கொன்றது மிகவும் பொதுவான விஷயம் என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் பர்வேஸ் கட்டக் தெரிவித்தமைக்கு பலரும் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

முக்கிய அமைச்சர் ஒருவர் இவ்வாறான பொறுப்பற்ற அபத்தமான கருத்தை ஊடகங்களுக்கு தெரிவித்தமைதான் விசித்திரமாக உள்ளது.

பாகிஸ்தான் ஊடகமான DAWN இந்த கொடூர கொலை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்ட கருத்தை வன்மையாக கண்டித்து ஆசிரிய தலையங்கம் தீட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தானை ஜனநாயகத் தன்மையுள்ள நாடாக கூறி விட முடியாது. மதவாதத்திலும் அடிப்படைவாதத்திலும் ஊறிப் போன குழுக்கள் நிறைந்த நாடு அது. மாற்று மதத்தினருக்கு எதிரான வன்முறைகள் அங்கு அதிகம். இலங்கையர் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தை பார்க்கும் போது அங்கு வாழ்கின்ற வேறு மதத்தினரின் பாதுகாப்பும் தற்போது கேள்விக்குறியாகி உள்ளது.

**பிரதமர் இம்ரான் கானின் நடவடிக்கைகள் பாராட்டக் கூடியன. ஆனால் பாகிஸ்தானில் மாற்று மதத்தினர் மீது கடந்த காலத்தில் கொடுமைகள் இழைத்த வன்முறைக் கும்பல்களுக்கு எதிராக சட்டம் அதன் கடமையை செய்யவில்லை. எனவேதான் பிரியந்த தியவதன விடயத்திலும் நீதி கிடைக்குமா என்பது சந்தேகமாக உள்ளது**

# இந்திய முப்படைத் தளபதி பிபின் ராவத் நேற்று ஹெலிகொப்டர் விபத்தில் பலி!

## உடன் பயணம் செய்த மனைவி, குடும்பத்தினர் மற்றும் இராணுவ அதிகாரிகள் உட்பட 14 பேர் உடல் கருகி மரணம்!



இந்திய முப்படைகளின் தளபதி ஜெனரல் பிபின் ராவத் நேற்று இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் கொல்லப்பட்டார். அவருடன் பயணம் செய்த அவரது குடும்பத்தினர் சிலரும், இராணுவ அதிகாரிகளும் இவ்விபத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டின் கோவையில் இருந்து சென்ற ஹெலிகொப்டர் குன்னூர் மலைப்பாதையிலுள்ள காட்டேரி, நஞ்சப்பா சத்திரம் எனும் பள்ளத்தாக்குக்கு மேலே பறந்த போது கடும் மேகமூட்டமான காலநிலை நிலவியது. இதனால் ஏற்பட்ட காலநிலை குழப்பம் காரணமாக, ஹெலிகொப்டர் கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதி விழுந்து எரிந்தது.

இதில் பயணித்த முப்படைத்தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் இராணுவ அதிகாரிகள் இவ்விபத்தில் உயிரிழந்துள்ளனர். இவர்களின் உடல்கள் உள்பட 10 பேரின் சடலங்கள் நேற்று மாலை வரை மீட்கப்பட்டுள்ளன. ஒருவர் உயிருக்குப் போராடிய நிலையில் மீட்கப்பட்டு குன்னூர் இராணுவ மருத்துவ நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். மீட்கும் பணி நேற்று தீவிரமாக நடைபெற்றது.

விபத்துக்குள்ளான எம். ஐ17வி_5 ரக ஹெலிகொப்டர் குறைந்த தொலைவில் வீரர்களையும் ஆயுதங்களையும் ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்டது. இதில் 36 பேர் வரை பயணிக்கலாம். ரஷ்யாவில் வடிவமைக்கப்பட்ட இந்த ஹெலிகொப்டர் 4 தொன் எடை வரையிலான சரக்குகளை கையாளும் திறன் கொண்டதாகும். இந்த எம்ஐ17வி5 ரக ஹெலிகொப்டர் மணிக்கு 260 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கக் கூடியது. தேடுதல் மற்றும் மீட்பு பணிக்காகவும் இந்த ஹெலிகொப்டர் பயன்படுத்தப்படுகிறது. ஹெலிகொப்டர் விபத்து குறித்து தகவல் அறிந்தவுடன் மத்திய அமைச்சரவை அவசர ஆலோசனை நடத்தியது. அப்போது இந்த விபத்து குறித்து பிரதமரிடம் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் விளக்கமளித்தார்.

கோவையை அடுத்த சூலூர் விமானப் படைத்தன தளத்திலிருந்து நேற்றுக் காலை 11.47 மணிக்கு புறப்பட்ட ஹெலிகொப்டர் குன்னூர் அருகேயுள்ள காட்டேரி பகுதியில் 12.20 அளவில் விழுந்து நொருங்கியது.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரில் பிபின் ராவத், அவரது மனைவி மதுலிக்கா ராவத் உட்பட 14 பேர் பயணம் செய்துள்ளனர்.

விபத்து நடந்த பகுதி குன்னூர் அருகே காட்டேரி எனப்படும் மலைப் பகுதியாகும்.. இங்கு மஞ்சபாசத்திரம் என்ற இடம் உள்ளது. இங்கு தேயிலைத் தோட்டங்கள் நிறைந்து காணப்படும். இங்கு வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்காகவே அரசு தனியாக வீடுகள் கட்டித் தரும். தோட்டங்களை ஒட்டிய பகுதிகளில் இந்த வீடு கட்டப்பட்டிருக்கும். இதை தொகுப்பு வீடுகள் என்பார்கள். 2 அறைகள்தான் இந்த வீடுகளில் கட்டப்பட்டிருக்கும். இப்படி இந்த பகுதியில் 51 வீடுகள் இருக்கின்றன.

இவர்கள் இங்கேயே தங்கி சுற்றுவட்டார தோட்டங்களில் வேலை பார்த்து வருவார்கள். நேற்றும் அப்படித்தான், காலையிலேயே தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்துள்ளனர். அப்போது 11.20 மணிக்கு பயங்கர சத்தம் ஒன்று காட்டுப் பகுதியில் கேட்டுள்ளது. தோட்டத்தை ஒட்டியுள்ள இந்த காட்டுப் பகுதிக்கு ஓடிச் சென்று பார்த்த போது ஓங்கிஉயர்ந்து காணப்படும் 2 கற்பூர மரங்கள் எரிந்து முறிந்து விழுவதை பார்த்துள்ளனர்.

முற்றிலும் தீப்பிடித்து அந்த மரங்கள் எரியும் போதே, அந்தப் பகுதியை சுற்றிலும் கரும்புகை சூழ்ந்து கொள்ள ஆரம்பித்து விட்டது. இதை பார்த்ததும் அந்த தொழிலாளர்கள் அலறி அடித்து ஓடியுள்ளனர். ஆனால், ஆரம்பத்தில் இவர்களுக்கு ஹெலிகொப்டர் விபத்து நடந்தது என்றே தெரியாது. விபத்து நடந்த பகுதியில்தான் இவர்களின் வீடுகள் உள்ளன. அவர்கள் உயிரை கையில் பிடித்து கொண்டு, வீடுகளுக்குள் ஓடி வந்து தஞ்சம் புகுந்துள்ளனர்.

அப்போதுதான் விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரின் 2 டயர்களின் சக்கரங்கள் மற்றும் ஹெலிகொப்டரின் பின்பக்க பகுதியும், அந்த வீடுகளின் வாசலுக்கு அருகிலேயே விழுந்து கிடப்பதை பார்த்துள்ளனர்.

இந்த தொகுப்பு வீடுகளின் கடைசி வீட்டை ஒட்டியே இந்த காட்டுப் பகுதி ஆரம்பிக்கிறது. அதனால், இந்த கடைசி வீடு கடுமையான பாதிப்புக்குள்ளாகி உள்ளது. இவை அனைத்துமே ஓடு வீடுகள் என்பதாலும், முற்றிலும் சீமெந்தினால் கட்டப்பட்டுள்ளதாலும், வீடுகள் முழுக்க கரி படிந்து விட்டன.

அந்த வீட்டின் மின்விசிறி இறக்கை ஒன்று கழன்று கீழே விழுந்துள்ளது.

விபத்து நடந்த அடுத்த சில நிமிடங்களிலேயே அந்த பகுதியில் புகை மண்டலம் சூழ ஆரம்பித்து விட்டது. உடனடியாக அந்தப் பகுதிகள் அனைத்தும் இராணுவ கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு விட்டன.

பொதுமக்கள் உட்பட யாரையுமே அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு நெருங்க விடவில்லை. நீலகிரியில் தற்போது பனிக்காலம் என்பதால் காலையில் இருந்தே அடர் பனி மூட்டம் காணப்பட்டது. இந்த காலநிலையால்தான், இராணுவ ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.ஊட்டியில் இருந்து 25 கி.மீ. தொலைவில் காட்டேரி மலைமுகட்டில் மஞ்சப்பா சத்திரம் உள்ளது. அங்குதான் விபத்து நடந்துள்ளது. நீலகிரியில் ஹெலிகொப்டர் விபத்து நிகழ்ந்த இடத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை சென்றார்.

தமிழகத்தின் குன்னூர் ஊட்டி இடையே மலைப்பகுதியில் பறந்து கொண்டிருந்த போது அந்த இராணுவ ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானது.



திருச்சி ஷாகுல் ஹமீது

## தமிழ்நாடு கோவை மாவட்டத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற போது காட்டுப் பகுதியில் நடந்த பயங்கரம்!



## மலைப் பிரதேச காட்டின் மேலாக பறந்து கொண்டிருக்கையில், கடுமையான மேகமூட்டம்; மரத்தில் ஹெலி வீழ்ந்ததும் எங்கும் ஒரே புகைமண்டலம்!



# நீண்ட கால சர்ச்சைகளின் பின்னர் 2019 இல் உருவாக்கப்பட்ட பதவி!



இந்திய இராணுவத்தில் அதிகாரபூர்வமாக முதன் முறையாக முப்படைகளின் தலைமை தளபதியாக 2019 இல் பதவி ஏற்றவர் ஜெனரல் பிபின் ராவத். இந்திய ராணுவத்தில் முப்படைகளுக்கும் தனித்தனியே தலைமைத் தளபதிகள் உள்ளனர்.

கார்கில் யுத்த காலம் முதல் 1999 ஆம் ஆண்டு கார்கில் யுத்த காலத்தில்தான் முப்படைகளுக்குமான தலைமைத் தளபதி குறித்த யோசனை முன்வைக்கப்பட்டது. இந்த முப்படைகளுக்கும் சேர்த்து தலைமைத் தளபதி ஒருவரை நியமிப்பது தொடர்பாக நீண்ட காலமாக மத்திய அரசு ஆலோசித்து வந்தது. ஆனால் பல்வேறு காரணங்களால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்தது.

## முதலாவதாக நியமனமானவர் ஜெனரல் பிபின் ராவத்

2001 ஆம் ஆண்டு அமைச்சரவை குழு இது தொடர்பாக அதிகாரப்பூர்வமாக பரிந்துரைத்தது. பின்னர் நரேஷ் சந்திரா கமிட்டி, லெப்.ஜெனரல் ஷெகாத்கர் கமிட்டி ஆகியவையும் முப்படைகளுக்குமான தலைமைத் தளபதி குறித்து பரிந்துரைகள் வழங்கியது. 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, முப்படைகளுக்குமான தலைமை தளபதி நியமிக்கப்படுவது தொடர்பாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

பின்னர் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி இப்பதவி அதிகாரபூர்வமாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவை கமிட்டியால் உருவாக்கப்பட்டது. அப்போது இராணுவ தளபதியாக இருந்து ஓய்வு பெற இருந்தார் பிபின் ராவத். இந்த நிலையில் நாட்டின் முதலாவது முப்படைகளின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றார் பிபின் ராவத்.

முப்படைகளுக்கான தலைமைத் தளபதியாக பிபின் ராவத் நியமிக்கப்பட்டிருந்தாலும் இராணுவத்தினருக்கு அவரால் உத்தரவு பிறப்பிக்க இயலாது. ஆனால் முப்படைத் தளபதிகளிடம் அரசின் முடிவுகளை தெரிவித்து அவற்றை செயல்படுத்துகின்ற ஒருங்கிணைப்பாளராக பணியாற்றினார்.

அதேபோல் ஆயுத கொள்முதல், முப்படைகளின் கூட்டு நடவடிக்கை உள்ளிட்டவைகளையும் ஒருங்கிணைக்கும் பணியை முப்படைகளுக்குமான தலைமைத் தளபதி பிபின் ராவத் மேற்கொண்டு வந்தார். இந்திய இராணுவத்தில் முதன் முறையாக 2019 ஆம் ஆண்டுதான் இப்பதவி உருவாக்கப்பட்டது. ஆனால் முப்படைகளின் தலைமை பதவியால் சர்ச்சை நிலவியது. முன்னதாக 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடனான யுத்த காலத்தின் போதும் இப்படியான யோசனை முன்வைக்கப்பட்டது. ஆனால் அப்போதைய விமானப் படை தளபதி பிரதாப் சந்திர லால், அப்படியான ஒரு பதவியை உருவாக்கினால் ராஜினாமா செய்வேன் என மிரட்டல் விடுத்தார்.அதேபோல் 2001 ஆம் ஆண்டு கடற்படைத் தளபதியாக இருந்த சுஷில்குமாரை முப்படைகளின் தலைமை தளபதியாக நியமிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கும் எதிர்ப்பு எழுந்ததால் இம்முயற்சிகள் கைவிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# 'உடலில் தீப்பிடித்தவாறு சிலர் ஹெலியிலிருந்து வீழ்ந்தனர்'

குன்னூரில் ஹெலிகொப்டர் விபத்து நடந்த பகுதி முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. ஹெலிகொப்டர் விபத்தில் நேற்று மாலை வரை 11 பேரின் உடல் மீட்கப்பட்டுள்ளன. மேலும் 3 பேரை மீட்கும் பணிகள் நடைபெற்றன.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரில் பிபின் ராவத், அவரது மனைவி உட்பட 14 பேர் பயணம் செய்துள்ளனர். ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியதில் 7 இராணுவ அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இந்த விபத்தை நேரில் பார்த்த பெண் ஒருவர் பேசும் போது கூறியதாவது:

"இந்த பகுதிக்கு பெயர் நஞ்சப்ப சத்திரம். இங்கு 55 குடும்பங்கள் வசித்து வருகிறோம். காலையில் பயங்கர சத்தத்துடன் ஹெலிகொப்டர் டமார் என்று வெடித்துவிட்டது.. அதில் 14 பேர் பயணம் செய்திருக்காங்க 11 பேரை தேடி கண்டுபிடித்து எடுத்துட்டாங்க. 3 பேரை காணோம் என்று தேடி கொண்டிருக்கிறார்கள். அவங்களையும் கண்டுபிடித்து விடுவார்கள் என்று நம்பி கொண்டிருக்கிறோம். இந்த பகுதியே பரபரப்பாக இருக்கிறது" என்றார்.



## சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் விபரிப்பு

கிருஷ்ணசாமி என்பவர் அந்த அனுபவத்தை நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஹெலிகொப்டர் வந்தபோது திடீரென பெரிய சத்தம் கேட்டது. அந்த சத்தம் வந்தபோது நான் எட்டி பார்த்தேன். அது கீழே உள்ள மரத்தில் மோதியது. மோதும் போது அது சுற்றிலும் நெருப்பு காணப்பட்டது. அங்குள்ள ஒரு பெரிய மரத்தில் அந்த ஹெலிகொப்டர் மோதியது.

பிறகு அந்த இடத்திலிருந்து பெரும் புகை கிளம்பியது. பயந்து போன உள்ளூர்வாசி இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த நான், பக்கத்து வீட்டுப் பையனை கூப்பிட்டேன். அவர் ஓடி வந்து பார்த்து,பொலிசுக்கும், தீயணைப்பு படையினருக்கும் தகவல் சொன்னார்.

நான் பார்க்கும் போது ஹெலிகொப்டரில் இருந்த ஒருவர் எரிந்தபடி அப்படியே சாய்ந்தார். மற்றவர்கள் ஹெலிகொப்டர் கீழே விழும் போது கீழே விழுந்தார்கள்.

உடலில் தீப்பிடித்து எரிந்த நிலையில் அவர்கள் அப்படியே கீழே விழுந்ததை பார்த்தேன். அதற்கு மேலும் அதை என்னால் பார்க்க முடியவில்லை. பயத்தில் ஓடி வந்து விட்டேன்.

இவ்வாறு கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

## அரச இரசாயன பகுப்பாய்வு...

ஒத்துழைப்பு பிரதி நிறுவனம், நீதி அமைச்சு மற்றும் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு இடையே கைச்சாத்திடும் நிகழ்வு நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். யூ .எம் அலிசப்ரியின் தலைமையில் நேற்று (08) நீதி அமைச்சில் நடைபெற்றது.

4 மில்லியன் அமெரிக்க டொலர் கொரிய குடியரசின் உதவியின் கீழ்(Grand Aid) செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் ஊடாக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் போதைப்பொருள் மற்றும் நீதிமன்ற தடயவியல் ஆய்வுக்கூட பரிசோதனை உபகரணங்களை மேம்படுத்தவும், போதைப்பொருள் மற்றும் நீதிமன்ற தடயவியல் அறிவியல் தொடர்பாக பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கவும் மற்றும் ஆய்வுகூட தகவல்களை முகாமைப்படுத்தும் தொகுதி ஒன்றை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதன் பின்னர் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் போதைப்பொருள் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறன் அதிகரிக்கப்பட்டு சரியான நேரத்துக்கு நம்பிக்கையான அறிக்கைகளை பெற்றுக்கொடுக்க முடியும்.

## சேதனப் பசளை உற்பத்தி...

வைத்தியர் அமல் ஹர்ஷ த சில்வா மற்றும் வழிகாட்டலில் ஸ்ரீ லங்கா ஹதபிம அதிகார சபையின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்

இதன்போது தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் சேதனப் பசளை உற்பத்தி திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இருப்பதாக இங்கு கலந்துரையாடப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 6,303 விவசாயிகளுக்கு உபகரணங்கள் எதிர்வரும் நாட்களில் வழங்கப்பட உள்ளது. இவ் வேலைத் திட்டத்தில் கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் 405 விவசாயிகளுக்கும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு 499 விவசாயிகளுக்கும் மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 429 விவசாயிகளுக்கும் கோரளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 1,108 விவசாயிகளுக்கும், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 641 விவசாயிகளுக்குமாக முதற்கட்டமாக 3,801 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்தென இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

## மூன்று சந்தேக நபர்களுக்கும்...

பாதை பாவிப்பதற்கு அனுமதி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கு இன்று (09) அழைக்கப்பட உள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## பிம்ஸ்டெக் செயலாளர்

மிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொவிட்19 தொற்றுப் பரவல் நிலைமை காரணமாகக் குறிப்பிட்ட தினத்தில் நடத்துவதற்கு முடியாமல் போன ஐந்தாவது பிம்ஸ்டெக் மாநாட்டை, எதிர்வரும் வருடத்தின் முதல் காலாண்டில் நடத்த முடியுமாகுமென்று, ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, பிம்ஸ்டெக் செயலகத்தின் பணிப்பாளர்களான ஹூசைன் முஷாரஃப் (Hossain Mosharaf), மஹிசினி கொலொன்னே (Mahishini Colonne) ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் இணைந்துகொண்டிருந்தனர்.

## 2020இல் நினைவுதினம்...

பூக்களைத் தூவி, அஞ்சலி செலுத்தி அதனைப் படம் எடுத்து முகநூலில் பதிவு செய்தனர்.

அவர்களைப் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கல்குடா பொலிஸார் கைது செய்தனர். இது தொடர்பான வழக்கு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது. வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.பசீல் முன்னிலையில் இவ் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஸ் விண்ணப்பித்த பிணை மனுவின் அடிப்படையில் 10 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

## ஓமந்தையில் 100 Kg...

பிரதேசங்களைச் சேர்ந்தவர்களெனவும் ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## உரிய தீர்வைப்...

கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன. நீண்டகாலம் அவை துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதால் பொருட்கள் பழுதடையும் நிலை ஏற்படலாம் அவற்றை விடுவிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமையல் Gas வெடிப்பினால்...

திடீரென அதிகரித்துள்ள உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் விசாரணையை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சாந்த வல்பொல தலைமையிலான எட்டு பேர் கொண்ட நிபுணர் குழு தனது அறிக்கையை ஒரு வார காலத்துக்குள் வெளியிடவுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக தெளிவான திட்டமொன்று உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அரசுக்கு எதிராக நேற்று...

அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இலங்கை மின்சாரசபை ஐக்கிய தொழிற்சங்க கூட்டணி இந்த போராட்டத்தை முன்னெடுத்தது.

## LP Gas சிலிண்டர்களை...

முன்னர் விநியோகிக்கப்பட்ட அனைத்து சீல் செய்யப்பட்ட (பயன்படுத்தப்படாத) எரிவாயு சிலிண்டர்களையும் திரும்பப் பெறுமாறு நுகர்வோர்விவகாரஅதிகாரசபை, லிற்றோ நிறுவனத்திற்கு அறிவுறுத்தியுள்ளது. இந்நிலையிலேயே லிற்றோ நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மேற்படி, திகதிக்கு முன்னதாக விநியோகிக்கப்பட்ட முத்திரை அகற்றப்படாத லிற்றோ சமையல் எரிவாயு கொள்கலன்கள் இவ்வாறு மீளப் பெற்றுக்கொள்ளப்படுமென லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

## 10 இலட்சத்தை கடந்த...

ஏற்பட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், 40 ஆயிரத்து 347 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் நேற்றுமுன்தினம் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு கூறியுள்ளது.

## ஐந்து அடி இரும்பு கொக்கியை...

கொக்கி வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளது.

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவின் துறைசார் நிபுணர்களான ரசிக்க பத்திரன மற்றும் பாலித்த படடுவ ஆகியோரால் அவ் இரும்பு கொக்கி அகற்றப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டவர் 40 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயென தெரியவந்துள்ளது. இந்த பெண்ணின் கணவர், மீன்பிடிக்க பயன்படுத்தப்படும் இரும்பு கொக்கியால் பெண்ணை குத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் குத்திய கொக்கியுடன் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார். இதன்போது வைத்தியர்கள் இருவரால் ஒன்றரை மணி நேர சத்திரசிகிச்சையின் பின்னர் 05 அடி நீளமான இரும்பு கொக்கி அகற்றப்பட்டு பெண் காப்பாற்றப்பட்டுள்ளார்.

தற்போது அந்த பெண் மிகவும் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாக வைத்தியர் தெரிவித்துள்ளார். வீட்டில் கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட குடும்ப தகராறு காரணமாக கணவர் இந்த செயலை செய்துள்ளார்.

எனினும் அதிஷ்டவசமாக அந்த பெண்ணின் கை நரம்பு அல்லது எலும்புக்கு சேதம் ஏற்படாத வகையில் 05 அடி கொக்கி இறங்கியுள்ளது. இதனால் உயிருக்கு ஆபத்தின்றி அந்த பெண் காப்பாற்றப்பட்டுள்ளாரென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

## சிவகரனிடம் TID...

கொழும்பு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் அறிவுறுத்தலுக்கமைவாக வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனை மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் செவ்வாய் கிழமை (07) விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இவ் விசாரணையின்போது, கடந்த கால சிவில் சமூக செயற்பாடுகள் நடாத்திய நிகழ்வுகள் தொடர்பாகவும் குறிப்பாக மாவீரர் தின நிகழ்வுகள் சம்பந்தமாகவும் பல்வேறு கோணத்தில் கேள்விகள் தொடுத்ததாகவும் தெரிவித்தார்.

எம்மை சிவில் சமூக செயற்பாடுகளில் இருந்து விலக்கி, எமது சனநாயக குரல்வளையை நசுக்கும் விதமாகவே அவர்களின் கேள்விகள் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சிவில் அமைப்புக்களை வலுப்படுத்த வேண்டும் என்று சர்வதேச அரங்கில் ஜனாதிபதி கூறுகிறார், ஆனால் மறுபுறத்தில் சிவில் அமைப்புக்களை நசுக்க முனைகிறது அரசின் புலனாய்வு அமைப்புகள். அரசின் இவ்வாறான நெருக்கடிகளைச் கண்டு நாம் அச்சப்படப்போவதில்லை. இவ்விதமான விசாரணைகள் எமக்கு புதியவை அல்ல. எனவே எமது சமூகபணி தொடரும். சிவில் சமூக அமைப்புக்களை இலங்கை அரசு தொடர்ந்து நசுக்க முனைவது வேதனைக்குரிய விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

## இலங்கை – போலந்துக்கான...

சேவைகள் நேற்று புதன்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, போலந்துக்கும் இலங்கைக்குமிடையிலான நேரடி விமான சேவையை Lot Polish Airlines நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

அதன்படி Lot Polish Airlines, திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமைகளில் நாட்டுக்கு வரவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் இலங்கைக்கான போலந்து தூதுவர் பேராசிரியர் ஆடம் பரகூஸ்கிக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே நேரடி விமான சேவையை ஆரம்பிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கைக்கான சேவைகளை நிறுத்தியிருந்த பல விமான சேவைகளும் மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகளில் கொவிட்...

பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் கொவிட் பரவல் அதிகரித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பாடசாலை கட்டமைப்புக்குள் நிர்வாகப் பிரிவினர் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும்பாலானோர் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். இதனால் சில இடங்களில் கொவிட் கொத்தணிகளும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு அதிகரித்துவரும் கொவிட் தொற்று பவலைக் கட்டுப்படுத்த வேண்டிய முழு பொறுப்பும் பாடசாலை நிர்வாகப் பிரிவினருடையதாகும். அதேபோன்று மாணவர்களும் , பெற்றோருக்கும் இந்த பொறுப்பு காணப்படுகிறது.

சுகாதார விதிமுறைகள் அனைத்தையும் முறையாகப் பின்பற்றுமாறு பெற்றோர் தமது பிள்ளைகளை தொடர்ந்தும் அறிவுறுத்த வேண்டும். குறிப்பாக பாடசாலைகளுக்குள் சுகாதார விதிமுறைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீற வேண்டாம் என்று அறிவுறுத்துவது அத்தியாவசியமானதாகும் என்றார்.

## அறிக்கையை சமர்ப்பிக்குமாறு...

நேற்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் விஜித மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்கண்ட உத்தரவு சட்ட மாஅதிபருக்கு பிறப்பிக்கப்பட்டது. அதேநேரம் இம் மனு மீதான பரிசீலனையை மீண்டும் 2022 ஜனவரி 27 ஆம் எடுத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

## ஒரே குடும்பத்தை சேர்ந்த...

பகுதியில் புதிய வீடமைப்பு திட்டத்தில் வசித்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

எஸ்.பிரான்சிஸ் (70) (தந்தை), பி.கமலாவதி (65) (தாய்), பிரான்சிஸ் குமார்ராஜ் (40) (மகன்) ஆகியோரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ரொசெல்ல மற்றும் வட்டவளை ரயில் நிலையங்களுக்கு இடையில் 103 மைல் கல் பகுதியில் முற்பகல் 11.45 அளவில் மூவரும் ரயிலில் மோதுண்டுள்ளனர்.

இம் மூவரும் உயிரிழப்பதற்கு முன்னர், ரொசல்ல ரயில் நிலையத்தில் பணியாற்றும் ஒருவரிடம், ரயில் வரும் நேரம் குறித்து வினவி விட்டு, ரொசல்ல ரயில் நிலையத்திலிருந்து வட்டவளை ரயில் நிலையம் நோக்கி நடந்து சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் உயிர்ழந்த மூவரின் சடலங்களும் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டவலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சம்பந்தப்பட்டோருக்கு எதிராக சட்ட...

நடவடிக்கைகளை வரவேற்பதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வர்த்தக அமைச்சு, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களின் வரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேக்கர,

மூடப்பட்டுள்ள நெசவுக் கைத்தொழில் நிலையங்களை திறப்பதற்கும் அவற்றுக்கான உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். பத்திக் தொழில்துறையை முன்னேற்றுவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று மாதங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் வடக்கு,கிழக்கில் நெசவுக் கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்கான பல்வேறு செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. வடக்கில் பயிற்சி நிலையங்களை உருவாக்கவும் தற்போது இயங்கும் பயிற்சி நிலையங்களை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அவற்றுக்காக 45 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை,வடக்கில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அங்கு விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேக்கர மேலும் தெரிவித்தார்.

## சபையில் இடம்பெற்ற மோதல்...

நீதிமன்றத்தின் ஊடாக தண்டனை வழங்கக் கூடிய குற்றமாகும். இது தொடர்பில் உரிய நடவடிக்கை இன்றேல் உச்ச நீதிமன்றத்திற்கு செல்ல நேரிடுமென எதிர்தரப்பு பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபாநாயகரின் அறிவிப்பை தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எம்.பிக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தது தொடர்பாக நன்றி தெரிவிக்கிறேன். குழுவொன்றை நியமித்துள்ளீர்கள். குழுவிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதை தெளிவுபடுத்தவில்லை. நீங்கள் கண்டது என்ன என்பதை பற்றி இது வரை எதுவும் அறிவிக்கவில்லை. எமது சிறப்புரிமை சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குள் வைத்து எம்.பியின் செயற்பாட்டிற்காக தாக்குவது, அவமதிப்பது, வேண்டுமென்றே இடையூறு செய்வது உச்ச நீதிமன்றத்தின் ஊடாக தண்டனை வழங்கக் கூடிய குற்றமாகும். இந்தப் பிரச்சினையை பாராளுமன்றத்திற்கு வெளியில் கொண்டு செல்ல நாம் விரும்பவில்லை. உரிய நடவடிக்கை இன்றேல் உச்ச நீதிமன்றத்திற்கு செல்ல நேரிடும் என்றார்.

சரத் பொன்சேக்கா எம்.பி(ஐ.ம.ச) கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த சபையிலும் கடந்த சபையிலும் நடந்ததை அனைவரும் அறிவோம். எனவே தொடர்ந்து மாறி மாறி பேசி சேறுபூசிக் கொள்வதில் பயனில்லை. எதிர்காலத்தில் சகலரது ஒத்துழைப்புடன் செயற்பட்டு இனியும் இவ்வாறு நடக்காதிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறுக்கீடு செய்து கருத்துத் தெரிவித்தார்.

எம்.பியின் சட்டபூர்வ செயற்பாடு தொடர்பிலே நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

ரஞ்சித் மத்தும பண்டார (ஐ.ம.ச) கருத்துத் தெரிவிக்கையில்

பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் வெளியில் நல்லபிப்பிராயம் கிடையாது. அந்த நிலைமையை அனைவரும் இணைந்து மாற்ற வேண்டும். விவாதிக்கவே பாராளுமன்றம் வருகிறோம். தவறாக பேசினால் மன்னிப்புக் கோருகிறோம். அதற்காக தாக்க முயல்வதை ஏற்க முடியாது. பாராளுமன்றம் கௌரவமாக இடமாக மாற்றப்பட வேண்டும் என்றார்.

## பிரித்தானியாவுடன் பாதுகாப்பு...

ஜெனரல் கமல் குனரட்ண உறுதியளித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்தில் பாதுகாப்பு ஆலோசகராக கடமையாற்றி தனது பதவிக் காலத்தை நிறைவு செய்து நாடு திரும்பவுள்ள கேர்ணல் டேவிட் அஷ்மான், பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ணவை சந்தித்தார். இதன் போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு (08)செவ்வாய் கிழமை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றதோடு இதில் , புதிய பாதுகாப்பு ஆலோசகராக பொறுப்பேற்கவுள்ள கேர்ணல் போல் கிளேட்டனும் கலந்து கொண்டார்.

இந்த சந்திப்பின் போது, இலங்கையில் தான் கடமையாற்றிய காலத்தில் பாதுகாப்பு அமைச்சு வழங்கிய ஒத்துழைப்புக்காக கேர்ணல் அஷ்மான் பாதுகாப்பு செயலாளருக்கு நன்றி தெரிவித்தார். பதவிக் காலத்தை நிறைவு செய்து நாடு திரும்பவுள்ள பாதுகாப்பு ஆலோசகரின் சேவையை, பாதுகாப்பு செயலாளர் பாராட்டியதுடன், அவரது எதிர்கால செயற்பாடுகள் வெற்றிகரமாக அமைய வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இதேவேளை, இரு நாடுகளுக்குமிடையே நிலவும் பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த தனது முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தொடர்ந்தும் வழங்குவதாக உறுதியளித்த பாதுகாப்பு செயலாளர், புதிய பாதுகாப்பு ஆலோசகராக பொறுப்பேற்கவுள்ள கேர்ணல் கிளேட்டனுக்கும் வாழ்த்துகளை தெரிவித்தார்.

பதவிக் காலத்தை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பவுள்ள பாதுகாப்பு ஆலோசகருக்கு அவரின் சேவையைப் பாராட்டும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்றையும் பாதுகாப்பு செயலாளர் இந்த சந்திப்பின் போது வழங்கினார்.

## சபாநாயகரால் 11 பேர்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் பிரதிசபாநாயகர் தலைமையில் 11 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக தெரிவித்த சபாநாயகர், சபைக்குள் நடைபெறும் விடயங்களை வெளியில் கொண்டுசெல்லாமல் இங்கே தீர்க்க வேண்டுமெனவும் அவற்றை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல சட்டத்தில் இடமில்லையெனவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று கூடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த இரு தினங்களாக சபை நடவடிக்கைகளை பகிஷ்கரித்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் நேற்று சபைக்கு பிரசன்னமாகியிருந்தனர். இந்த நிலையில் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்ட சபாநாயகர், கடந்த 03 மற்றும் 04 ஆம் திகதிகளில் நடந்த சம்பவம் தொடர்பாக ஆராயவும் அவை தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவம் நடக்காதிருக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பரிந்துரை செய்வதற்காக பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் தலைமையில் விசேட குழுவொன்றை நியமித்துள்ளேன். இந்தக் குழுவில் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த், பாராளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், அநுர பிரியதர்சன யாப்பா, ரஞ்சித் மத்தும பண்டார, விஜித்த ஹேரத் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

07 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று என்னை சந்தித்து பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்காக தங்களுக்கு பாதுகாப்பு அளிக்குமாறு விசேட கோரிக்கை முன்வைத்தனர். சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சபாநாயகர் என்ற வகையில் எனக்கு பொறுப்புள்ளது என்பதை ஏற்கிறேன்.

\சகல எம்.பிக்களுக்கும் பாதுகாப்பு வழங்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துள்ளேன். கடந்த தினங்களில் நடந்த சம்பவங்கள் மீண்டும் நடக்காதிருக்கும் வகையில் எம்.பிக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதோடு உரையாற்றுகையில் ஆக்ரோஷமாக ஏனைய எம்.பிக்களை தனிப்பட்ட ரீதியில் அவமதிக்கும் வகையில் பேசுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். இதனை கடுமையாக பின்பற்றுமாறு கோருகிறேன் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

அனைத்து பொறுப்புகளையும் அந்தக் குழுவுக்கு வழங்கியுள்ளேன். நடந்த சம்பவங்கள் குறித்து கவலையடைகிறேன்.

பாராளுமன்றத்திற்குள் நடப்பவற்றை பாராளுமன்றத்துக்கு வெளியில் எடுத்துச் செல்ல எதிர்பார்க்கவில்லை. நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்கு சட்டத்தில் இடமில்லை. அதற்கான தேவையும் கிடையாது, சபையில் நடக்கும் அனைத்து விடயங்களையும் சபைக்குள்ளே தீர்க்க வேண்டும். சிரேஷ்ட எம்.பிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இந்திய முப்படை தளபதி...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோவை, சூலூர் விமானப் படை தளத்திலிருந்து நேற்று பிற்பகல் நீலகிரி மாவட்டத்தில் உள்ள வெலிங்டன் மையத்துக்கு புறப்பட்டுச் சென்ற இராணுவ ஹெலிகொப்டர் கட்டுப்பாட்டை இழந்து காட்டேரி மலைப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது ஹெலிகொப்டரில் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 14 பேர் பயணம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் ஏழு பேர் உயிரிழந்துள்ள நிலையில், ஐவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஏனையவர்கள் குறித்த விபரங்கள் வெளியாகவில்லை. உடல்கள் தீயில் கருகியுள்ளதால் உயிரிழந்தவர்களை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹெலிகொப்டரில் இந்திய முப்படைகளின் தலைமை தளபதி பிபின்ராவத்தும் பயணம் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அவர் குறித்த தகவல்கள் நேற்று வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வாழைச்சேனை மீனவர்கள்...

உறவினர்கள் மற்றும் படகு உரிமையாளர்கள் நேற்று மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து அது தொடர்பாக கலந்துரையாடினர்.

கடந்த 26 ஆம் திகதி செப்டெம்பர் மாதம் வாழைச்சேனையிலிருந்து கடலுக்குச் சென்ற நான்கு கடற்றொழிலாளர்கள் காணாமல் போயிருந்தனர்.

இவர்கள் அந்தமான் தீவுப் பகுதியில் இந்தியப் கடற்படையினரால் மீட்கப்பட்டு தற்போது சென்னையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சிகளையடுத்து இந்திய சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் எதிர்வரும் 14 ஆம் திகதி இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

நான்கு மீனவர்களையும் அவர்களது படகையும் நாட்டிற்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவே நேற்றைய சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை, புத்தளம் கற்பிட்டிப் பிரதேசத்தில் சுருக்குவலை தொழிலில் ஈடுபடுபவர்களுக்கான அனுமதியை வழங்குமாறு பிரதேச மீனவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின்படி கற்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 53 பேருக்கு சுருக்கு வலை அனுமதி வழங்கப்பட்டு வருவதாகவும், அதைவிட சுமார் 120 பேர் சுருக்கு வலைக்கான அனுமதிகளை வழங்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

மீன்பிடித் தொழில் முறைகள் தொடர்பாக புதிய ஒழுங்கு விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அதுவரையில் தொழிலில் ஈடுபடுவது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆராய்ந்த பின்னர் முடிவை தெரிவிப்பதாகவும் கடற்றொழில்அமைச்சர்தெரிவித்துள்ளார்.

# தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு உறுப்பினர் நியமனங்கள் தாமதம்

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு உறுப்பினர் நியமன தாமதங்கள் தொடர்பில் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம் கவனம் செலுத்துகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மேற்பார்வை மற்றும் மேன்முறையீட்டு அமைப்பான தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவானது நாட்டின் மிக முக்கியமான சுதந்திரமாக செயற்படக்கூடிய பொது நிறுவனங்களில் ஒன்றாக காணப்படுகிறது. இந்த ஆணைக்குழுவானது மேன்முறையீட்டுடன் தொடர்புடைய விடயங்களை விசாரணை செய்தல், மீள் திருத்தங்களுக்கான பரிந்துரைகளை வழங்குதல், தாமாக வெளிப்படுத்தும் தகவல்கள் மற்றும் அறிக்கையிடல், பதிவு முகாமைத்துவம் குறித்து வழிகாட்டல்களை வழங்குதல், குற்றம் செய்ததாக கூறப்படும் விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அது தொடர்பில் வழக்கு தொடுத்தல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பல முக்கிய விடயங்களை RTI சட்டத்தினூடாக மேற்கொள்கிறது. இருப்பினும், கடந்த இரண்டு மாதங்களாக ஆணையாளர்கள் இல்லாமல் இந்த ஆணைக்குழுவானது சிறப்பாக செயற்பட முடியாத நிலையில் இயங்குகிறது.

இலங்கையின் முதலாவது தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் பதவிக்காலம் இந்த வருடம் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவுற்றது. இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற பேரவையானது தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஆணையாளர்களை நியமிக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புக்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் ஏனைய ஊடகதுறை சார் செயற்பாட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் அமைப்புக்களிடம் பரிந்துரைகளை கோரி அழைப்பு விடுத்தது. ஆணைக்குழுவின் நியமனங்களுக்கு 20 மேற்பட்ட பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பாராளுமன்ற பேரவையானது தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை ஊடக சந்திப்பின் போது வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும கருத்து தெரிவிக்கையில், தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தொடர்ச்சியான செயற்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன் பொருத்தமான பரிந்துரைகளை ஜனாதிபதியின் பார்வைக்கு கொண்டு செல்வது பாராளுமன்ற பேரவையின் கடமை எனவும் இறுதியாக ஜனாதிபதியினால் குறித்த பதவிகளுக்கான நியமனங்களை வழங்கப்படும் என்பதையும் சுட்டிக் காட்டினார்.

கொவிட் 19 தொற்றின் பரவல் காரணமாக, பல தகவல் அறியும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டதன் காரணமாக அதிகளவான மேன்முறையீடுகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


## பெயர் மாற்றம்

இராச வீதி கோப்பாய் தெற்கு கோப்பாய் என்ற முகவரியில் வசிக்கும் **மதியழகன் சானுசாந்தி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **மதியழகன் சானு** என மாற்றிக் கொள்கின்றேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**மதியழகன் சானு**


**இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்**
**(இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு)**

## வெற்றிடங்கள்

**உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளங்கள்) - 01 பதவி**

**மேற்படி பதவிக்கு ஆட்சேர்த்தலுக்கு இயைபாக பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் திருத்தம்**

எம்மால் தினகரன் பத்திரிகையில் 2021-12-06ஆம் திகதி 17ஆம் இலக்கப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் பதவிக்கு விண்ணப்பிக்கும் இறுதி நாள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் எமது கவலையைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்பதுடன் இந்தப் பதவிக்கான தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்கள் 2021-12-27ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு இது தொடர்பான மேலதிக தகவல்களை எமது http//www.girti.gov.lk/ எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## ரூ. 120,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

2025 "A" இன் 9.00% தொடர்களின் கீழ் ரூ. 25,000 மில்லியனையும் 2027 "A" இன் 10.30% தொடர்களின் கீழ் ரூ. 20,000 மில்லியனையும் 2029 "A" இன் 13.00% தொடர்களின் கீழ் ரூ. 20,000 மில்லியனையும் 2031 "A" இன் 11.25% தொடர்களின் கீழ் ரூ. 55,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2021 திசெம்பர் 13ஆந் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 9.00% 2025 "A" | 10.30% 2027 "A" | 13.00% 2029 "A" | 11.25% 2031 "A" |
|---|---|---|---|---|
| ISIN* | LKB 01225E019 | LKB 00827J152 | LKB 01529A012 | LKB 01231C151 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 25,000 மில்லியன் | ரூ. 20,000 மில்லியன் | ரூ. 20,000 மில்லியன் | ரூ. 55,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 9.00% ஆண்டொன்றிற்கு | 10.30% ஆண்டொன்றிற்கு | 13.00% ஆண்டொன்றிற்கு | 11.25% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2013 மே 01 | 2019 ஒக்டோபர் 15 | 2014 ஜனவரி 01 | 2019 மார்ச் 15 |
| முதிர்வுத் திகதி | 2025 மே 01 | 2027 ஒக்டோபர் 15 | 2029 ஜனவரி 01 | 2031 மார்ச் 15 |
| நறுக்குக் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 மே & 01 நவம்பர் | 15 ஏப்ரல் & 15 ஒக்டோபர் | 01 யூலை & 01 | 15 மார்ச் & 15 செப்டெம்பர் |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 1.0939 | ரூ.100.00 இற்கு ரூ. 1.7261 | ரூ.100.00 இற்கு ரூ. 5.8995 | ரூ.100.00 இற்கு ரூ. 2.8280 |
| ஏல விற்பனைத் திகதி | 2021 திசெம்பர் 13, திங்கட்கிழமை | | | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதி திகதியும் நேரமும் | 2021 திசெம்பர் 13, திங்கட்கிழமை மு.ப. 11.00 மணி | | | |
| தீர்ப்பனவுத் திகதி | 2021 திசெம்பர் 15 | | | |
| விலைக் குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | | | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்றுசேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக் குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக் குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்கள்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாறு பொது மக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

*வழங்கும் அலுவலகம்*

**பொதுப்படுகடன் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**
**30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு-01.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/ பதிவாளர்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

**திருகோணமலை துறைமுகத்தில் பொறியியல் வேலைத்தள கட்டிடத்தை நிர்மாணித்தல்**

**(Contract No.: SLPA/CD/TRINCO/ESSB)**

1. "திருகோணமலை துறைமுகத்தில் பொறியியல் வேலைத்தள கட்டிடத்ததை நிர்மாணிப்பதற்காக (Contract No.:SLPA/CD/TRINCO/ESSB)' தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சின் செயலாளருக்காக துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழான வேலையானது பிரதானமாக தேவையான மெருகூட்டல் மற்றும் சேவைகளையடக்கிய மூன்று மாடி கட்டிட நிர்மாணமாகும். மொத்த தரைப்பானது அண்ணளவாக 1800 சதுர மீற்றராகும்.
2. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக பின்வருவன பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
   - விலைமனுதாரர் CIDA (முன்பு ICTAD என அழைக்கப்பட்டது) பதிவு சி-2 தரம் மற்றும் சி-3 ஒப்பந்தக்காரர், கட்டிட நிர்மாணத்தில் விஷேடத்துவம் பெற்றவராகவிருத்தல்.
   - Eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து ஒன்-லையின் மூலமாக விலைமனுதாரரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவொன்று.
3. திருகோணமலை, சீனன் குடா, திருகோணமலை துறைமுகம், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, வதிவிட முகாமையாளரின் அலுவலகத்தில் 2022.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து தள விஜயமும் நடைபெறும்.
4. 2021.12.13 ஆம் திகதியிலிருந்து 2022.01.24 ஆம் திகதி வரையும் (இரு நாட்களும் அடங்கலானவை) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் பெசேவ அடங்கலாக 35,000 ரூபாவை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலகத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைத்தல் பிரிவு, ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைத்தலுக்கான பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரினால் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. விலைமனுக்கள் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கோரல் ஆவணமானது தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு பாதுகாப்பாக முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Construction of Engineering Workshop Building at Trincomalee Port (Contract No.: SLPA/CD/TRINCO/ESSB)" என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சு பெறுகை குழு, துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,100,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2022.06.21 ஆம் திகதி வரையும் செல்லுடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. வேலைகளின் பூர்த்தி செய்தலுக்கான நேரச்சட்டகம் 365 நாட்களாகும்.
9. இரு பிரதிகளிலுள்ள விலைமனுக்கள் 2022.01.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியளவில் சமர்ப்பிக்கப்பட்டு அவைகள் பி.ப.2 மணிக்கு மூடப்பட்டு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
10. எந்தபொரு மேலதிக விபரங்களும் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைத்தலுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து மேலேயுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளப்படலாம். (தொலைபேசி: 011-2380517)

    மேற்கூறப்பட்டுள்ள அனைத்தும் eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து ஒன்-லைனில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01.**

**கிராமிய வீடமைப்புத்துறை மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிட பொருட்கள் கைத்தொழில்கள் ஊக்குவித்தல் இராஜாங்க அமைச்சு**

## கட்டிடங்கள் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**நுவரெலியாவில் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்காக மத்திய மாகாண அலுவலகத்திற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் ELV முறைமையை வழங்கல், நிறுவுதல், பரிசோதித்தல் மற்றும் செயற்பட வைத்தல்**

**[Contract No.: 04-03-12-2021/CT64]**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 8.1 மில்லியன் ரூபாவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் 'நுவரெலியாவில் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்காக மத்திய மாகாண அலுவலகத்திற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் ELV முறைமையை வழங்கல், நிறுவுதல், பரிசோதித்தல் மற்றும் செயற்படவைத்தல்' ஆகியவற்றிற்காக கட்டிடங்கள் திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.
   நிர்மாணக் காலப்பகுதியானது 49 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ) விலைமனுக்களை மூடும் திகதி வரையும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஈஎம்-4 அல்லது மேற்பட்ட தரத்தில் மின்னியல் மற்றும் பொறிமுறை சேவைகளுக்கான துறையில் பதிவு பெற்றிருத்தல்.
   ஆ) ELV முறைமையை வழங்கல், நிறுவுதல் மற்றும் பேணல் ஆகியவற்றில் ஆகக்குறைந்தது 5 வருட அனுபவத்தையும் கடந்த மூன்று வருடங்களில் நிகரான ஆற்றலில் 10 செயற்றிட்டங்களை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   அத்துடன்' 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், இலங்கை, பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தங்களை விலைமனுதாரர்கள் தங்களை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவு செய்தலின் சான்றிதழின் (பிசிஏ-03) மூலப்பிரதியானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை சமர்ப்பிக்காவிடின் எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகையானது வழங்கப்பட மாட்டாது.'
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கண்டி, கட்டிடங்கள் திணைக்கள 5 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
   தொடர்பு இலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 081-2236653. தொலைநகல்: 081-2234255
6. 2021.12.08 ஆம் திகதியிலிருந்து 2021.12.21 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை (3,500 ரூபா) செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2021.12.23 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒப்படைக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் மாடி, 'செத்சிரிபாய', பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், பத்தரமுல்ல, 'செத்சிரிபாய', 2 ஆம் மாடி, கட்டிடங்கள் திணைக்கள ஒப்பந்த கிளையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளை பெறுவதற்கான இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் பின்வரும் வகையிலமைந்துள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்:
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் III ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில். கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - 105,000.00 ரூபா தொகைக்காகவிருத்தல்.
   - 2022 ஏப்ரல் 06 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகளின் 13.1 உபவாசகத்தில் சுட்டிக்காட்டியவாறான முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
10. பாதுகாப்பு பரிசோதனை நிமித்தம் விலைமனுக்களை மூடும் நேரத்திற்கு ஆகக் குறைந்தது 1 மணித்தியாலத்திற்கு முன்னராக 'செத்சிரிபாய' இடப்பரப்பினுள் உட்செல்லுமாறு நீங்கள் அறிவுரை வழங்கப்படுகிறீர்கள்.

**பொறியியலாளர் எம்.ஏச்.எம். இஸ்மயில்,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் மாடி, 'செத்சிரிபாய', பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**


திகதி 07.12.2021 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4609
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,500,450.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 7 5 7 0 0 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,076,779.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2904
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,551,240.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 02 21 43 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,177,787.36

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 957
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,027,980.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 158,089,218.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து W
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 36 57 70 76

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 639
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,259,220.00
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 27 63 78 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,823,090.00

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் : 1643
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,914,080.00
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கங்கள் 34 44 46 50
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,182,015.20

07.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 632,450
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.25,252,970.00
ரூ. 2,000,000.00 பரிசு 01   ரூ. 500,000.00 பரிசு 01   ரூ. 100,000.00 பரிசு 26

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


# விலைமனு அழைத்தல்

## வெலிகம பிரதேச சபை

**தெனிபிட்டிய சந்தை வளவிலுள்ள கட்டிடத்தை மேம்படுத்தல்**

01. வெலிகம பிரதேச சபையின் பெறுகைக் குழுத்தலைவரினால் வெலிகம பிரதேச சபைக்காக ரூபா 8,110,203.55 இற்கான செலவினம் உத்தேசிக்கப்பட்டுள்ள (எதிர்பாராத செலவுகள் மற்றும் வட் வரி தவிர்ந்த) மற்றும் விபரிக்கப்பட்டுள்ளவாறு உத்தேச தெனிபிட்டிய, சந்தை வளாகத்திலுள்ள கட்டிடத்தை மேம்படுத்துவதற்காக தகுதியும் தகைமையும் பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

    நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் மிகுதி வேலைகள் மற்றும் கழிவறைத் தொகுதியொன்றை நிர்மாணித்தல் இக் கைத்தொழிலில் அடங்கும் நிலத்தைச் சீரமைத்தல் கொங்கிரீட் வேலைகள், மேசன் வேலைகள், பரத்தல் வேலைகள், அலுமினியம் கதவுகள் மற்றும் ஜன்னல்கள், கண்ணாடி வேலைகள் (டெம்பர்ட்) மின்சார வேலைகள், நீர் வழங்கல் மற்றும் நில அலங்காரம் போன்றவை இக் கைத்தொழிலின் முக்கிய அம்சங்களாகும்.

    நிர்மாணிப்புக் காலம் 180 நாட்களாகும்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையின் பிரகாரம் இவ்விலைமனுக் கோரப்படும்.
03. செயற்றிட்டத்தின் மொத்த உத்தேச செலவினம் ரூபா ஐம்பது மில்லியன்களிற்குக் குறைவாயின், அரச நிதிச் சுற்றறிக்கை 4/2016 (III) இன் பிரகாரம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) யில் கட்டிடங்களிற்காக C6 அல்லது C7 தரங்களில் தென் மாகாணத்தில் பதிவு செய்யப்பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிற்கு இதற்காக முன்னுரிமை அளிக்கப்படும்.

    (Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Since the Estimated value of work to be perfomed under this procurement (excluding VAT and other taxes) is below Rs.50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public finance Circular No. 04/2016 (III)

04. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில், வெலிகம பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் : 041-2254287)
05. 2021.12.13 முதல் 2021.12.27 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கான காலப்பிரிவில், வெலிகம பிரதேச சபையின் செயலாளருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து ரூபா 3,000.00 இற்கான மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தை செலுத்தி இதற்கான விலைமனுப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
06. விலைமனுக்களை, மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனத் தயாரிக்கப்பட்டு தனித்தனி உறைகளில் சேர்த்து மீண்டும் அவற்றை ஒரே உறையில் சேர்த்து அதன் இடதுபக்க மேல் மூலையில் "தெனிபிட்டிய சந்தை வளாகத்திலுள்ள கட்டிடத்தை மேம்படுத்தல்" எனக்குறிப்பிட்டு முத்திரையிட்டு, 2021.12.28 அன்று மு.ப.10.30 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியிற் சேர்த்தல் மூலம் சமர்ப்பிக்கலாம். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும் அவ் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
07. விலைமனுக்கள் 2021.12.28 முதல் 77 நாட்களிற்கு செல்லபடியாகுதல் வேண்டும்.
08. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களுடன் ரூபா 80,000.00 இற்கான மீளளிக்கப்படும் விலைமனுப்பிணையமொன்று காசாக அல்லது வங்கி வரைவொன்றாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அது வங்கி வரைவொன்றின் விலைமனுப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும் என்பதுடன், 2022.04.11 ஆம் திகதி வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.

**தலைவர், பெறுகைக்குழு**
**பிரதேச சபை**
**பெலேண, வெலிகம**
**தொலைபேசி : 041-2252330**
**தொலைநகல் : 041-2253930**
**மின்னஞ்சல் : weliprasa@gmail.com**

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு

**JICA நிதியளிக்கப்பட்ட வளர்ந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் (RIDEP) – Loan No. SL-P116**

## திட்ட அமுலாக்கல் பிரிவு – வட மத்திய மாகாணம்

**கேள்விமனு இலக்கம்: PL/5/W/RIDEP/2021/12/1**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### வட மத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்தில் வெலிகந்த பி.ச. பிரிவில் மஹிந்தகம மற்றும் மஹசென்புற ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்ட நிர்மாணத்தின் பெறுகை

1. வளர்ந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் செலவை நோக்கி ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திடம் (JICA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. காற்றூட்டி, முன் குளோரினேற்ற அறை மற்றும் அழுத்த வடிகட்டிகள், பெரோ சீமந்து தரை நீர்தேக்கங்கள், பம்பிக் கூடம், பயன்பாட்டுக் கட்டிடம், உட்கொள்ளலில் தூய்மைப்படுத்தா நீர் பிரித்தெடுத்தல் பம்பிகள் மற்றும் நேரடி விநியோக அமைப்புக்கான VFD பம்பிகளின் வழங்கல் மற்றும் நிறுவுதல், அனைத்து துணைப் பொருட்களுடனும் குளோரினேற்ற அமைப்பு பொதி, DI மற்றும் HDPE தூய்மைப்படுத்தா நீர் முதன்மைக் குழாயை வழங்கல் மற்றும் பதித்தல், HDPE விநியோகக் குழாய் வலையமைப்பு, வால்வுகளின் வழங்கல் மற்றும் நிறுவுதல், குறுக்கிணைப்பு மதகு, கிடைமட்ட துளையிடலை பயன்படுத்தி பாதைக் கடப்பு மற்றும் வீட்டு இணைப்புகளின் ஏற்பாடு உட்பட வழக்கமான சுத்திகரிப்பு ஆலை, கசன் குளத்தில் கொள்திறன் நிர்மாணம் உட்பட மஹிந்தகம மற்றும் மஹசென்புற ஒருங்கிணைந்த உப திட்டத்தின் தேர்வுசெய்யப்பட்ட கூறுகளின் விஸ்தரிப்புக்கான நீர் வழங்கல், அமைப்பின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதியுடைய கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. ஜப்பானிய ODA கடன்களின் கீழான பெறுகைக்காக பொருத்தமான வழிகாட்டல்களுக்கு அமைவான நடைமுறைகள் மூலம் விலைக்கேட்பு நடத்தப்படுவதோடு கடன் உடன்படிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு, தகுதியுடைய மூல நாடுகளில் இருந்து அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறக்கப்பட்டுள்ளது.

3. காற்றூட்டி, முன் குளோரினேற்ற அறை மற்றும் அழுத்த வடிகட்டிகள், பெரோ சீமந்து தரை நீர்தேக்கங்கள், பம்பிக் கூடம், பயன்பாட்டுக் கட்டிடம், உட்கொள்ளலில் தூய்மைப்படுத்தா நீர் பிரித்தெடுத்தல் பம்பிகள் மற்றும் நேரடி விநியோக அமைப்புக்கான VFD பம்பிகளின் வழங்கல் மற்றும் நிறுவுதல், அனைத்து துணைப் பொருட்களுடனும் குளோரினேற்ற அமைப்பு பொதி, DI மற்றும் HDPE தூய்மைப்படுத்தா நீர் முதன்மைக் குழாயை வழங்கல் மற்றும் பதித்தல், HDPE விநியோகக் குழாய் வலையமைப்பு, வால்வுகளின் வழங்கல் மற்றும் நிறுவுதல், குறுக்கிணைப்பு மதகு, கிடைமட்ட துளையிடலை பயன்படுத்தி பாதைக் கடப்பு மற்றும் வீட்டு இணைப்புகளின் ஏற்பாடு உட்பட வழக்கமான சுத்திகரிப்பு ஆலை, கசன் குளத்தில் கொள்திறன் நிர்மாணம் உட்பட மஹிந்தகம மற்றும் மஹசென்புற ஒருங்கிணைந்த உப திட்ட நீர் வழங்கல் அமைப்பை நிர்மாணித்தல் மற்றும் பூர்த்தி செய்வதற்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தொழில் வழங்குநர் சார்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு, அமைச்சு பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

4. விலைமனுதாரர்களின் தகைமைக்கு நீர் வழங்கல் மற்றும் கழிகான் அமைப்பில் C2 மற்றும் அல்லது அதற்கு மேல் தரத்தை கொண்ட CIDA பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு I**: ஒப்பந்தம் வழங்க கருத்தில்கொள்வதற்கு, விலைமனு ஆவணத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சில தகைமை அளவுகோல் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **பொத இல./ உருப்படி இல.** | SL-P116/NCP/WS/2020/07 |
| **மீளளிக்கப்படாத வைப்பு** | இ. ரூபா 80,000.00 |
| **விலைமனு செல்லுபடி** | 2022.06.24 அன்று வரை |
| **விலைமனு பிணை** | 8.0 மில்லியன் இ. ரூபா (2022.07.22 அன்று வரை செல்லுபடி) |
| **தகைமை அளவுகோல்** | 01. நீர் வழங்கல் மற்றும் கழிகாண் அமைப்பில் C2 அல்லது அதற்கு மேற்கட்ட CIDA தரம் மற்றும் CIDA பதிவின் பிரதி.<br>02. இலங்கையின் மத்திய மற்றும் மாகாண வர்த்தக பதிவு நிர்வாகம் ஒன்றின் வர்த்தகப் பதிவின் பிரதி ஒன்று.<br>03. PCA 3 படிவம் (இந்த பிரத்தியேக விலைமனுவுக்காக 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒப்பந்ததாரர்களின் பதிவாளர்களின் பதிவு) |
| **நிதி நிலை** | 2018 ஜனவரி 1ஆம் திகதியில் இருந்து அமுலாகும் வகையில் கடந்த மூன்று ஆண்டுகளில் 535 மில்லியல் இ. ரூபா குறைந்தபட்ச சராசரிய ஆண்டு நிர்மாணப் புரள்வு |
| **நிதி வளங்கள்** | 140 மில்லியன் இ. ரூபா திரவச் சொத்துகள் மற்றும் கடன் வசதியின் குறைந்தபட்ச தொகை |
| **நிர்மாண அனுபவம்** | கடந்த 10 ஆண்டுகளில் குறைந்தது பின்வரும் அம்சங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்<br>• ஒவ்வொன்றும் குறைந்தது 50 கி.மீ. நீளம் கொண்ட குழாய்கள் ஒப்பந்தத்தின் HDPE இன் வழங்கல் மற்றும் பதித்தல் அல்லது இதனை ஒத்த பண்புடைய குறைந்தது இரண்டு ஒப்பந்தம் மற்றும்<br>• காற்றூட்டி மற்றும் அழுத்த வடிகட்டி முதலியவை உட்பட்ட தரை நீர்த்தேக்கங்களின் நிர்மாணம் மற்றும் வழக்கமான நீர் சுத்திகரிப்பு கூறுகளின் கட்டுமான சிவில் வேலைகள், களஞ்சிய கூறுகள், பயன்பாட்டு கட்டிட வேலைகள் உட்பட்டு குறைந்தது ஒரு ஒப்பந்தம் மற்றும்<br>• கட்டுப்பாட்டு பனல்களுடன் அமிழ்தகு பம்பியின் நீர் வழங்கல் அமைப்புகள் உள்ளடக்கிய மின் பொறிமுறை, VSD பம்பிகள், திரவ குளோரினேற்ற அமைப்புகள் மற்றும் பகுதி தானியங்கி அமைப்புகள் சார்ந்த முன்னுரிமை வேலைகளின் வழங்கல் மற்றும் நிறுவுதலில் குறைந்தது ஒரு ஒப்பந்தம் மற்றும் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 500 cum கொள்ளளவு கொண்ட வழக்கமான சுத்திகரிப்பு ஆலையின் நிர்மாணம். |
| **விலைமனுவுக்கு முந்திய சந்திப்பின் திகதி மற்றும் நேரம் மற்றும் தளப் பயணம்** | அநுராதபுரம், திட்ட அமுலாக்கல் அலுவலகத்தில் 2021.12.21 ஆம் திகதி மு.ப. 10.00க்கு. அதே நாள் பி.ப. 02.00க்கு தளப் பயணம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| **விலைமனுவுக்கு முந்திய சந்திப்பின் இடம்** | தலைமை செயலாளரின் செயலகம், வட மத்திய மாகாணம், வட மத்திய மாகாண சபை வளாகம், ஹரிஸ்சந்திர மாவத்தை, அநுராதபுரம், இலங்கை |

**குறிப்பு II**: JV இற்காக CIDA பதிவு தேவை. தகைமை மற்றும் தகுதி அளவுகோலின் 2.1.4 இலக்க உறுப்புரையை பார்க்கவும்.

5. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் தொ.பே. 011-2667748, தொலைநகல்: 011-2667768, கொழும்பு 08, கின்சி வீதி, இல. 157ஏ, வளர்ந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம், திட்ட முகாமைத்துவ பிரிவின் அலுவலகம்

அல்லது

தொ.பே. 025 2222875, தொலைநகல்: 025 2222875, மின்னஞ்சல்: ridep.piuncp@gmail.com, அநுராதபுரம், தஹையகம, புபுது மாவத்தை, கட்டம் 3, இல. 3063, திட்ட அமுலாக்கல் பிரிவு, மாகாண திட்ட பணிப்பாளர் (வட மத்திய மாகாணம் - RIDEP) அலுவலகத்தல் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

6. மீளளிக்கப்படாத கட்டணமாக எண்பதாயிரம் இலங்கை ரூபாவை (இ. ரூபா 80,000.00) செலுத்தி மேலுள்ள முகவரிகளுக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

விலைமனுக்களை மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் 2021.12.09 ஆம் திகதி தொடக்கம் 2021.12.30 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கொள்வனவு செய்ய முடியும்.

கட்டணம் செலுத்திய பின், ஆர்வமுடைய விலைமனுதாரர்(கள்) ஆவணத்தின் PDF வடிவத்தை கோரலாம்.

7. விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்களின் ஏற்பாடுகள் மற்றும் ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகள் சிறு பணிகளின் பெறுகைக்கான ஜப்பானிய ODA கடன்களின் கீழ் நிலையான விலைமனு ஆவணத்தின் ஏற்பாடுகளில் அமையும்.

8. முத்திரை பொறிக்கப்பட்ட அசல் மற்றும் நகல் விலைமனுக்களை வெவ்வேறு கடித உறைகளில் இட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "SL-P116/NCP/WS/2020/07 ஆம் இலக்க பொதிக்கான விலைமனுக்கள்" என்று குறிப்பிட்டு 2021.12.31 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் "தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, நிதிப் பிரிவு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் கைப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடலாம் என்பதோடு விலைமனுக்கள் எட்டு மில்லியன் இலங்கை ரூபா (இ. ரூபா 8,000,000.00) விலைமனுபிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை மத்திய வங்கி மூலம் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க வங்கி உத்தரவாத வடிவத்தில் விலைமனு பிணை இருத்தல் வேண்டும். வேறு எந்த ஒரு வடிவிலான விலைமனு பிணைகளும் ஏற்கப்படமாட்டாது.

9. நிதிப் பிரிவு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரியில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் நேரிடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு**
**இல. 330, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு - 02**
**தொலைபேசி: 011 - 2399735, தொலைநகல்: 011-2329725**
**மின்னஞ்சல்: secretary@pclg.gov.lk**
**திகதி: 2021.12.09**


සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

**மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்**

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2021 ஜுன் 30ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2021 டிசம்பர் 23ம் திகதி மு.ப 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே, மாத்தளை மற்றும் தம்புள்ளை | 2021 ஜுன் 30ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், குருணாகலை நகரக்கிளை, இல. 36, நீர்க்கொழும்பு வீதி, குருணாகலை |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல. 46/12, சயுறு செவன,
நவம் மாவத்தை, கொழும்பு-02.

பதிவு இலக்கம்: PB 917PQ



OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலை மனுக்கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சார்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன்) | காப்புறுதிப்பிணைத் தொகை (ரூ.) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|
| **RDA/DC/SAB/GOSL/2021/70** | 71/5 கால்வாய் மற்றும் 72/3 பாலத்திற்கு இடையிலான நடைபாதை கட்டுமானம் மற்றும் CRWB சாலையின் (எஹலியகொட நகரம்) இருபுறமும் 71/5 - 71/6 மைல் கற்களுக்கு இடையில் வலுவூட்டப்பட்ட கொன்கிரீட் வடிகாலில் மீதமுள்ள பணி | **39.3** | 500,000.00 | 91 |

02. இச் செயற்பாடானது 71/5 கால்வாய் மற்றும் 72/3 பாலத்திற்கு இடையிலான நடைபாதை கட்டுமானம் மற்றும் கொழும்பு, இரத்தினபுரி, வெல்லவாய மற்றும் மட்டக்களப்பு சாலையின் இருபுறமும் 71/5-71/6 மைல் கல்களுக்கு இடையில் வலுவூட்டப்பட்ட கான்கிரீட் வடிகால் (எஹலியகொட நகரம்) சமநிலைப் பணி ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

04. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறுவதுடன், இந்தக் கொள்முதலின் மொத்தச் செலவு மதிப்பீடு ரூ.50 மில்லியனுக்கும் குறைவாக இருப்பதால், பொது நிதிச் சுற்றறிக்கை எண்.04/2016 (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர விருப்பம் என்பன பொருந்தும்.

05. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் CIDA தரத்தில் **C4 அல்லது C5** நெடுஞ்சாலைகள் கட்டுமானத்துறையில் நிபுணத்துவம், கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

06. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக்கொள்ள முடிவதுடன், மனு ஆவணங்களை **08.12.2021** ஆம் திகதி தொடக்கம் **www.rda.gov.lk** எனும் இணையத்தளம் மூலம் பரீட்சிக்க முடியும்.

அ. மாகாண பணிப்பாளர் (சப்ரகமுவ),
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
இரத்தினபுரி.
தொலைபேசி : 045-2233907 பெக்ஸ் இல : 045-2222471

ஆ. பணிப்பாளர் (கட்டுமானம்),
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
மூன்றாம் மாடி, "மஹாநெகும மஹா மெதுர"
டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை
தொலைபேசி: 011-2864388 பெக்ஸ்:- 011-2861821

07. மனு தொடர்பான கூட்டம் **2021.12.22** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு மாகாண பணிப்பாளர் (சப்ரகமுவ), வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒன்லைன் முறை மூலம் இடம்பெறுவதுடன் மனுக்கூட்டத்திற்கான zoom link ஐ மாகாண பணிப்பாளர் (சப்ரகமுவ), வீதி அபிவிருத்தி அதிகார சபையின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி. 045-2233907)

08. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2021.12.08** ஆம் திகதியிலிருந்து **2021.12.29** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டுடன் (மனுதாரரின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பன பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்) விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பணிப்பாளருக்கு அனுப்புவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

மின்னஞ்சல் முகவரி : **construction.rda@gmail.com**

மீளச்செலுத்தப்படாத கட்டணடான **ரூபா. 3,780.00** (வட் வரிகளுக்கு உட்பட்ட) ஐ ஒவ்வொரு மனு ஆவணத்திற்கும் பின்வரும் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பு செய்வதன் மூலம் செலுத்தலாம்.

a. கணக்கின் பெயர் : பணிப்பாளர் நாயகம் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)
b. கணக்கிலக்கம் : 0000001943
c. வங்கியின் பெயர் : இலங்கை வங்கி – பெருநிறுவனக்கிளை

மனுக்களை சமர்ப்பிக்கும் போது அசல்/செல்லுபடியான ரொக்க வைப்புச் சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும், அவை சரிபார்க்கப்படும். அசல்/செல்லுபடியான பண வைப்பு சீட்டு அற்ற மனுக்கள் நிராகரிக்கப்படும்.

1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் மட்டும் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் குறித்த மனுவுக்கு பதிவு செய்யப்படல் வேண்டும்.

09. அனைத்து மனுக்களும், **2022.04.28** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **பிரதிகளுடன் 2021.12.30** ஆம் திகதி **14.00** மணித்தியாலங்களுக்கு முன் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வழங்கல் குழு, பணிப்பாளர் கவனத்திற்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபை 01 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

11. மனுக்கள் **2022.03.31** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வழங்கல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**01 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர", டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

# சர்வதேச செய்திகள்

## இந்திய – ஆஸி. வர்த்தக உடன்படிக்கை பற்றி பேச்சு



இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இயற்கையாகவே பொருளாதார நண்பர்கள் என்று அவுஸ்திரேலிய பிரதமரின் விசேட வர்த்தகத் தூதுவர் டோனி அபோட் தெரிவித்துள்ளார்.

“இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இயற்கையாகவே பொருளாதார நண்பர்கள். இந்தியா பாரிய உற்பத்தி நாடு. அவுஸ்திரேலியா பெரும் வளங்களைக் கொண்ட பொருளாதாரம். ‘மேக் இன் இந்தியாவை’ உண்மையாக்க இந்தியாவுக்கு தேவையானது அவுஸ்திரேலியாவில் உள்ளது” என்று நியூ டெல்லியில் இடம்பெற்ற மெய்நிகர் செய்தியாளர் சந்திப்பில் அபோட் கூறினார்.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கான முக்கிய வாய்ப்பாக சுதந்திர வர்த்தக உடன்படிக்கை உள்ளது என்று அபோட் வலியுறுத்தினார். இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு இடையிலான ஆரம்ப வர்த்தக உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்ள முடியும் என்று அவுஸ்திரேலியா நம்புவதாக அபோட் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட அபோட், மத்திய வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் பியுஷ் கொயாலை சந்தித்தபோது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவது குறித்து பேசினர்.

## கசோக்கி கொலை தொடர்பில் சந்தேக நபர் பிரான்ஸில் கைது



சவூதி அரேபிய ஊடகவியலாளர் ஜமால் கசோக்கியின் கொலையுடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் சவூதி நாட்டவர் ஒருவர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலித் ஏத் அலோதைபி என்பவர் பாரிஸின் சார்ல்ஸ் டி கவுல் விமானநிலையத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டதாக பிரான்ஸ் பொலிஸாரை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இவர் இந்த கொலை தொடர்பில் துருக்கியால் தேடப்பட்டு வரும் 26 சவூதி நாட்டவர்களில் ஒருவர் என்று நம்பப்படுகிறது.

எனினும் இந்த கைது நடவடிக்கை தவறாக இடம்பெற்றிருப்பதாகவும் இந்த கொலையுடன் தொடர்புபட்டவர்கள் சவூதியில் குற்றங்காணப்பட்டுள்ளனர் என்றும் சவூதி அதிகாரி ஒரு குறிப்பிட்டுள்ளார்.

சவூதியின் முன்னாள் அரச காவலரான 33 வயது அலோதைபி, தனது சொந்த பெயரில் பயணித்திருந்த நிலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

சவூதி அரசுக்கு எதிராக கடும் விமர்சனங்களை வெளியிட்டு வந்த கசோக்கி 2018 ஒக்டோபரில் ஸ்தன்பூலில் உள்ள சவூதி துணைத் தூதரகத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

## பங்களாதேஷில் 20 பல்கலைக்கழக மாணவர்களுக்கு மரண தண்டனை



சமூக ஊடகத்தில் அரசாங்கத்தை விமர்சித்த இளைஞர் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் பங்களாதேஷில் பல்கலைக்கழக மாணவர்கள் 20 பேருக்கு நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கடுமையாக தாக்கப்பட்டு கொல்லப்பட்ட 21 வயதான அப்ரார் பஹாத்தின் உடல் அவரது அறையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தியாவுடன் தண்ணீரை பகிர்ந்து கொள்ளும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பிரதமர் ஷெய்க் ஹசீனாவை அவர் பேஸ்புக்கில் கடுமையாக சாடி இருந்தார்.

இதனை அடுத்து ஆளும் அவாமி லீக் கட்சியின் மாணவர் பிரிவைச் சேர்ந்த 25 சக மாணவர்கள் அவரை கிரிக்கெட் மட்டை மற்றும் ஏனைய பொருட்களால் ஆறு மணி நேரம் தாக்கிக் கொன்றனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலும் ஐந்து குற்றவாளிகளுக்கு அயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்ட மாணவர்கள் 20க்கும் 22க்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள்.

## ஒமிக்ரோன் ஏனைய திரிபுகளை விடவும் கடுமையானதல்ல

### உலக சுகாதார அமைப்பு



ஒமிக்ரோன் திரிபு கொவிட்19 நோயை ஏற்படுத்தும் மற்ற வைரஸ் திரிபுகளை விடவும் கடுமையான நோயை ஏற்படுத்தும் என்பதற்கு எவ்வித அறிகுறியும் இல்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போதைய தடுப்பூசிகள் மிகக் கடுமையான பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கக்கூடியவை என அது கூறியது.

ஒமிக்ரோன் திரிபு கொவிட்19 நோயை ஏற்படுத்தும் மற்ற திரிபு வகைகளைக் காட்டிலும் மேலும் மிதமானதே என அமெரிக்காவின் உயர் தொற்றுநோய் நிபுணர் அன்தனி பௌச்சியும் கூறியுள்ளார்.

டெல்டா திரிபை விட, ஒமிக்ரோன் மேலும் கடுமையானது அல்ல என்பதில் கிட்டத்தட்ட உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். டெல்'டா வைரஸ் திரிபு உலகம் முழுவதும் அதிகமானோரைப் பாதித்து, மேலும் பல உயிர்களைப் பறித்தது. ஒமிக்ரோன் திரிபினால் யாரும் உயிரிழந்ததாக இதுவரை தகவல் இல்லை. ஆனால், டெல்டா திரிபை விட, ஒமிக்ரோன் வைரஸ் திரிபு மேலும் எளிதில் பரவலாம் என டொக்டர் பௌச்சி எச்சரித்தார்.

தென்னாப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய ஒமிக்ரோன் திரிபின் முதல் கட்ட ஆய்வகப் பரிசோதனையில், பைசர் தடுப்பூசி அதன் தாக்கத்தை ஓரளவுக்குத் தடுப்பதாகத் தெரிகிறது. புதிய ஒமிக்ரோன் திரிபு தடுப்பூசிகளின் நோய் எதிர்ப்பான்களை, குறிப்பிடத்தக்க அளவில் கடப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## உக்ரைன் ஆக்கிரமிப்பு அச்சம்: புட்டினுக்கு பைடன் எச்சரிக்கை



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் வீடியோ அழைப்பு வழியாக உரையாடிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் எல்லை பகுதியில் ரஷ்யா இராணுவத்தை குவித்து வருவதால் அங்கு பதற்ற சூழல் அதிகரித்திருக்கும் நிலையிலேயே இரு தலைவர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை நேரடியாக உரையாடினர்.

“ஜனாதிபதிக்கு வாழ்த்துகள்” என்று பைடனிடம் புட்டின் கூறும் சிறிய வீடியோ பதிவு ஒன்றை ரஷ்யா வெளியிட்டுள்ளது. இந்த உரையாடல் இரண்டு மணி நேரம் நீடித்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதன்போது “உங்களை பார்த்தது மகிழ்ச்சியாக உள்ளது” என்று புட்டினிடம் குறிப்பிட்ட பைடன், அடுத்த முறை நேரடியாக சந்தித்துக்கொள்வது பற்றி வலியுறுத்தினார்.

இந்த அழைப்புக்கு பின் வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிவிப்பில், உக்ரைனை சுற்றி ரஷ்ய படைகள் குவிக்கப்படுவது குறித்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டணிகள் ஆழ்ந்த கவலை அடைந்திருப்பதாகவும் இராணுவ நடவடிக்கை ஒன்று இடம்பெற்றால் பதில் நடவடிக்கையாக கடுமையான பொருளாதார மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பைடன் கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லையில் 94,000 ரஷ்ய துருப்புகள் திரண்டிருப்பதாக உக்ரைன் குறிப்பிட்டுள்ளது. இந்த ஆண்டில் இடம்பெறும் இரண்டாவது படை குவிப்பாக இது உள்ளது. எனினும் உக்ரைனை தாக்கமாட்டோம் என்று ரஷ்யா கூறியுள்ளது.

பைடன் மற்றும் புட்டின் கடைசியாக சுவிட்சர்லாந்தில் கடந்த ஜூன் மாதம் சந்தித்தனர். ஆனால், பேச்சுவார்த்தையில் பெரிய முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் கொவிட்–19 பரவலை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை




சீனாவின் வடக்கு பிரதேசங்களில் கொவிட்19 தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, இரண்டு நகரங்களுக்கான பொது போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டு குடியிருப்பாளர்களின் நடமாட்டங்கள் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இத்தொற்று உள்நாட்டில் தீவிரமடைவதைக் கட்டுப்படுத்த நாடு என்ற வகையில் இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சீன அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக வட பகுதியிலுள்ள மொங்கோலியப் பிராந்தியத்தில் கொவிட்19 தொற்றுக்கான அறிகுறிகளுடன் நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் கடந்த சில தினங்களாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன.

இத்தொற்றின் டெல்டா தாக்கத்தினால் கடந்த ஒக்டோபரின் நடுப்பகுதியில் சீனாவின் வடக்கு பிரதேசங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன. தொற்றின் தாக்கம் படிப்படியாகக் கட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கொவிட்19 தொற்று பரவுதல் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டன. ஆனாலும் இத்தொற்று உள்நாட்டில் தீவிரமடைவதை முழுமையாகக் கட்டுப்படுத்துவது இலகுவான காரியமல்ல என்பதை இத்தொற்றுக்கு பதிதாக உள்ளாகுதல் வெளிப்படுத்தியுள்ளன.

## பீஜிங் ஒலிம்பிக்: ஆஸியும் இராஜதந்திர புறக்கணிப்பு




பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை அவுஸ்திரேலியாவும் இராஜதந்திர ரீதியாகப் புறக்கணிக்கவுள்ளது.

அவ்வாறு செய்வதாக அமெரிக்கா அறிவித்ததைத் தொடர்ந்து, அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் அது பற்றி அறிவித்துள்ளார்.

போட்டிகளில் அவுஸ்திரேலிய அரசாங்க அதிகாரிகள் யாரும் கலந்துகொள்ளப் போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவுஸ்திரேலிய விளையாட்டாளர்கள் போட்டியில் பங்கேற்பர்.

அவுஸ்திரேலியாவை மிரட்டும் விதமாகச் சீனா விதித்திருக்கும் வர்த்தக நடைமுறைகளும், சீனாவில் நேர்வதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்களும் அவுஸ்திரேலியாவின் முடிவுக்கான காரணங்கள் என பிரதமர் மொரிசன் கூறினார்.

அந்த விவகாரங்கள் குறித்து கருத்துரைக்க சீனா இதுவரை எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதால், போட்டிகளைப் புறக்கணிக்க அவுஸ்திரேலியா எடுத்துள்ள முடிவு அதற்கு அதிர்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்காது என அவர் குறிப்பிட்டார்.

## சீன பேரவை தீர்மானம்



சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறாவது நிறை பேரவை தீர்மானம், பீஜிங்கின் கலாசாரப் புரட்சி ஒரு தவறு என்பதை ஒப்புக்கொண்டதாக ஒரு அறிக்கை கூறுகிறது.

ஆறாவது நிறை பேரவையை அடுத்து (2021) வெளியிடப்பட்ட அறிக்கையில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முந்தைய புரட்சிகள் தொடர்ந்து செல்லுபடியானது என்றபோதும் ஒரு பேரழிவாக கலாசார புரட்சி கூறப்பட்டுள்ளது. இதில் 10 ஆண்டு கொந்தளிப்புக்கு மவோ மீது பொறுப்பு சுமத்தப்பட்டிருப்பதாக ஹொங்கொங் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

இந்த கட்சியின் முதலாவது புரட்சி 1945 இலும் இரண்டாவது 1987 இலும் வெளியிடப்பட்டதோடு கலாசார புரட்சி உத்தியோகபூர்வமான நிராகரிக்கப்பட்டது.

மறுபுறம், 1978 இல் மூன்றாவது நிறை பேரவை கலாசார புரட்சியை உத்தியோகபூர்வமாக முடிவுக்குக் கொண்டுவந்தது.

## உலகில் மலேரியா சம்பவம் அதிகரிப்பு



உலக அளவில் மலேரியா சம்பவங்கள் கடந்த ஆண்டு அதிகரித்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு 240 மில்லியன் மலேரியா சம்பவங்கள் பதிவாகின. அதற்கு முந்திய ஆண்டு பதிவானதை விட அது 14 மில்லியன் அதிகம்.

உயிரிழப்பு எண்ணிக்கை கடந்த ஆண்டு 620 ஆயிரத்தைத் தாண்டியது. அதற்கு முந்திய ஆண்டைக் காட்டிலும் அது கணிசமான அதிகரிப்பு.

கொவிட் கட்டுப்பாடுகளால் மலேரியாவைத் தடுப்பதில், அடையாளம் காண்பதில், பாதிக்கப்பட்டோருக்குச் சிகிச்சை அளிப்பதில் இடையூறு ஏற்பட்டதாக சுகாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஆபிரிக்காவில் சஹாரா பாலைவனத்துக்குத் தென்பகுதியில் வசிக்கும் மக்களே பெரும்பாலும் மலேரியா நோயால் பாதிக்கப்படுகின்றனர். உயிரிழந்தவர்களில் சுமார் 80 வீதத்தினர் 5 வயதுக்கும் குறைவான பிள்ளைகள்.

புதிய மலேரியா தடுப்பூசியின் உடனடி விநியோகத்துக்குக் குறிப்பாக ஆபிரிக்கப் பிள்ளைகளுக்கான தடுப்பூசிக்கு, உலக நாடுகள் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் சுகாதார அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

## புருண்டி சிறையில் தீ: 38 பேர் உயிரிழப்பு

புருண்டி தலைநகர் கிடேகாவில் உள்ள அளவுக்கு அதிகமான கைதிகளை கொண்ட சிறையில் ஏற்பட்ட தீயில் குறைந்தது 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு ஏற்பட்டிருக்கும் இந்தத் தீயில் மேலும் 69 பேர் காயமடைந்திருப்பதோடு சிறைச்சாலையின் பல பகுதிகளும் சேதமடைந்துள்ளன.

எனினும் இந்தத் தீக்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

இந்த சிறையில் 400 பேர் இருப்பதற்கே வசதி இருக்கும் நிலையில் கடந்த நவம்பர் இறுதியின்போது 1,500க்கும் அதிமான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக சிறை நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

மின்சார கோளாறு காரணமாக இதே சிறையில் கடந்த ஓகஸ்ட் மாதமும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

எனினும் அப்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## சிலி நாட்டில் ஒருபாலின திருமணத்திற்கு ஒப்புதல்



பாரம்பரியமான கத்தோலிக்க நாடான சிலியில் ஒருபாலின திருமணத்தை அனுமதிக்கும் முக்கிய சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று, பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தச் சட்டம் ஒருபாலின தம்பதிகள் குழந்தைகளைத் தத்தெடுக்க உதவுகிறது.

இந்த சட்டமூலத்தை ஜனாதிபதி செபாஸ்டியன் பினேரா ஆதரித்துள்ளார். அவர் அதைச் சட்டமாகக் கையெழுத்திட வேண்டியுள்ளது. ஆனால், அவருடைய பழைமைவாத கூட்டணி உறுப்பினர்களின் விமர்சனத்திற்கு இந்த சட்டமூலம் உள்ளானது.

சிலியின் எல்.ஜி.பி.டி சமூகத்தைச் சேர்ந்தவர்கள், நீண்ட காலமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால், 2017ஆம் ஆண்டு முதல் பாராளுமன்றம் இயற்றவிடாமல் முடக்கி வந்தது. சிலி 2015ஆம் ஆண்டு ஒருபாலின தம்பதிகளுக்கு இடையே இருக்கும் சிவில் ஒன்றிணைவுகளை அங்கீகரித்தது. இது அவர்களுக்கு சில சட்டரீதியான பலன்களையும் வழங்கியது.




நுவரெலியா மாவட்டம்

# பூஸ்டர் தடுப்புமருந்தேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பம்

கொரோனா மூன்றாவது அலை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகள் நுவரெலியா மாநகரசபை சுகாதார காரியாலயத்தில் இடம்பெற்றுவருவதாக மாநகர சபை பொது சுகாதார அதிகாரி தெரிவித்தார். 09 பகுதிகளில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பூஸ்டர் தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகள் முன்னெக்கப்பட்டுள்ளன. இதில் முதல் கட்டமாக நேற்றைய தினம் 04 பகுதிகளில் உள்ளவர்களுக்கு மாத்திரம் தடுப்பு மருந்தேற்றப்பட்டது. இரண்டாவது தடுப்பூசி பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என மாநகரசபை பொது சுகாதார அதிகாரி தெரிவித்தார் . நுவரெலியா பொது வைத்தியசாலையிலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## முதியவரின் சடலம் மீட்பு

தலவாக்கலை குறூப் நிருபர்



நுவரெலியா பிளாக்பூல் ஆற்றில் பெண்ணொருவரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா ருவான் எலியா பன்சல வீதியைச் சேர்ந்த புஞ்சிபண்டாரகே மெனிக்காமினி வயது (78) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தனது மகள் மற்றும் மருமகன்களுடன் வீட்டில் தங்கியிருந்துள்ள நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலையில் வீட்டிலிருந்தவர்கள் இவரை தேடிப்பார்க்கும்போதே காணாமல் போயுள்ளமை தெரியவந்துள்ளது. இவர் உயிரிழந்தமைக்கான காரணம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




சப்ரகமுவ மாகாணத்தில் பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக பங்களித்த ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் திட்டத்தின் கீழ் டிப்டீன் தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர் ஏஞ்சலா ஜெயரஞ்சனிக்கு சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களத்தால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்ட போது...

## இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை 43,981 பேருக்கு கொரோனா

காவத்தை தினகரன் விசேட நிருபர்

இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை 43,981 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் மாதம் மட்டும் 3989 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரத்தினபுரி மாவட்ட கொரோனா தொற்று தடுப்பு பிரிவு குழு கூட்டம் நேற்றுமுன்தினம் (7) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது முதியோருக்கு பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக இரத்தினபுரி மாவட்ட சுகாதார பிரிவினர்கள் தெளிவுப் படுத்தியதுடன் இதுசம்பந்தமாக மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த மாகாண ஆளுநர்,

இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு தேவையான தடுப்பூசிகளை எவ்வித குறைபாடுகளுமின்றி பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் சிவனொளிபாத மலை யாத்திரையை சுகாதார பிரவினர்களின் ஆலோசனைக்கமைய ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

## பதுளை மாவட்டத்தில் இதுவரை 92 பேர் கொரோனா

பதுளை தினகரன் விசேட நிருபர்

பதுளை மாவட்டத்தில் இதுவரையில் கொவிட் 19 தொற்றினால் 525 பேர் மொத்தமாக உயிரிழந்துள்ளதுடன், கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் 92 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட சுகாதாரப் பணியகம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வகையில், பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் பதுளை – 72 பேர், பண்டாரவளை – 61 பேர், எல்ல – 13 பேர், ஹல்துமுள்ளை – 23 பேர், ஹாலிஎலை – 55 பேர், ஹப்புத்தளை – 42 பேர், கந்தகெட்டிய – 07 பேர், லுணுகலை – 17 பேர், மகியங்கனை – 64 பேர், மீகாகியுல – 14 பேர், பசறை – 32 பேர், ரிதிமாலியத்தை – 15 பேர், சொரணாதொட்டை – 11 பேர், ஊவா – பரணகமை – 35 பேர், வெலிமடை – 64 பேர்

என்ற வகையில் 525 பேர் கொவிட் 19 தொற்றினால், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளனர்.

இதுவரையில் பதுளை – 4269 பேர், பண்டாரவளை – 3346 பேர், எல்ல – 1446 பேர், ஹல்துமுள்ளை – 1570 பேர், ஹாலிஎலை – 2176 பேர், ஹப்புத்தளை – 1973 பேர், கந்தகெட்டிய – 1092 பேர், லுணுகலை – 1334 பேர், மகியங்கனை – 4305 பேர், மீகாகியுல – 855 பேர், பசறை – 2015 பேர், ரிதிமாலியத்தை – 2865 பேர், சொரணாதொட்டை – 637 பேர், ஊவா – பரணகமை – 1847 பேர், வெலிமடை 3201 பேர் என்ற வகையில் 32 ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்து நான்கு பேர் தொற்றாளர்களாகவுள்ளனர். இவர்களில் 12 ஆயிரம் பேர் சிகிச்சை நிலையங்களில் தற்போதைய நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பதுளையில் கொவிட் 19 மரணங்களும், தொற்றாளர்களும் பெருமளவில் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது.

## நீரில் மூழ்குவதைத் தடுக்கும் வேலைத்திட்டம்

கண்டி மாவட்டத்தில் நீரில் மூழ்குவதைத் தடுக்கும் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தப்போவதாக இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இதற்காக, ஆபத்தான இடங்களை இனங்கண்டு அவற்றிற்கு அருகில் அறிவிப்புப் பலகைகளையும், அபாய அறிவிப்பு சமிக்ஞைத் தொகுதிகளையும் பொருத்தவுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட உதவிப் பணிப்பாளர் தேஷப்ரிய பண்டார தெரிவித்தார்.

எவ்வாறேனும், தமக்குப் பழக்கமில்லாத இடங்களில் நீராடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இடர் முகாமைத்துவ நிலைய பண்டார பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். நில்லம்பேஓயாவில் நீராடச் சென்றவர்களில் 20 வயதுடைய ஒருவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டார். தாயும் அவரது இரண்டரை வயது குழந்தையும் காணாமல் போயிருந்தனர். இவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக பேராதனை பொலிஸார் அறிவித்தனர்.

பிரதேசவாசிகள் கருத்து வெளியிடுகையில், முன்னறிவித்தல் இன்றி நில்லம்பே அணைக்கட்டின் வான் கதவுகள் திறக்கப்பட்டு கீழ்ப்பகுதியில் சடுதியாக வெள்ளம் ஏற்பட்டதால், இவ் அசம்பாவிதம் நிகழ்ந்ததாகத் தெரிவித்தனர். ஆனால், இச்சம்பவம் நிகழ்ந்த இடம் நீராடுவதற்கு பொருத்தமானது அல்லவென நில்லம்பே மின்னுற்பத்தி நிலையத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். அணைக்கட்டின் வான் கதவுகளைத் திறக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் மக்கள் நீராடும் இடங்களில் அபாய சமிக்ஞைகள் ஒலிக்க விடப்படுவதாக அவர்கள் கூறினார்.

## ஆசிரிய உதவியாளர்களை சேவைக்கு உள்வாங்குதற்கு நடவடிக்கை

அக்குறணை குறூப் நிருபர்

மத்திய மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரிய உதவியாளர்களை ஆசிரிய சேவைக்கு உள்வாங்குதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

ஆசிரிய உதவியாளர்களை சேவைக்கு உள்வாங்குவது தொடர்பாக மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதில் ஆளுநர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய மாகாண பாடசாலைகளில் நீண்டகாலமாக பத்தாயிரம் ரூபா கொடுப்பனவுடன் சேவையாற்றி வருபவர்களுக்கு கொடுப்பனவுகள் போதியதாக இல்லை. எனவே இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது அவசியமாக தேவைப்படுகின்றது. மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.






நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட மிகவும் பின்தங்கிய சுமார் 150 கஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு ரோட்டரக்ட் பீஸ் சிட்டி ஹற்றன் கழகத்தின் ஏற்பாட்டில் 6 மில்லியன் பெறுமதியான கை சுத்திகரிப்பான்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா கல்வி வலயத்தின் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஹரிச்சந்திரன், உதவி கல்விப் பணிப்பாளர்களான சாந்தகுமார், செல்வராஜா, நெடுஞ்செழியன் மற்றும் கொழும்பு மிட் சிட்டி தலைவர் ரோட்டேரியன் இசானி ஜயசிங்க மற்றும் ரோட்டேரியன் சரவணன், முன்னாள் தலைவர் ராஜலிங்கம் மற்றும் ரோட்டரக்ட் பீஸ் சிட்டி அட்டன் தலைவர் தனுஷன் மற்றும் கழக அங்கத்தவர்கள் நுவரெலியா கல்வி வலய பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தலவாக்கலை குறூப் நிருபர்




இலங்கை மக்கள் காணி ஆணைக்குழுவினால் காணி முகாமைத்துவம், காணி சட்டங்கள் மற்றும் தற்போது நடைமுறையிலுள்ள காணிக் கொள்கைகளின் காரணமாக மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று கொழும்பு 06 "குலோபல் டவரில்" இடம்பெற்றது. இதன்போது மலையக பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் காணி, வீடமைப்பு போன்றவற்றின் சவால்கள் தொடர்பாக மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்துக்கொண்டு உரையாற்றினார். இக்கலந்துரையாடலில் பல்வேறு அரசியல் பிரமுகர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் போன்றோர் கலந்துக்கொண்டனர்.

## டிக்கோயாவில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

ஹற்றன் விசேட நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்



ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா, வனராஜா தேயிலை தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள குடியிருப்பு ஒன்றிலேயே இவ்வாறு சமையல் எரிவாயு அடுப்பு ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை காலை 06.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, அந்த வீட்டின் பெண் அதிகாலை தேனீர் தயாரிப்பதற்காக அடுப்பை பற்றவைக்க முயன்ற போதே கேஸ் அடுப்பு தீ பற்றி எரிந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. இச்சம்பவம் தொடர்பில் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லையெனவும் தீ பற்றி எரிந்த அடுப்பை அயலவர்களின் உதவியோடுகட்டுபாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக ஹட்டன் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## பண மோசடியில் ஈடுபட்ட நால்வர் கைது

மாத்தளை சுழற்சி நிருபர்

ஓய்வூதிய திணைக்களத்தில் சேவையாற்றி வருவதாக தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு பண மோசடியில் ஈடுபட்டு வந்த நான்கு பேரை சந்தேகத்தின் பேரில் மாத்தளை பொலிஸார் நேற்று முன்தினம் திவுலபிட்டிய பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஒரு தொகை பணம், தங்க நகைகள் உட்பட 2 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மாத்தளை பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறும் நபர் ஒருவர் ஓய்வூதிய பண மோசடி தொடர்பாக மாத்தளை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸ் நிலைய விசேட குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி சுகத் பண்டார தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் திவுலபிட்டிய, மீகமுவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர் . பண மோசடியில் ஈடுபடும் நபர்கள் ஓய்வு ஊதியம் பெறும் உத்தியோகத்தர்களின் வீடுகளுக்குச் சென்று தங்களை ஓய்வூதிய திணைக்கள அதிகாரிகள் என அறிமுகம் செய்து கொண்டு பணமோசடியில் ஈடுபட்டுள்ளனர். பணம் இல்லாத நபர்களிடமிருந்து அதற்கு பெறுமதியான தங்க நகைகளையும் பெற்று வந்துள்ளதாக விசாரணை மூலம் தெரிய வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு நாட்டின் பல பிரதேசங்களில் ஓய்வூதியம் பெறும் நபர்களிடமிருந்து 80 லட்சம் ரூபா பணம் மற்றும் 35 பவுண் தங்க நகைகள் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கரையொதுங்கும் சடலங்களால் காணாமல் போனாரின் உறவினர்கள் அச்சம்

**யாழ். விஷேட நிருபர்**

யாழ். மாவட்ட கடற்கரைகளில் சடலங்கள் கரையொதுங்குவதால், காணாமல்போனோரின் உறவினர்கள் மத்தியில் அச்சங்கள் எழுந்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரமேசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் (07) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இதுபற்றி அவர் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண கரையோரங்களில் கடந்த வாரம் ஆறு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. இது தொடர்பில் எந்த விதமான தகவல்களும் வெளிவரவில்லை.

காணாமல்போனவர்கள் பற்றிய தகவல்கள் வெளிவராத நிலையிலே இந்த சடலங்கள் கரை ஒதுங்குகின்றன.

கடற்கரைகளில் சடலங்கள் ஒதுங்குவதாக இருந்தால் கடலில் விபத்துக்கள் நடைபெற்று இருக்க வேண்டும்.

ஒன்றில் இலங்கை மீனவர்கள், அல்லது இந்திய மீனவர்களினது மீன் பிடி படகுகள் விபத்துக்கு உள்ளாகி இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு விபத்துக்கள் நடைபெற்றதாக எந்த தகவலும் இல்லை.இதனால், காணாமல் போனவர்களின் உறவுகள் அச்சத்தில் உள்ளனர். எனவே, இதுபற்றி விபரங்களை விரைவாக மக்களுக்கு கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# டிப்பர் வாகனம் மோதி கிராம சேவகர் காயம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா மயிலங்குளம் பகுதியில் டிப்பர் வாகனம் மோதி, கிராம சேவையாளர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்விபத்து நேற்றுக் காலை (08) ஒன்பது மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கிராமசேவகர் பண்டாரிக்குளம், வீட்டிலிருந்து ஆசிகுளம் கிராம சேவகர் பிரிவிற்கு சென்று கொண்டிருந்தார். இதன்போது, மயிலங்குளம் சந்திக்கு அண்மித்த பகுதியில் எவ்வித சமிக்ஞைகளுமின்றி, பிரதான வீதிக்கு கிரவல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம், கிராம சேவகரின் மோட்டார் சைக்கிளில் மோதி விபத்திற்குள்ளானது. இதில், காயமடைந்த ஆசிகுளம் கிராம சேவகரான பாலசுப்பிரமணியம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பொறியியலாளர் பிரியந்தவின் படுகொலைக்கு சர்வசமய குழு கண்டனம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

பாகிஸ்தானில் இலங்கை பொறியியலாளர் படுகொலை செய்யப்பட்டமை மனித குலத்திற்கு ஒவ்வாத செயற்பாடென, வவுனியா மாவட்ட சர்வ சமயகுழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, வவுனியா மாவட்ட சர்வசமயகுழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பெறியியலாளர் பிரியந்த குமார, பாகிஸ்தானில் கொரூரமாகக் கொலை செய்யப்பட்டதை, வவுனியா மாவட்ட சர்வசமய குழு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. மனிதகுலத்தில் இதுபோன்ற ஈனமான செயல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. எனவே குற்றம் இழைத்தவர்கள் எவராயினும் நீதிக்கு முன் கொண்டு வரப்பட வேண்டும்.இவர்களை உச்ச பட்ச சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத் த பாகிஸ்தானை வலியுறுத்துகிறோம். அத்துடன் அவரது இழப்பால், ஆழ்ந்த துயரில் மூழ்கியுள்ள அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சேர். பொன். இராமநாதனின் 91 ஆவது குருபூசை தினம்



**பருத்தித்துறை விஷேட நிருபர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாவாற்கு அடித்தளமான பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும், சைவப் பெரு வள்ளலாருமான சேர். பொன். இராமநாதனின் 91 ஆவது குருபூசை நேற்று (08) புதன் கிழமை காலை இடம்பெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூஜையுடன் இந்நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள சேர். பொன். இராமநாதனின் உருவச் சிலைக்கும், சபா மண்டபத்தினுள் உள்ள உருவப் படத்துக்கும் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மலர் மாலை அணிவித்து, வணக்கம் செலுத்தினார்.

இந்நிகழ்வில், சேர். பொன். இராமநாதன் அறக்கட்டளையின் சார்பில், பேராசிரியர் சி. சிற்றம்பலம் மற்றும் முன்னாள் துணைவேந்தரும், பேர வை உறுப்பினருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பதிவாளர் வி. காண்டீபன், இந்து கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் எம். வேதநாதன், முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வீட்டுக்காணியிலிருந்து மோட்டார் குண்டு மீட்பு

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**



யாழ்ப்பாணம் புங்கன் குளம் பகுதியில் பழுதடைந்த மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

வீடொன்றின் காணியை துப்புரவு செய்த போதே, நேற்று காலை (08) இந்த மோட்டார் குண்டு கண்டெடுக்கப்பட்டது.

வீட்டு உரிமையாளர்கள் இதனைக் கண்டெடுத்தனர்.

யாழ் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு, பொலிஸார் மோட்டார் குண்டை மீட்டுள்ளனர்.

# ஈச்சமோட்டை மறவர்குள புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

**யாழ்.விஷேட நிருபர்**

ஈச்சமோட்டை மறவர்குள புனரமைப்பு மாதிரி திட்ட வரைபை நேற்றைய தினம் புதன்கிழமை யாழ் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் வெளியிட்டுள்ளார்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட குளங்களை தூர்வாரி, அழகு படுத்தும் செயற்திட்டங்கள் முன்னெடுத்து வரப்படும் நிலையில், இதன் ஒரு அங்கமாக ஈச்சமோட்டை மறவர் குளம் புனரமைப்பு செய்யப்பட்டு அழகு படுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் குளத்தின் புனரமைப்பு மாதிரி திட்ட வரைபை முதல்வர் மக்கள் பார்வைக்கு வெளியிட்டு வைத்துள்ளார்.

இதேவேளை, முன்னதாக யாழ் நகர் மத்திய பகுதியில் அமைந்துள்ள ஆரிய குள புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இதன் முதல் கட்ட பணிகள் நிறைவடைந்து, கடந்த (02) திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த குளங்களின் புனரமைப்பு பணிகளுக்கு தியாகி அறக்கொடை நிறுவனர் நிதியம் பங்களிப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் இல்லத்திருந்த மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்ல மாணவர்கள் 29 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளது.

இங்கிருந்து பாடசாலைக்குச் சென்ற மாணவர்களே கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்தார். மன்னாரில், நேற்று (08) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, மன்னார் மாவட்டத்தில், செவ்வாய்க்கிழமை 46 பேர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.

இவர்களில் 29 பேர் திருக்கேதீஸ்வரத்தில் உள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களாவர்.

இவர்களோடு சேர்ந்து இந்தமாதம் 118 பேர் கொவிட் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 3058 பேர் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். உயிரிழந்தோரின் தொகை 29 ஆக அதிகரித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது டெங்கு தீவிரமாக பரவி வருகின்றது.

குறிப்பாக பனங்கட்டுகொட்டு, பெரியகடை, சின்னக்கடை, மூர்வீதி, தோட்டவெளி மற்றும் பேசாலை பகுதிகளில் டெங்கு நோயாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவரை இந்த வருடம் மொத்தமாக 83 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இரண்டு வருடங்களின் பின்னர் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பெருவிழா

**மன்னார்குறூப் நிருபர்**



மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய வருடாந்த பெருவிழா திருப்பலி, நேற்று புதன் கிழமை (08) காலை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப் பட்டது.

பேசாலை பங்குத் தந்தை, அருட்தந்தை ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை , அருட்தந்தை மாக்கஸ் அடிகளார், அருட்தந்தை எமிலியானுஸ் பிள்ளை ஆகியோர் இணைந்து, திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப் பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம் பெற்று,பக்தர்களுக்கு மறைமாவட்ட ஆயரினால் திருச்சொரூப ஆசி வழங்கப்பட்டது.இதில்,

அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மற்றும் கிராம மக்கள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நாட்டில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக குறித்த ஆலயத்தின் திருவிழா கடந்த இரண்டு வருடங்களாக இடம் பெறாத நிலையில், இவ்வருட திருவிழா, சிறப்பாக இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு திருட்டு

**மாங்குளம் குறூப் நிருபர்**



வரலாற்று சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு,பணம் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.இதுபற்றி ஆலய நிர்வாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளது.

இதையடுத்து ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# சமாதான முன்னெடுப்புக்களில் பெண்களை வலுவூட்டும் திட்டம்

**யாழ்.விஷேட நிருபர்**



சமாதான முன்னெடுப்புக்களில் பெண்களை வலுவூட்டும் திட்டம் யாழ்ப்பாணம், அம்பாறை, குருநாகல் ஆகிய மூன்று மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதில், பல பொது நிறுவங்கள் கூட்டாக செயற்படுகின்றன.

குறிப்பாக பொருளாதார முன்னெடுப்பில் பெண்களை வலுப்படுத்துவது தொடர்பான பயிற்சிகளை க்ராமீன் நிறுவனம் முன்னின்று செயற்படுத்துகின்றது.

அந்தவகையில், இதன் செயற்பாடாக நேற்றைய தினம் ஆரம்பமான பெண் சுயதொழில் முனைவருக்கான பயிற்சி செயலமர்வானது, எதிர்வரும் வியாழக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி செயலமர்வு கீறீன்கிறாஸ் விடுதியில் இடம்பெற்றுவருகின்றது. மாவட்ட பங்காளரான ஜே,எஸ்,எ,சீ நிறுவனம் இதனை ஒழுங்கமைத்துள்ளது.

# விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் அன்பளிப்பு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**



கைதடி கமநல சேவை நிலையப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 27 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமநாதன் இவற்றை பயனாளிகளுக்கு வழங்கினார். "வேர்ல்ட் விஷன்" நிறுவனத்தின் அனுசரணையுடன் இவை கொள்வனவு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் கைதடி கமநல சேவை திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் வாகீசன், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேல்,கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள்,பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு நேற்று (08) இடம்பெற்றது.

# கிழக்கின் குரல்



# கட்டுமுறிவு கிராமத்தில் பாம்பு தீண்டி உயிரிழந்த சிறுமியின் குடும்பத்துக்கு புதிய வீடு

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் ஆரம்பித்து வைப்பு

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கட்டு முறிவு கிராமத்தில் வருமானம் குறைந்த குடும்பம் ஒன்றுக்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஊடாக, புதியவீடு அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பின்தங்கிய பிரதேசமான கட்டு முறிவு கிராமத்தில், ரவீந்திரன் கிருத்திகா எனும் 4 வயது சிறுமிக்கு பாம்பு கடித்தது. அக் கிராமத்துக்கான பாதை சீரற்ற நிலையில் காணப்பட்டமையினால் மூன்று மணித்தியாலயத்தின் பின்பே கதிரவெளி பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டு, பின் சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.



சிறுமியின் உயிர் இழப்பு பிரதேச மக்கள் மத்தியில் பாரிய சோகத்தை ஆழ்த்தியது, அந்த சந்தர்ப்பத்தில் சம்பவ இடத்துக்கு விரைந்த இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், உயிரிழந்த சிறுமியின் பெற்றோரை சந்தித்தார். தாம் வாழ்ந்து வந்த ஓலைக்குடிசை சீரமைக்கப்பட்டு இருந்தால் இவ்வாறு நிகழ்ந்திருக்காது என்றும், தமது பிரதேசத்தில் இருந்து வைத்தியசாலைக்கு செல்லும் பிரதான வீதி சீரற்ற நிலையில் காணப்படுகின்றமை குறித்தும் தெரிவித்திருந்தனர்.

அச் சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் அந்த கிராமத்திற்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதாக தெரிவித்திருந்தார்.

அந்த வாக்குறுதியின் ஒரு கட்டமாக உயிரிழந்த சிறுமியின் ஓலைக் குடிசைக்கு பதிலாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக புதிய வீடு அமைத்துக் கொடுப்பதற்கான வேலை திட்டம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டு வீட்டிற்கான வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# இடைக்கால வேளாண்மை செய்கை வெற்றியளிப்பு

(ஏறாவூர் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த நாற்பது வருடகாலத்தின் பின்னர், பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட இடைக்கால நெல் வேளாண்மை செய்கை பாரிய வெற்றியளித்துள்ளது.

மட்டக்களப்பு வந்தாறுமூலை பெருவெளிக் கண்டம் பிரதேசத்தில் சுமார் 170 ஏக்கர் வயல் நிலத்தில் 55 விவசாயிகள் இம்முறை இடைக்கால நெல் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டனர்.

தற்போது இவர்களுக்கு சிறப்பான விளைச்சல் கிடைத்துள்ளதனால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பெரும்போகம் மற்றும் சிறுபோகம் பயிர்ச் செய்கை காலத்திற்கிடைப்பட்ட காலத்தில் 'ஏத்தாழை" என்று பாரம்பரிய சொல்கொண்டு அழைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட இடைக்கால நெற்பயிர்ச் செய்கை நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த சுமார் நாற்பது ஆண்டுகாலமாக கைவிடப்பட்டிருந்தது.

இவ்வாண்டில் மீண்டும் செய்கை பண்ணுவதற்கு விவசாயிகள் மேற்கொண்ட முயற்சிக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் உரிய நேரத்திற்கு நீரைவழங்கி ஒத்துழைப்பு வழங்கியதையடுத்து, அறுவடையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுக்கு விவசாயிகள் தமது நன்றியினைத் தெரிவித்துள்ளனர்.

# மழைவெள்ளத்தில் அள்ளுண்ட வீதி; கவனிக்காமலிருக்கும் அதிகாரிகள்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மண்டூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட ஆனைகட்டியவெளி நெடிய வட்டை பிரதான வீதி அண்மையில் பெய்த பலத்த மழை வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளதனால் அவ் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி இவ்வாறு சேதமடைவதுவும், அதனை அப்பகுதி மக்கள் சிரமதானத்தின் மூலம் புனர்நிர்மாணம் செய்வதுமாகத்தான் இதுவரையில் இருந்து வருகின்றது. இதனை நிரந்தரமாக புனரமைப்புச் செய்துதர அதிகாரிகள் முன்வரவேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை முன் வைக்கின்றனர்.

இவ்வீதியின் புனரமைப்பு தொடர்பில் போரதீவுப்பற்று பிரதேச சபையின் தவிசாளரிடம் கேட்ட போது,

குறித்த வீதி மாரிமழை காலத்தில் பழுதடைவது வழக்கமாகவுள்ளது. இவ்வீதியை எமது பிரதேச சபைக்குக் கையளிக்குமாறு நாம் பலதடவை கோரிக்கை விடுத்துள்ளபோதிலும், அதனை அவர்கள் செய்யாமலுள்ளார்கள். இருந்தும் கடந்த வருடம் நாம் அவ்வீதியை ஓரளவு புனரமைப்பு செய்தோம். அது தற்போது மீண்டும் உடைப்பெடுத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

# திருமலையில் பஸ் விபத்து; சாரதிக்கு கொரோனா தொற்று

(ரொட்டவெவ குறுப் நிருபர்)



திருகோணமலை கண்டி பிரதான வீதி மங்குபிரிஞ் பகுதியில் ஆடை தொழிற்சாலைக்கு சொந்தமான தனியார் பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் 38 பேர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. குறித்த விபத்து செவ்வாய்கிழமை (07) 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளானவர்கள் கோமரங்கடவல மொரவெவ மற்றும் கன்னியா பகுதியிலிருந்த 20 க்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றி வரும் இளைஞர் யுவதிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் வேளையில் பஸ்களை முந்திச் செல்ல முற்பட்ட போதே இவ் விபத்து இடம் பெற்றதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

பஸ் சாரதி படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து குறித்த நபருக்கு மேற்கொள்ளப்பட்ட அண்டிஜன் பரிசோதனையின் மூலம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

மேலும் இவ்விபத்து தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

# மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சடலம் மீட்பு

(பெரியநீலாவணை விசேட, மருதமுனை நிருபர்கள்)

உருக்குலைந்த நிலையில் மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. கல்முனை பிரதேச செயலகத்துக் குட்பட்ட மருதமுனை பொலிஸ் பிரிவில் புதன்கிழமை (8) காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய ஸ்தலத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலம் குறித்து ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அத்துடன் சடலம் மீட்கப்பட்ட மருதமுனை கடற்கரை பகுதிக்கு பொலிஸாரால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இம்மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். மேலும் குறித்த சடலம் அடையாளம் காண முடியாத நிலையில் உருக்குலைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக நாடு பூராகவும் உள்ள கடற்கரைப்பகுதிகளில் உருக்குலைந்த நிலையில் சடலங்கள் கரையொதிங்கி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் முதலாவது மகப்பேறு அறுவை சிகிச்சை

(நிந்தவூர் குறுப் நிருபர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் முதலாவது மகப்பேற்று அறுவை சிகிச்சை வெற்றியளித்துள்ளது. நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு புதிதாக நியமனம் பெற்று வந்த, மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் மதுச ராஜகர்ணாவினால் இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, தற்போது தாயும், சேயும் நலமாக உள்ளனர்.

செவ்வாய்க்கிழமை (07) காலை 10.30 மணியளவில் இந்த சத்திர சிகிச்சை இடம்பெற்றுள்ளது. இந்த வைத்தியசாலையில் கடமை புரியும் உத்தியோகத்தர் ஒருவரே பெண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்.

இந்த செய்தியை அறிந்து கொண்ட சமூக நலன் விரும்பிகள், வைத்தியசாலைக்குச் சென்று, வைத்தியரை நேரில் பாராட்டியதுடன், நம்பிக்கையுடன் பிரசவத்தை மேற்கொள்வதற்கு சம்மதித்த குறித்த வைத்தியசாலையின் உத்தியோகத்தருக்கு பரிசினை வழங்கி வருகின்றனர்.

# மூதூர் பிரதேச சபை பட்ஜட் நிறைவேற்றம்

(மூதூர் தினகரன் நிருபர், கந்தளாய் தினகரன் நிருபர்கள்)

மூதூர் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டம் 20 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்டுள்ள நிலையில், வெற்றி பெற்றுள்ளது.

மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அருஸ் தலைமையில் செவ்வாய்க்கிழமை (07) சபை கூடிய நிலையில் 24 உறுப்பினர்கள் கொண்ட இச்சபையில், மூவர் சமூகம் கொடுக்காத நிலையில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் எதிராக வாக்களித்தும், பெரும்பான்மையாக இருபது வாக்குகள் அளிக்கப்பட்டு பட்ஜட் நிறைவேற்றப்பட்டுள்ளது.



கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் கோவிட் 19 நோய் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து பிரதேச கொரோனா குழு திங்கட்கிழமை (6) கூடியது. இந்நிகழ்வில் மாவட்ட சுகாதார வைத்திய பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸ் அதிகாரி, உதவி திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டபோது.
(படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

# கோமாரியில் காட்டு யானை அட்டகாசம்

(காரைதீவு குறுப் நிருபர்)



காட்டுயானை அட்டகாசத்தால் மக்கள் பாரியசேதங்களை சந்திப்பதுடன் அச்சத்துடன், வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் எழுந்துள்ளது.இந்நிலைமை அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்திலுள்ள கோமாரி பிரதேசத்தில் நிலவிவருகிறது.

புதன்கிழமை (08) அதிகாலை, கோமாரி செல்வபுரக்கிராமத்துள் புகுந்த தனியன் யானை வீடு வீடாய்ச் சென்று சேதத்தை விளைவித்துச் சென்றுள்ளது. மக்கள் பயபீதியுடன் அலயடித்துக் கொண்டு ஓடினர்.

வீட்டுக்குள்ளிருந்த நெல்மூடைகளை உறிஞ்சிக்குடித்துள்ளது. புதன்கிழமை (8) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கோமாரி பிரதேசத்திற்கான பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் த.சுபோதரன் சம்பவத்தையறிந்து கிராம சேவையாளருக்கு அறிவித்துவிட்டு ஸ்தலத்திற்கு விரைந்தார். தொடர்ச்சியாக இந்த தனியன் யானையொன்று அட்டகாசத்தை செய்துவருகிறது. பொதுமக்கள் கோமாரி பிரதேசத்திற்கான பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் த.சுபோதரன் மற்றும் கிராம சேவையாளரூடாக தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித நடவடிக்கயும் எடுக்கப்படுவதில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்தவாரம் இப் பிரதேசத்திலுள்ள காட்டுமடு எனும் வயற் பிரதேசத்தில் ஆலையடிவேம்பு கண்ணகிபுரத்தைச் சேர்ந்த து.கஜேந்திரன் (வயது24) இளம் விவசாயி ஒருவர் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

# கவிதை நூல் வெளியீட்டு விழா

(கல்லாறு தினகரன் நிருபர்)

பட்டிப்பளை பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில், கிராமிய கலைச் சுடர் கவிஞர் மு.குணரெத்தினத்தின் 'காலமும் காலனும்' கவிதைநூல் வெளியீட்டு விழா அம்பிளாந்தறை கலாசார மண்டபத்தில் கவிஞர் த.மேகராசா தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெறும்.

பிரதம அதிதிகளாக மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளர் கலாநிதி முருகு தயாநிதி மற்றும் ஓய்வுநிலை வலய கல்வி பணிப்பாளர் க.சத்தியநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

# பொத்துவில் வைத்தியசாலையில் தோல் நோய் கிளினிக்

(பாலமுனை விசேட நிருபர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் பிரதி மாதம் தோறும் தோல் நோய்க் கிளினிக்கினை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த கிளினிக்கில் கலந்துகொண்டு சிகிச்சை பெற விரும்புவோர் வைத்தியசாலைக்கு சமுகமளித்து தங்களது பெயர்களை பதிவு செய்துகொள்ள வேண்டும் என அவ் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


பொத்துவில் மற்றும் அதனை அன்டிய பிரதேச மக்களின் நலன் கருதி பொத்துவில் ஆதார வைத்தியசாலையில், தோல் நோய்க் கிளினிக்கினை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம். இந்தக் கிளினிக்கினை பிரதி மாதம் தோறும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த கிளினிக் சேவையினை வைத்தியசாலையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளோம்.

இந்நிகழ்வில் தோல் நோய் வைத்திய நிபுணர் டொக்டர் ஐ.எல்.மாஹில் கலந்துகொண்டார். இந்தக் கிளினிக்கில் கலந்துகொண்டு சிகிச்சை பெற விரும்பும் நோயாளர்கள் பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு சமுகமளித்து தங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள வேண்டும்.

# மூதூரில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

(தோப்பூர் குறுப் நிருபர்)



மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியபாலம் பகுதியில் உள்ள வீடொன்றில் செவ்வாய்க்கிழமை (07) மாலை சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது எரிவாயு அடுப்பு முழுமையாக சேதமாகியுள்ளதோடு, எவருக்கும் காயமேற்படவில்லை. தொடர்ச்சியாக சிலிண்டரிலிருந்து கேஸ் வெளியாகிக் கொண்டிருப்பதை காணமுடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையடுத்து குறித்த வீட்டுக்கு மூதூர் பொலிஸார் வருகைதந்து நிலைமைகளை பார்வையிட்டு சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பாறையில் உரம், இரசாயன நாசினிகள் அதிக விலைக்கு விற்பனை

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

நெல் உற்பத்தியின் போது பிரயோகிக்கப்படும் உரவகைகள், களைநாசினி, கிருமிநாசினி உள்ளிட்ட இரசாயனங்கள் அம்பாறை மாவட்டத்தில் அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெற்செய்கைக்கு பயன்படுத்தப்படும் களை நாசினிகள், கிருமி நாசினிகள், உர வகைகள் என்பன பட்டியல் விலையை விடவும், அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். சந்தையில் யூரியா உரம் தட்டுபாட்டைத் தொடர்ந்து, இம்முறை பெரும்போகம் உரவகைகள் மற்றும் ஊட்டச்சத்து உரவகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், விலையும் கணிசமானளவு அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

# கிழக்கின் குரல்



# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் டெங்கு நோய் தாக்கம் அதிகரிப்பு

## மக்கள் அவதானமாக செயற்படுமாறு பணிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக் குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறு, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் தொடக்கம் இது வரை 242 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மாவட்டத்தில் தற்போது பருவகால மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாகவும் கூறினார்.



கொரோனா தொற்று தாக்கத்திலும் கல்முனை பிரதேசத்தில் ஒருங்கிணைந்த சுகாதார மேம்பாட்டு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஊடாக, டெங்கொழிப்பு நடவடிக்கையினை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகள் தோறும் டெங்கொழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, புகை விசிறும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினர், டெங்கொழிப்பு செயலணி, சமூக மட்ட தலைவர்கள் ஆகியோர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல் செய்யவுள்ளதாகவும் கூறினார். வீடுகளுக்கு வரும் டெங்கொழிப்பு குழுவினருக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுள்ளார்.

பொத்துவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு ஆகிய சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் அதிகமாக டெங்கு நோய் பரவக் கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக் காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்திற்குள் துப்பரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தேங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக வைத்து கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

# துறைநீலாவணையில் விசர் நாய்கடி தொடர்பான விழிப்புணர்வு

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதார பணிமனைக்குட்பட்ட துறைநீலாவணை கிராமத்தில் விசர் நாய்க்கடி தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ஜீவிதன் தலைமையில் நடைபெற்றது.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதார பணிப்பாளர் டொக்டர் எஸ்.இராஜேந்திரன் வழிகாட்டலில், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் பிராந்தியத்தில் பொதுமக்கள் மத்தியில் பல்வேறு விழிப்புணர்வு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய கட்டாக்காலி நாய்களினாலும், விசர் நாய்களினாலும் பாதிக்கப்படுவோர்களின் வீதம்



இங்குள்ள கிராமங்களில் அதிகரித்துள்ளது. இதனையிட்டு விசர் நாய்க்கடி தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தும் கருத்தரங்குகள் பிரதேச ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன.

துறைநீலாவணை கிராமத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு கருத்தரங்கில், கிராமசேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுக நல அமைப்புக்களின் பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைதான 10 பேர் விடுதலை

பாசிக்குடா நிருபர்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஸ்டித்தார்கள் என்ற குற்றச்சாட்டில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 10 பேர் நேற்று புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கும்புறுமூலை கடற்கரையில் கடந்த 2021 மே 18 இல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஸ்டித்தார்கள் என்ற குற்றச்சாட்டில், 2 பெண்கள் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டு பிணை மறுக்கப்பட்டு 7 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

# ஆசிரியர் இடமாற்றங்கள் நியாயமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்

## திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்

(தோப்பூர் குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றங்களை நியாயமான முறையில் முன்னெடுக்குமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஆசிரியர்களை சமப்படுத்தல், பதிலீட்டு ஆசிரியர்களை வழங்குதல் என்ற தலைப்பின் கீழ் கடந்த 3 ஆம் திகதியிடப்பட்டு தங்களது இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட ஆசிரியர் இடமாற்றப்பட்டியலில் கிண்ணியா வலயத்திலிருந்து 51 ஆசிரியர்கள் வெளி வலயங்களுக்கு இடமாற்றப்படும் அதே வேளை, 2 ஆசிரியர்கள் மட்டுமே அதற்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பட்டியலின்படி ஒரு பாடசாலையில் உயர்தர வகுப்புக்கு கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் இடமாறப்படும் அதேவேளை, அப்பாடசாலைக்கு பதிலாசிரியர்கள் நியமிக்கப் படவில்லை. இதனால் அப் பாடசாலையில் உயர்தர வகுப்புக்களை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



வெளி மாகாணங்களிலும், வெளி வலயங்களிலும் நீண்ட காலம் பணியாற்றி சமீப காலங்களில் கிண்ணியா வலயத்திற்கு இடமாற்றம் பெற்றவர்களும் இந்த இடமாற்றப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தங்களால் வெளியிடப்பட்டுள்ள இந்த இடமாற்றப்பட்டியல் வலயக் கல்வி அலுவலகத்தின் துணையின்றி மாகாண கல்வித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டதாகவே நான் உணர்கிறேன். ஏனெனில் வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து ஆசிரியர் பட்டியல் பெறப்பட்டிருந்தால் மேலதிக ஆசிரியர்கள் இருந்தால் மேலதிக ஆசிரியர்களின் விபரங்களை அவர்கள் வழங்கியிருப்பார்கள்.

ஆனால் மேலதிக ஆசிரியர்கள் இல்லாத பல பாடசாலைகளில் அங்கு இருக்கின்ற ஆசிரியர்கள் இங்கு பட்டியலிடப்பட்டிருக்கின்றார்கள் என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

கிண்ணியா கல்வி வலயம் தேசிய மட்டத்திலும், மாகாணத்திலும் தொடர்ந்து பின்தங்கிய வலயமாக இருந்து வருவதை தாங்கள் அறிவீர்கள். இந்நிலையில் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் இந்த செயற்பாடு இந்த வலயத்தை தொடர்ந்தும் பின்னிலையில் இருக்க துணை புரியும் என்பதையும் நினைவு படுத்த விரும்புகின்றேன் என தெரிவித்துள்ளார்.

# வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலி



(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை இளைஞர் சபையின் ஏற்பாட்டில் பாலமுனை அரச ஹோமியோபதி வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (7) வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சம்மேளனம் மற்றும் பாலமுனை இளைஞர் சபையின் தலைவருமான ஏ.எல்.எம். சீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஹோமியோபதி வைத்தியசாலை வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி பிரவீனா உட்பட இளைஞர் சபையின் நிருவாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பாலமுனை ஹோமியோபதி வைத்தியசாலையில் நிலவி வந்த சக்கர நாற்காலி பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யுமுகமாக பாலமுனை இளைஞர் சபையினால் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் பாலமுனை கிளையிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வைத்தியசாலைக்கான இச்சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் இரு வேறு விபத்து; நால்வர் படுகாயம்

வீதியில் பயணம் செய்த அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு சொந்தமான பிக்கப் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை மீறி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இறக்காமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வரிப்பத்தான்சேனை வீதியினூடாக பயணம் செய்த பிக்கப் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி புதன்கிழமை (8) விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தின் போது வாகனத்தில் பயணம் செய்த பிரதேச சபை பிரதி தவிசாளர் உட்பட இருவர் காயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் வாகனம் முற்று முழுதாக சேதமடைந்துள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.







திருக்கோவில் பிரதேச சுகாதார பிரிவில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ், செவ்வாய்க்கிழமை (07) தம்பிலுவில் பிரதேசத்திலும், விநாயகபுரம் பிரதேசத்திலும் சுகாதார அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட டெங்கு சோதனையின் போது.

# கிழக்கு பாடசாலைகளில் பாரம்பரியகலை கலாசாரங்களை வலுப்படுத்த வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்

கிழக்கு மாகாண தமிழ்மொழி மூல பாடசாலைகளில் பாரம்பரிய தமிழ் கலைகலாசார பண்பாடுகளை வலுப்படுத்துவது அவசியமாகும், இதன் ஊடாகவே எமது எதிர்கால சந்ததியினருக்கு எமது பாரம்பரிய தமிழ்கலை, கலாசார பண்பாட்டினை கொண்டு செல்ல முடியும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் பல பாடசாலைகள் பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றது. இப் பாடசாலைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை கண்டறியும் வகையில், மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி பிள்ளை நாயகம் மற்றும் இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மாகாண பாடசாலைகளின் அபிவிருத்தி சங்க நிர்வாக செயலாளர் ஆகியோரின் பங்குபற்றலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதனைத் தெரிவித்தார்.

மாகாண பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் மாகாண பாடசாலைகளை தரம் உயர்த்துவது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் நமது பாரம்



பரிய தமிழ் கலை, கலாசார பண்பாடுகளை வலுப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

இதன் ஊடாகவே எமது எதிர்கால சந்ததியினருக்கு எமது பாரம்பரிய தமிழ் கலை கலாசார பண்பாட்டினை கொண்டுசெல்ல முடியும். எமது மாணவர் சமூகம் மத்தியில் தமிழ் கலாசார பண்பாட்டு உணர்வினை கொண்டு செல்லும் வகையில் பாடசாலையில் தினமும் தமிழ் மொழி வாழ்த்து பாடும் நடவடிக்கைகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்துவது கட்டாயமாக்கப்பட வேண்டும் என இராஜங்க அமைச்சர் தெரிவித்தார்.

எமது தமிழ் பாரம்பரிய கலை கலாசார பண்பாட்டு அம்சங்களை மாணவர்கள் மத்தியில் ஊக்கப்படுத்தும் ஒரு நிகழ்வாக தமிழ்மொழி தின போட்டிகள் பல்வேறு அம்சங்களை கொண்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது, எனினும் கடந்த 2016 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ்மொழி தினபோட்டிகளில் ஈழத்து கலை கலாசார பண்பாட்டினை பிரதிபலிக்கும் கிழக்கு மாகாணத்துக்கு உரித்தான கலை நாட்டுக் கூத்துக்கள் கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் நீக்கப்பட்டிருக்கிறது.

அதனை மீண்டும் இணைத்துக் கொள்வதற்கு 2022ஆம் ஆண்டு முதல் குறித்த நாட்டுக்கூத்துக்கள் தமிழ்மொழி தின போட்டிகளில் உள்வாங்கி மாணவர்களை ஊக்குவித்து தேசிய மட்டங்களிலும் அதனைக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லப்படும் என்றார்.

# கிண்ணியாவில் மேலும் மூன்று பாடசாலைகள் தெரிவு

(கிண்ணியா மத்திய நிருபர்)

கிண்ணியா கல்வி வலயத்தில் 13 வருட உத்தரவாத கல்வி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் மூன்று பாடசாலைகள் கல்வி அமைச்சினால் உள்வாங்கப்பட்டுள்ளன.

கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயம், கிண்ணியா அல் இர்பான் மகா வித்தியாலயம், கிண்ணியா தாருல் உலூம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த பாடசாலைகளில் குறித்த கல்வி நடவடிக்கையினை அடுத்த வாரம் ஆரம்பிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என, வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. நசூகர்கான் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

13 வருட உத்தரவாத கல்வித் திட்டம் தொடர்பாக திங்கட்கிழமை (6) கிண்ணியா வலய கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற போதே, அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

ஏற்கனவே, கிண்ணியா வலயக் கல்வி அலுவலக பிரிவுக்குட்பட்ட மூன்று பாடசாலைகளில் இந்த கல்வித் திட்டம் அமுல்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 10 மாதங்களில் 91 புதிய கைத்தொழில்கள் ஆரம்பித்து 4000 மில்லியன் ரூபா முதலீடு



## புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க ரூ. 5000 மில். ஒதுக்கீடு -கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச

கடந்த 10 மாதங்களில் 91 புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாக 4000 மில்லியன் ரூபா நேரடி முதலீடு செய்யப்படுகிறது. புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக நிதி அமைச்சரினால் 5000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சு மற்றும் ராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சில நாடுகள் தமது நாடுகளில் சினிமா துறையை கைத்தொழிலாக அங்கீகரிக்கவில்லை. அவ்வாறு அங்கீகரிக்காவிட்டால் யுனெஸ்கோ உதவிகள் கிடைப்பதில்லை. நாம் சினிமா துறையை கைத்தொழிலாக அங்கீகரித்துள்ளோம்.

முதலீட்டாளர்கள் இங்கு முதலிட வந்தால் பல இடங்களில் சுற்றித் திரிந்து திரும்பிச் செல்லும் நிலை உள்ளது. புதிய கைத்தொழில்களை பெற காணி கோரியுள்ளனர். புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக நிதி அமைச்சரினால் 5000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. திருகோணமலை, வெலிகம உட்பட பல கைத்தொழில் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10 மாதங்களில் 91 புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாக 4000 மில்லியன் ரூபா நேரடி முதலீடு செய்யப்படுவதோடு 8042 தொழில்வாய்ப்புகள் உருவாகும். இந்த வருடத்தில் 147 புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில் இந்த வருடம் 950 மெற்றிக் தொன் கடதாசி உற்பத்தி செய்யப்பட்டது. பழைய இரும்பிற்கு விற்க இருந்த தொழிற்சாலையின் வாயிலாக இன்று பயன் கிடைத்து வருகிறது.

பாகிஸ்தானில் நடந்த அடிப்படைவாத தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம். பாகிஸ்தானுக்கு பல்லாயிரம் கண்கள் தானம் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சரின் கருத்தை கண்டிக்கிறோம்.

அன்று விதைத்ததன் அறுவடையை இன்று பெறுகிறோம். கடன், மோசடி அனைத்து அறுவடையும்இன்று கிடைக்கிறது.

**வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன**

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்திருக்காவிட்டால் உயர்தரத்திற்கு தொழில்நுட்ப பாடம் ஆரம்பிக்கப்பட்டிருக்காது. பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப கற்கை ஆரம்பிக்கப்பட்டிருக்காது. முதலில் 100 பாடசாலைகளில் இந்த பாடத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் 100 பாடசாலைகளில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 200 பாடசாலைகளில் இது ஆரம்பிக்கப்பட்டது. அமைச்சரவை பத்திரங்களை ஜனாதிபதி சமர்ப்பிப்பதில்லை .அதிகாரிகள் தான் அதனை தயாரிக்கின்றனர். அவர்கள் தான் அமைச்சரவை பத்திரங்களுக்கு பொறுப்பு கூற வேண்டும்.

சதொச நிறுவனம் 2014 3.4 பில்லியன் 2019 இல் 2.5 பில்லியன்களாக இருந்தது. 20 பில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. 2014 இல் இருந்து விநியோகஸ்தர்களுக்கு 8 பில்லியன் வழங்க வேண்டும். நிதி அமைச்சிலுள்ள பணிப்பாளர்களுக்கு இது தெரியாதா? 2021 இல் சதொச நஷ்டம் குறைக்கப்பட்டுள்ளது. நான் மோசடிகளுடன் தொடர்புபட்டிருப்பதாக நிரூபித்தால் அரசியலில் இருந்து முழுமையாக ஒதுங்குவேன்.

**எஸ்.எம்.மரிக்கார் எம்.பி (ஐ.ம.ச)**

உள்நாட்டில் பயன்படுத்தும் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. பணம் இல்லையென்று கூறிக்கொண்டு வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய உள்ளனர். இதற்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது. கடந்த காலத்தில் அதிக கடன் பெறப்பட்டன. ஆனால் 5 சதம் கூட வருமானம் கிடைக்காத திட்டங்களுக்கு கடன் பெறப்பட்டன. மூன்றில் இரண்டு பெரும்பான்மையே அரசிடம் உள்ளது. முடிந்தால் தேர்தல் நடத்துங்கள். உள்ளூராட்சி சபைகளின் காலம் பெப்ரவரியில் நிறைவடைகிறது. ஒரு வருடம் நீடிக்காமல் தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்தினால் ஆட்சியை கவிழ்ப்போம். வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக முன்வைத்துள்ள திட்டங்களுக்கு எவ்வாறு வருமானம் ஈட்டப் போகிறீர்கள் என்றார்.

குறுக்கீடு செய்த அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன,

இதற்கு முன்னரும் நாம் உரிய நேரத்தில் தேர்தலை நடத்தினோம். இனியும் நடத்துவோம் என்றார்.

**முஜிபுர் ரஹ்மான் எம்.பி (ஐ.ம.ச)**

விலைக்கட்டுப்பாட்டுக்காக பல வர்த்தமானிகள் வெளியிடப்பட்டன. ஆனால் இறுதியில் வர்த்தகர்களுக்கு தலைசாய்க்க நேரிட்டது. வெள்ளைப்பூண்டு மோசடியானது மத்திய வங்கி மோசடியை விட பாரியது. இதனை நிதி அமைச்சு மீதான குழுக்கூட்டத்தில் அமைச்சு அதிகாரிகள் ஏற்றுக் கொண்டார்கள்.

நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளார். இது அரசாங்க நிதியமா? இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டதா?

குறுக்கீடு செய்த அமைச்சர் பந்துல குணவர்தன, எனது தனிப்பட்ட நிதியில் 100 இலட்சம் இட்டு இந்த நிதியை ஆரம்பித்தேன். இதற்கு பலர் உதவினர். 2 கோடி ரூபா வரை நிதியத்திற்கு பணம் சேர்ந்துள்ளது. எனது சிஷ்யர் என்ற வகையில் அவரும் இதற்கு பங்களிக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய முஜீபுர் ரஹ்மான் எம்.பி

உள்நாட்டு பாதணி உற்பத்திக்கு மூலப்பொருட்கள் கொண்டு வர பணமில்லாத போதும் திராட்சை, அப்பிள் என்பன கொண்டு வர பணம் இருக்கிறது. அவை எங்கும் குறைவின்றி உள்ளன. உள்நாட்டு கைத்தொழில்களை கொண்டுவரத் தான் டொலர் கிடையாது. கைத்தொழிற்துறைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. பொருட்கள் விலையேற்றத்தை தாங்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதனால் எதிர்வரும் நாட்களில் வீதியில் இறங்க இருக்கிறார்கள்.

**இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர:**

வரலாற்றில் முதல் தடவையாக லக்சல நிறுவனம் மூலம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

சுமார் 5 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான எமது உற்பத்திப் பொருட்கள் முதல் தடவையாக கொள்கலன்கள் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பத்திக் போன்ற உடைகள் வழமையாக வெளிநாடுகளில் சீசன்கள் நிறைவு பெற்றதும் குறைந்த விலையில் அங்கு பெற்றுக் கொள்ளப் பட்டு கொழும்பு போன்ற நகரங்களில் அதிகரித்த விலையில் விற்கப்பட்டு வருகின்றன. அவ்வாறான இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இறக்குமதியை குறைத்து உள்ளூர் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் மூலம் 100 மில்லியன் டொலர்களுக்கு அதிகமாக நாம் மீதப்படுத்திய முடியும் .

**அனுரகுமார திசாநாயக்க: ஜே.வி.பி. எம். பி**

நாட்டில் அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அதிகரித்து காணப்படும் நிலையில் மக்கள் பெரும் வாழ்க்கைச் சுமையை அனுபவித்து வரும் காலகட்டம் இது. அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டு பல வர்த்தமானிகள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் இதுவரை அந்த கட்டுப்பாட்டு விலைகள் நடைமுறைக்கு வரவில்லை. பொலநறுவைக்குச் சென்று அரிசி ஆலைகளை சுற்றிவளைத்து 700 மெட்ரிக் தொன் நெல் கொண்டு வரப்பட்டது. இத்தகைய வெற்று பிரசாரங்கள் மூலம் அரிசி விலையை கட்டுப்படுத்த முடியாது.

அதேவேளை 20 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டில் அரிசி விலையை கட்டுப்படுத்த முடியுமா என நான் கேட்க விரும்புகின்றேன். எமது நாட்டிற்கு 20 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி என்பது ஒரு நாளைக்குத் தேவைப்படும் அளவாகும்.

உள்ளூர் உற்பத்தியாக 54 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல் விளைச்சல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது எமது அரிசி தேவைக்கு மேலதிகமாகவும் உள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன அமைச்சரவை பத்திரங்களை முறையாக செயல்படுத்துவதில் அதிகாரிகளின் அசமந்தப் போக்கு காணப்படுவதாக குறிப்பிட்டார். அதிகாரிகளை காரணம் காட்டி அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பிக்கும் பொறுப்புள்ள அமைச்சர்கள் அதிலிருந்து நழுவி விட முடியாது. அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் அனைத்து அமைச்சரவை பாத்திரங்களுக்கும் அதனை சமர்ப்பிக்கும் அமைச்சர்களே முழு பொறுப்பு கூறவேண்டும். அதனை அதிகாரிகள் தலையில் போட்டுவிட்டு கை கழுவி விட முடியாது.

வர்த்தக அமைச்சர் கடந்த ஜூன் மாதத்தில் சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட மாட்டாது என தெரிவித்தார். எனினும் சமையல் எரிவாயுவின் விலை 1500 ரூபாவுக்கு மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**காவிந்த ஜெயவர்தன எம்.பி**

பயங்கரவாதமும் அடிப்படைவாதமும் தலைதூக்கி இடமளிக்கக் கூடாது. அடிப்படைவாதம் காரணமாக பிரியந்த கொல்லப்பட்டார். பாகிஸ்தான் பிரதமர் எடுத்த நடவடிக்கைகளை வரவேற்கிறேன். பிரியந்தவின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் டொலர் வழங்க வர்த்தக சமூகம் முன்வந்துள்ளது. இறந்த பிரியந்தவின் பிள்ளைகளிடம் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் மன்னிப்பு கோர வேண்டும்.

**செல்வம் அடைக்கலநாதன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி)**

எங்கள் பிரதேசங்களில் பனைகளில் கிடைக்கும் பல பொருட்களை மக்கள் உற்பத்தி செய்கின்றனர். அதில் கூடுதலாக பெண் தலைமைத்துவ குடும்பங்களே ஈடுபடுகின்றன. அவர்களை பல கைப்பணிப்பொருட்களை செய்யும் வாய்ப்புக்கள் எமது பிரதேசங்களில் உள்ளன. இவ்வாறான நிலையில் வடக்குகிழக்கு மாகாணங்களில் இவ்வாறான உற்பத்திகளை எமது மக்கள் செய்தாலும் அவற்றை என்ன செய்வதென தெரியாதுள்ளனர்.

ஏனெனில் எமது மக்களின் உற்பத்திப்பொருட்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றன. ஊரில் திருவிழாக்கள் வந்தால் மட்டுமே அவற்றை விற்பனை செய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறான பொருட்களை சந்தைப்படுத்த கைத்தொழில் அமைச்சு என்ன செய்துள்ளதென்பதனை அறிவிக்க வேண்டும். எமது மக்களின் உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களை கைத்தொழில் அமைச்சு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**மின்வலு அமைச்சர் காமினி லொக்குகே**

நாட்டு மக்களின் பிரச்சினைகளை செவிமடுத்து அவற்றுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும்

அரசாங்கம், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையின் கொள்கையும் அதுவே . மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காகவே நாம் அரசாங்கத்தை அமைத்தோம் .

நாம் எத்தகைய பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வதற்கான வேலைத்திட்டத்தை வைத்துள்ளோம்.

கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலை மற்றும் உலக சந்தையில் பொருட்களின் அதிகரித்த விலை உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இம்முறை.வரவு செலவுத் திட்டம் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் இணைந்து மிகுந்த தூர தரிசனத்துடன் இந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து சமர்ப்பித்துள்ளனர். பல்வேறு துறைகளிலும் அபிவிருத்திக்கு இந்த வரவு செலவுத் திட்டம் உறுதுணையாக அமையும்.

அதேவேளை நாட்டில் எரிபொருளை தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுப்பதற்கும் மின்சாரத்தை தடையின்றி விநியோகிப்பதற்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நான் சுமார் 30 வருடங்களுக்கு மேல் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்துகிறேன். அந்தவகையில் எதிர்க்கட்சியினரின் விமர்சனங்களை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். என்றாலும் சேறு பூசும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது எதிர்க்கட்சி எப்போதும் விமர்சனங்களை முன்வைப்பதில் மட்டுமே கருத்தாய் செயல்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**செல்வராசா கஜேந்திரன்: ( தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி)**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தொடர்ந்து பல்வேறு வழிகளில் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் எமது கட்சியை உளரீதியாக அச்சுறுத்தவும் அரசியலிலிருந்து ஓரம் கட்ட வைக்கவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளாகும். யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் இதுவரை வழங்கப்படவில்லை. தேசிய பாதுகாப்புக்கென பாதுகாப்பு அமைச்சுக்கு பாரியளவில் நிதி இம்முறை வரவுசெலவுத் திட்டம் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனினும் வடக்கு, கிழக்கில் பாதுகாப்புப் படையினரால் மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.10 பேருக்கு ஒரு இராணுவ வீரர் வடக்குக்கு கிழக்கில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

நான் ஒருபோதும் அடிப்படைவாதம் பேசவில்லை. தமிழ் மக்கள் மாத்திரம்தான் இலங்கையில் வாழ வேண்டும் என நான் கூறவில்லை. வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு மாத்திரம் தான் சொந்தம் எனவும் நாங்கள் கூறவில்லை. நாட்டில் மூன்று இன மக்களும் ஒற்றுமையாக வாழவே விரும்புகிறோம் எனவும் தெரிவித்தார்.

யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்கிருந்த பல தொழிற்சாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளன. முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிப்பதாகக்கூறி பல கோடிகளை உலக நாடுகளிலிருந்து அரசாங்கம் பெற்றுகொண்டிருந்தபோதும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் எதனையும் செய்யவில்லை.

**சாணாக்கியன் எம்.பி (த.தே.கூ)**

ரோஹினி எம்.பி உள்ளிட்ட அனைத்து பெண் எம்.பிகளிடம் மன்னிப்புக் கோருகிறேன். அவரை கீழ்த்தரமான வார்த்தைகளினால் பேசியுள்ளனர். இவ்வாறு ஒரு எம்.பி பேசுகையில் அவரை சுற்றி இருந்த எம்.பிகள் சிரித்தபடி இருந்துள்ளனர். எனவே இது தொடர்பில் அனைத்து தாய்மார்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும். குறித்த எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்குமாறு கோரினோம்.

வடக்கு கிழக்கில் கைத்தொழிற்சாலைகள் அமைத்து கைத்தொழில்களை ஆரம்பித்தாலும் உற்பத்திகளை எடுத்துச்செல்ல அதனுடன் தொடர்புள்ள துறைகளை மேம்படுத்த வேண்டும். ஏறாவூர் புன்னக்குடா அழகிய கடற்பிரதேசம். அங்கு தொழிற்சாலை அமைப்பதை விட சுற்றுலாத் துறைக்கு உகந்த திட்டமொன்றை ஆரம்பித்திருக்கலாம் என்றார்.

குறுக்கீடு செய்த அமைச்சர் விமல் வீரவங்ச,

எமது அரசுக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட இடமே இது. புன்னக்குடாவில் ஆடைத்தொழிற்துறை சார்ந்த தொழிற்சாலையே ஆரம்பிக்கப்பட உள்ளது. சுற்றாடல் தொடர்பான பிரச்சினை இருந்தால் ஆட்சேபனை முன்வைத்திருக்கலாம் என்றார்.

சாணக்கியன் ராசமாணிக்கம் எம்.பி மேலும் குறிப்பிட்டதாவது,

ஒரு நாடு ஒரு சட்டம் செயலணி மூலம் நாட்டுக்கு வரும் முதலீடுகள் கூட பாதிக்கும். நாட்டில் எந்த நிமிடமும். குண்டு வெடிக்கலாம் என குழு தலைவர் கூறியிருந்தார். பாகிஸ்தானில் நடந்தது போன்ற சம்பவங்கள் இங்கும் நடந்தன. அதனை அந்த நாடு கண்டித்தது. 1983 கலவரத்தின் போது இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டார்கள் என்றார்.

அமைச்சர் விமல் விரவங்ச குறுக்கீடு செய்தார்.

பொலிஸாருக்கு விடுமுறை வழங்கி யாழ் நூலகத்தை எரித்தார்கள். வடக்கில் படையினர் கொல்லப்பட்டால் இங்கு பிரச்சினை வெடிக்கும். எனவே அதனையும் இதனையும் ஒன்றாக ஒப்பிட முடியாது. நீங்கள் கண்டி பாடசாலையில் கற்றவர் என்றார்.

சாணக்கியனம் ராசமாணிக்கம் எம்.பி மேலும் குறிப்பிடுகையில் 1956 இல் புலிகள் இயக்கமிருக்கவில்லை. அரசியல் ரீதியில் அவர்களின் தேவைகள் நிறைவேறாததால் தான் ஆயும் தூக்கினார்கள்.

ரோயல் பார்க் கொலையாளிக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இனவாதம், மதத்துடன் தொடர்புள்ள நபர்கள் பாகிஸ்தானில் தாக்கினார்கள். இங்கு பௌத்த அடிப்படைவாதம் உள்ளது. கிழக்கில் ஞானசார தேரரை யாரும் சந்திக்கவில்லை. கிழக்கிலுள்ள எந்த எம்.பியும் அவரை சந்திக்கவில்லை.

## பட்ஜட் விவாதம்



சபை நிருபர்கள்
லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்







## சீன பிரதித் தூதுவருக்கும் சபாநாயகருக்கும் இடையில் சந்திப்பு




சீன மக்கள் குடியரசின் பிரதித்தூதுவர் ஹூறவேய் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று (08) சந்தித்தார். பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் சீனா மற்றும் இலங்கைக்கிடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

# நகர்வலம்



## கேரள கஞ்சா விநியோகம்;

# முன்னாள் பிரதேச சபை உறுப்பினருக்கு 17ம் திகதி வரை விளக்கமறியல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

சட்டவிரோதமான விதத்தில் கொண்டுவரப்பட்ட கேரள கஞ்சா தொகையினை விநியோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நொச்சியாகம பிரதேச சபை முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் உட்பட மற்றுமொரு நபரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் பிரதான நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி சஞ்சய ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

போக்குவரத்து மற்றும் விநியோகம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நொச்சியாகம பிதேச சபை முன்னாள் உறுப்பினர் மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள அரச பட்டதாரி கணித ஆசிரியர் ஆகிய இருவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

சந்தேக நபர்கள் பயணித்த மோட்டார் வண்டியை பொலிசார் சோதனைக்கு உட்படுத்திய போது கருப்பு உரப்பை ஒன்றில் சுற்றப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 1 கிலோ 100 கிராம் கேரள கஞ்சா இரண்டு ஸ்மார்ட் கை அடக்க தொலைபேசி உள்ளிட்ட நான்கு தொலைபேசிகள், கஞ்சா விற்பனையின் மூலம் கிடைக்கப்பெற்ற 2,79,000 ரூபா பணம் என்பனவைகளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

பல வருடகாலமாக பெரிய அளவில் கேரள கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக வட மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய அநுராதபுரம் வெஸ்கிரிய பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை பயன்படுத்தி சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

இந்தியா கேரள மாநிலத்தில் இருந்து படகின் மூலம் சட்டவிரோதமாக மன்னார் கடற்கரைக்கு கஞ்சா விநியோகம் செய்யும் வியாபாரி ஒருவருடன் தொடர்புகளை ஏற்படுத்தி குறித்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிசார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.





ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கைக்கான கலீபதுல் குலபாவும், கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீபுமான மௌலவி ஜே. அப்துல் ஹமீத் (பஹ்ஜி) க்கு பூரண சுகம் வேண்டி விஷேட துஆப் பிரார்த்தனை நிகழ்ச்சி நேற்று (08) ளுஹர் தொழுகையின் பின்னர் சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பள்ளிச்சங்க நிர்வாகிகள் உட்பட சீனன்கோட்டை ஜமாத்தார்கள் பெருமளவிலானோர் பங்குபற்றியுள்ளதை படத்தில் காணலாம். கொவிட் 19 சுகாதார வழிகாட்டலுக்கமைய இந்த துஆப் பிரார்த்தனை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் ; பேருவளை விசேட நிருபர் )

# போதைக்கு அடிமையானோரை புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைக்க அரசாங்கம் நடவடிக்கை

## வீரவிலையில் நீதியமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

தற்போதைய அரசாங்கம் போதைப் பொருளுக்கு அடிமையாகி சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளை புனர்வாழ்வளித்து அவர்களை சமூகத்தில் இணைக்கும் திட்டத்தை முன்னெடுத்து வருவதாக நீதியமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை வீரவிலை திறந்தவெளி சிறைச்சாலையில் போதைபொருளுக்கு அடிமையான இளைஞர்களை புனர்வாழ்வளிப்பு செய்யும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போதைப் பொருளுக்கு அடிமையாகி தண்டனை அனுபவிக்கும் சிறைக் கைதிகள் இந்த விசேட புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் சேர்க்கப்பட்டு சமூகமயப்படுத்தி, நாட்டிற்கு நல்ல பிரஜைகளாக மாற்றி புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.



வீரவிலை திறந்தவெளி சிறைச்சாலையின் நடவடிக்கையை நேரில் பார்வையிட நீதியமைச்சர் அலிசப்ரி அண்மையில் விஜயம் செய்தார். இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர்களை புனர்வாழ்வளிக்கும் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு சகல வசதிகளுடனும் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது.தற்போதைய எமது அரசாங்கம் போதைப் பொருளுக்கு அடிமையாகி சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருபவர்களை புனர்வாழ்வளித்து அவர்களை சமூகத்திற்கு ஏற்றாற்போல் மாற்றியமைக்கும் திட்டத்தை முன்னெடுப்பதற்கு பலகோடி ரூபாக்களையும் செலவு செய்து வருவதாகவும் அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்தார். மேலும் அமைச்சர் வைத்தியசாலை விடுதி மற்றும் அதன் வசதிகளையும் பார்வையிட்டதோடு மேலும் வசதி வாய்ப்புகளை மேம்படுத்தவும் அதிகாரிகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கினார்.

# ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக செயற்பட்டவர் ராஜா கொல்லுரே

## அனுதாபச்செய்தியில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார



வட மேல் மாகாண ஆளுநர் சட்டத்தரணி ராஜா கொல்லுரே பொது மக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக சர்வதேச அளவில் முன்னின்று செயற்பட்ட ஒரு கம்யூனிச சகோதரராவார் என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஒருவராகவும் சோஷலிச மக்கள் முன்னணியின் செயலாளரான ராஜாகொல்லுரே யின் திடீர் மறைவு இலங்கை இடதுசாரி இயக்கத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

ராஜா சகோதரர் தனது மாணவப் பருவத்திலிருந்தே தனது வாழ்க்கையையும் இருப்பையும் சர்வதேச கம்யூனிசத்திற்காக அர்ப்பணித்தவர். ஒவ்வொரு முக்கியமான தருணத்திலும் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவும், விடயங்களை பகுப்பாய்வு செய்து செயல்படுத்தவும் தைரியமாக முன்வந்ததன் ஊடாக அவர் அரசியல் அரங்கில் சிறந்து விளங்கினார்.

நல்லாட்சி கூட்டணியின் கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்ட இக்கட்டான காலக்கட்டத்தில் எம்முடன் முன்னின்று செயற்பட்ட மறைந்த சகோதரர் ராஜா, சோசலிச முகாமில் இடம்பெற்ற விவாதங்களில் "பொஹொட்டுவ" புதிய கூட்டணியை உருவாக்குவதிலும் ஆட்சிஅமைப்பதிலும் நேரடியாக ஈடுபட்ட செயற்பாட்டாளராக இருந்தார்.

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக கண்டியில் இருந்து கொழும்பு வரையான பாதயாத்திரையின்போது, உரிய பாதுகாப்பு இல்லாமலேயே சகோதரர் ராஜா தனது கட்சிக்காக தலைமை தாங்கி முன்னின்றார்.

சோசலிச முன்னணியின் வாத விவாதங்களில் அவர் எங்களுடன் தீர்க்கமாக மோதினாலும், அவை அனைத்தும் அந்த விவாதங்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

சகோதரர் ராஜா உலக கம்யூனிச இயக்கத்திலும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான முகாமிலும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

அன்னாரின் பாதையில் இலங்கை மக்களை தொடர்ந்து அணி திரட்டுவது இடதுசாரி மற்றும் முற்போக்கு மக்களின் பணியாகும். அன்னாரின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாததொன்றாகும் என அமைச்சர் வாசுதேவ நாணய்க்கார விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் டெங்கு, எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் அளவில் டெங்கு நோயாளர்கள் 309 பேரும் எலிக் காய்ச்சல் நோயாளர்கள் 226 பேரும் இனங்காணப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் நேற்று (08) அறிவித்துள்ளது.

மக்கள் கொவிட் நோயின் மீது மாத்திரம் கவனம் செலுத்தியிருந்தாலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களையும் எலிக்காய்ச்சல் பரவுவதையும் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார சேவை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஹபரணை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக தரமுயர்த்த நடவடிக்கை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஹபரணை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக தரமுயர்த்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஹபரணை ஹிரிவடுன்ன காசியப்பகம பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'சௌபாக்கியா உற்பத்தி' கிராமத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஹபரணை பிரதேசம் என்பது ரிட்டிகலை மலைப்பகுதி மற்றும் சீகிரிய பகுதிக்கு அருகில் அமைந்துள்ள வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பொலன்னறுவ மற்றும் திருகோணமலை பகுதிக்கு செல்லும் வளியிலுள்ள ஒரு கேந்திர நிலையமாகும். இது அனைவரினதும் மனதையும் கவரக்கூடிய பகுதியாகும். அதன் காரணத்தினாலேயே இப்பகுதி மிக விரைவில் சுற்றுலா வலயமாக தரமுயர்த்தப்படவுள்ளது. இதனால் இப்பகுதியிலுள்ள மக்கள் பெரும் நன்மை அடைவதுடன் தமது அன்றாட பொருளாதாரத்தினையும் அதிகரித்துக் கொள்வதற்கு வாய்ப்பு கிட்டுகின்றது.



# புத்தளம் சாஹிரா "பல்ஸ்" அமைப்பின் பொதுக்கூட்டம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பான "பல்ஸ்" (PULSED) அமைப்பின் 13 வது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் புத்தளம் மஸ்ஜித் வீதியில் அமைந்துள்ள கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வருடாந்த கூட்டத்தின்போது நடப்பு ஆண்டின் 13வது செயற்குழு தலைவராக எம்.டீ.ரினாஸ் முஹம்மதும், உப தலைவராக முஹம்மது ரம்ஸீனும், செயலாளராக முஹம்மது ரிகாஸும், உப செயலாளராக முஹம்மது அஸாமும், பொருளாளராக முஹம்மது தக்ரீமும், உப பொருளாளராக முஹம்மது டில்ஹசானும்,

இணைப்பாளராக ஹிப்ஸுர் ரஹ்மானும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் புத்தளத்தின் மூத்த கல்வியியலாளரும், ஓய்வுபெற்ற புத்தளம் ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளருமான எம். எச். எம் நவாஸ் அவர்களுக்கான சேவை நல பாராட்டும், கௌரவிப்பும், ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததோடு நினைவுச்சின்னம் ஒன்றும் PULSED அமைப்பினரால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

PULSED அமைப்பானது புத்தளம் நகரின் கல்வி, சமூக மற்றும் சுற்றாடல் மேம்பாடு தொடர்பான இலக்குகளை நோக்கி தொடர்ச்சியாக சமூகத்தில் பல்வேறு பணிகளை செய்துவருவது குறிப்பிடத்தக்கது.



தேனும்பாலும் பழைய பாடல்கள் வசந்தகானம் நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்தசமரகோன் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வின் முன்னிலையாளராக கலந்து கொண்ட புத்தக பூங்கா நிறுவுநரும் இலக்கியப் புரவலருமான ஹாஸிம்உமர்,பாராட்டுச்சான்றிதழை வழங்குகிறார்.அருகில், நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களான பாஸில் மற்றும் கலைக்கமல் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# 'ஆட்கடத்தல் மற்றும் மனித விற்பனை' தொடர்பான ஊடகவியல் கருத்தரங்கு

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**





ஆட்கடத்தல் மற்றும் மனித விற்பனை தொடர்பான சம்பவங்களை பொறுப்புடன் செய்தி அறிக்கையிடல், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் வகிபாகமும் சேவைகளும் பற்றிய ஊடகவியலாளர்களுக்கான 2 நாள் பயிற்சிப்பட்டறை கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) மற்றும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஆகியன இணைந்து கோல்பேஸ் கோட்டலில் நடாத்தியது.

IOM அமைப்பின் சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் இம்தாத் பஸர் தலைமையில் இடம் பெற்ற பயிற்சிப்பட்டறையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இலத்திரனியல், அச்சு மற்றும் இணையத்தள ஊடகவியலாளர்கள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக பங்குபற்றியிருந்தனர்.

# சியம்பலாகஸ்கொட்டுவ மதீனாவில் புதிய நிர்வாகிகள் தெரிவு



சியம்பலாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் கல்லூரியின் அதிபர் அப்துர் ரஹ்மான் தலைமையில் சுகாதார வழிமுறைகளைப் பேணி நடைபெற்றது.

அதன்போது எதிர்வரும் மூன்று வருடங்களுக்கான செயற்குழு அங்கத்தவர்கள் தெரிவு இடம்பெற்றதுடன் பின்வரும் 21 உறுப்பினர்கள் நிறைவேற்றுக் குழுவிற்காக

ஐ.எல்.எம். அஸ்கர், எம்.ஆர்.எம். ஹாரிஸ் கான், எம்.எஸ்.எம். இம்தியாஸ், ஏ.ஜே.எம். இல்ஹாம், எம்.ஐ.எம். யஹ்யா, எம்.ஆர்.ஏ. அஹமட், ஏ.ஜீ.எச். பஸரி, ஏ.சீ.எஸ். முஜீபுர் ரஹ்மான், என்;.எம். நவ்பி, ஐ.எல்.எம். முஸம்மில், எம்.எம். பைசர், ஏ.எல்.எம். ரஸான், எம்.எஸ்.எம். இல்ஹாம், எம்.ஏ.எம். அகீல், எம்.ஐ.எம். இன்பாஸ், ஏ.டப். ரியாஸ், எம். சஹீ;ட், ஏ.எம். இர்ஷாத், எம். சுபியான், எஸ்.டீ.எம். முஸ்தபா, எம்.ஆர்.எம். சவூத் ஆகியோர் சபையோரால் தெரிவு செய்யப்பட்டனர்.

அதன் பின்னர் இம்மாதம் 05ஆம் திகதி நடைபெற்ற நிறைவேற்றுக் குழுவின் முதலாவது கூட்டத்தின் போது வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யும் நிகழ்வு இடம்பெற்றதுடன், சியம்பலாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக பதவி வழியாக கல்லூரியின் அதிபர் அப்துர் ரஹ்மானும் செயலாளராக ஐ.எல்.எம். அஸ்கரும் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் பொருளாளராக ஏ.ஜே.எம். இல்ஹாமும் உப செயலாளராக எம்.எஸ்.எம். இம்தியாஸும் உப பொருளாளராக எம்.ஐ.எம். யஹ்யாவும் தெரிவு செய்யப்பட்டார். பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு எம்.ஆர்.எம். ஹாரிஸ்கான் மற்றும் ஐ.எல்.எம். முஸம்மில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# கொடூரத்தின் உச்சத்தை தொட்ட பிரியந்த குமாரவின் மரணம்



**பாகிஸ்தானில் பணிபுரியும் பிரியந்த போன்ற உயர் அதிகாரிகளுக்கு இவ்வாறான நிலைமை என்றால் சாதாரண தொழில் புரிபவர்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுமோ?**

**– பிரயந்தவின் மனைவி**








பாகிஸ்தானின் சியல்கொட் நகரில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். அன்று சூரியனின் வெப்பம் ஏனைய நாட்களை விட கடுமையாக இருந்தது. சியல்கொட் நகர மக்கள் சுறுசுறுப்பாக தங்களது பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு சென்று சியல்கொட் நகரின் பிரதான ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் முகாமையாளராக பதவி வகித்த பிரியந்த குமாரவும் அன்று காலையிலேயே சுறுசுறுப்பாக தனது பணி செய்யும் இடத்திற்கு சென்றார். அவரின் வாழ்க்கையில் முதல் கடமையாக தன்னுடைய பணியை நிறைவேற்றுவதையே கொண்டிருந்தார். அவர் பணியை ஆரம்பித்து சிறிது நேரத்தில் அவர் கனவில் கூட எதிர்பார்க்காத சம்பவத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டது. பிரியந்த குமார தனது பணியிடத்தில் வேலைநிறுத்த காரர்களால் சூழப்பட்டார். அவர்கள் அடிப்படைவாத மத, வாத கொள்கையை உடைய மதவெறியர்கள். அந்த மதவெறியர்களால் தாக்கப்பட்டு உயிரோடு எரியூட்டப்பட்டார். அந்த கொடூரமான செயலுக்குள்ளான பிரியந்த குமாரவின் உடற்பாகங்கள் இலங்கையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**ஜனநாயக ரீதியில் கலந்துரையாடியிருந்தால் பிரியந்த குமாரவின் உயிர் பலியாகாமல் இருந்திருக்கும்**

இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான பிரியந்த குமார தியவடன பாகிஸ்தானின் கிழக்கு பிரதேசமான சியல்கொட் நகரில் சைதராபாத் ரட்ஜ்கோ நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். அவர் அந் நிறுவனத்தின் நம்பிக்கைக்குரிய அதிகாரியாக திகழ்ந்தார். அடிப்படைவாதிகளின் தாக்குதலில் மரணம் அடைந்த அவரின் உடல் பகல் 12 மணியளவில் மீட்புக் குழுவால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவரது உடல் எரிந்து சிதைந்திருந்தது. இச்சம்பவத்தை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் வன்மையாக கண்டித்திருந்ததோடு பாகிஸ்தானுக்கும் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இவ்விடயம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையின் மூலம் இச்சம்பவம் காரணமாக தான் மிகவும் கவலை அடைந்துள்ளதாகவும் பாகிஸ்தானில் பணியாற்றும் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அந்நாட்டு அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

உலகின் கவனத்தை ஈர்த்துள்ள பாகிஸ்தானில் கொடூரமாக கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் வீட்டை நாம் அடைந்த வேளையில் முழு கிராமமே சோகத்தில் மூழ்கியிருந்தது. நாம் பிரியந்த குமாரவின் மனைவி மற்றும் பிள்ளைகளை சந்திக்க அவரது வீட்டிற்கு சென்றோம். வெலிபில்லேவ பொகுன சந்தி துயரமான சம்பவங்கள் பலவற்றை சந்தித்து உள்ளது.

கொரோனா காலத்தில் தினந்தோறும் பத்து பதினைந்து பேர் மரணம் அடைந்ததும் இந்த சந்திக்கு நானூறு ஐநூறு மீட்டரிலாகும். நாம் அங்கு சந்தித்த கிராமவாசிகள் அனைவருமே பிரியந்தவின் நற்பண்புகள் பற்றியே பேசினார்கள். இவ்வாறான நற்பண்புகளை உடைய ஒருவருக்கு நடந்த இச்சம்பவம் மிகவும் பயங்கரமானதாகும். பிரியந்த பணியாற்றிய நிறுவன உரிமையாளரின் நம்பிக்கைக்குரிய அதிகாரியாவார்.

அவரது மரணத்தின் பின்னர் அவரின் குடும்பத்தாருடன் கதைத்த உரிமையாளர் கூறிய விடயங்கள் ஆச்சரியமாக இருந்தன."இந்த நிறுவனம் என்னுடையது அல்ல பிரியந்தவினதே. இந்த நிறுவனத்தை வளர்ச்சியடையச் செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அதனை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். " பிரியந்த தனது பணியை நேர்மையாக நிறைவேற்றுபவர். அவர் கலஹிட்டியாவ மத்திய கல்லூரியிலும் , மாத்தறை ராகுல கல்லூரி மற்றும் தர்மாலோக்க கல்லூரியிலும் கல்வி கற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர் எல்லா துறைகளிலும் திறமையானவர்.

பிரியந்தவுக்கும் அவரது மனைவி நிரோஷி திசாநாயக்கவுக்கும் 15 வருடங்களுக்கு முன்னர் திருமணம் நடந்துள்ளது. மரணமடைவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் நீண்ட நேரம் தொலைபேசியில் உரையாடிய அவர் தனக்கு இவ்வாறான எதிரிகளின் தொல்லை உள்ளதாக ஒருபோதும் தெரிவித்திருக்கவில்லை.

"எனது கணவர் மிகவும் அமைதியானவர் அவ்வாறான ஒருவருக்கு ஏன் இவ்வாறு நடந்தது என புரியவில்லை. நான் இரண்டு நாட்டு அரசாங்கங்களிடமும் இந்த அநியாயத்துக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

**பிரியந்தவின் சகோதரர் ஒருவரும் பாகிஸ்தானில் பணிபுரிகின்றார்**

அவர் கூறுவது உண்மையே பிரியந்த போன்ற உயர் அதிகாரிகளுக்கு இவ்வாறான நிலைமை என்றால் சாதாரண தொழில் புரிபவர்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுமோ? அதனால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனமுடன் செயல்பட வேண்டும்.

### பிரியந்தவின் மூத்த மகன்

"அப்பா அடுத்த வருடம் இலங்கைக்கு வருவதாக கூறியிருந்தார். அவர் வரும் நாளை நானும் எனது தம்பியும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம். "என கண்ணீர் மல்க கூறினார். பிரியந்தவின் சகோதரர் ஒருவரும் பாகிஸ்தானில் பணிபுரிகின்றார் அவர்கள் நேரடியாக சந்தித்துக் கொள்ளாவிட்டாலும் தொலைபேசி மூலம் அடிக்கடி கதைத்துள்ளார்கள். அவ்வேளைகளில் அவர் தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என ஒருபோதும் கூறியிருக்கவில்லை.

பிரியந்தவின் மாமாவான எஸ்.எம் திசாநாயக்க "பிரியந்த மிகவும் நல்ல மனிதர். அவரிடம் இன மத பேதம் இருக்கவில்லை. அவர் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளும் ஒருவர். எனக் கூறினார். உண்மையில் பிரியந்தவுக்கு நடந்த இந்த சம்பவம் காரணமாக மத அடிப்படைவாதம் குறித்த விவாதம் எழுந்துள்ளது. மதத்தை பின்பற்றவும் அதை நம்பவும் அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால் மனித கொலைகளை செய்து தங்களது மதக் கொள்கைகளை உறுதிசெய்ய உரிமையில்லை. ஜனநாயக ரீதியில் கலந்துரையாடல் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே சிறந்ததாகும். ஆனால் அன்று பாகிஸ்தானின் சியால்கோட் நகரில் அவ்வாறு செயல்படாமல் மிலேச்சத்தனமே தலைதூக்கியது. அது உண்மையில் கவலைக்குரிய விடயமாகும். அன்று ஜனநாயக ரீதியில் கலந்துரையாடியிருந்தால் பிரியந்த குமாரவின் உயிர் பலியாகாமல் இருந்திருக்கும். இந் நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் இவ்வாறான அடிப்படைவாதம் பரவுவதை தடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

பிரியந்த எம்மை விட்டு பிரிந்து சென்று விட்டார். ஆனால் அவரின் மரணத்தின் மூலம் இன்னுமொருவர் இவ்வாறான நிலைமைக்கு உள்ளாவதை தடுப்பது எவ்வாறு என்பதையே கற்றுக்கொள்ள வேண்டும்.

**வீ.ஆர்.வயலட்**




# வழங்குநர்களை பதிவு செய்தல்

## மாகாண கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்

பாடசாலை உட்கட்டமைப்பின் தரமான, போதுமான மற்றும் மூலோபாய ரீதியான அபிவிருத்திக்காக திட்டமிடல் மற்றும் பெறுகை தொடர்பில் கல்வி அமைச்சியின் செயலாளரின் 26/2018ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய கல்வி செயற்பாடுகளுக்காக கொள்வனவு மற்றும் சேவை வழங்கலுக்கு தொடர்புடைய 2022ஆம் ஆண்டிற்கான பாடசாலை வழங்குநர்கள் பதிவு செய்தல்.

2021 டிசம்பர் 30ஆம் திகதி பி.ப. 4.00 வரை வழங்குநர்களை பதிவு செய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களின் மூலம் அந்த அலுவலகங்களில் விண்ணப்பங்கள் ஏற்கப்படும். 2021.12.09ஆம் திகதி மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை குறித்த வலயக் கல்வி பணிப்பாளர்களிடம் 100.00 ரூபா கட்டணம் ஒன்றை செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும். கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொருட்கள் மற்றும் சேவை பிரிவுகளுக்காக வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் குறித்த வலயக் கல்வி அலுவலகத்திற்கு கைகளால் கொண்டுவந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் பதிவு செய்துகொள்ள முடியும்.

| வரிசை இல. | முகவரி | தொலைபேசி இலக்கம் - கணக்குப் பிரிவு |
|---|---|---|
| 01 | வலயக் கல்விப் பணிப்பாளர்,<br>வலயக் கல்வி அலுவலகம், அநுராதபுரம் | 025 - 2234808 |
| 02 | வலயக் கல்விப் பணிப்பாளர்,<br>வலயக் கல்வி அலுவலகம், தபுத்தேகம | 025 - 2275116 |
| 03 | வலயக் கல்விப் பணிப்பாளர்,<br>வலயக் கல்வி அலுவலகம், கெகிராவ | 025 - 2264501 |
| 04 | வலயக் கல்விப் பணிப்பாளர்,<br>வலயக் கல்வி அலுவலகம், கலென்பிதுனுவெவ | 025 - 2258382 |
| 05 | வலயக் கல்விப் பணிப்பாளர்,<br>வலயக் கல்வி அலுவலகம், கெபித்திகொல்லேவ | 025 - 2298069 |
| 06 | வலயக் கல்விப் பணிப்பாளர்,<br>வலயக் கல்வி அலுவலகம், பொலன்னறுவை | 027 - 2226982 |
| 07 | வலயக் கல்விப் பணிப்பாளர்,<br>வலயக் கல்வி அலுவலகம், ஹிங்குரக்கொட | 027 - 2245844 |
| 08 | வலயக் கல்விப் பணிப்பாளர்,<br>வலயக் கல்வி அலுவலகம், திபுலாகல | 027 - 2051105 |

| பொருட்கள் இலக்கம் | பொருட்கள் மற்றும் சேவைகள் |
|---|---|
| 01. | எழுதுபொருட்கள் |
| 02. | நூலக புத்தகங்கள் |
| 03. | விஞ்ஞான உபகரணங்கள் |
| 04. | கணித உபகரணங்கள் |
| 05. | விவசாய உபகரணங்கள் |
| 06. | விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| 07. | அழகியற் பொருட்கள் |
| 08. | தொழில்நுட்ப மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| 09. | விசேட கல்வி உபகரணங்கள் |
| 10. | கணினி மற்றும் அச்சு இயந்திரங்கள் வழங்கல், சேவைகள் மற்றும் பழுதுபார்த்தல் |
| 11. | ஆய்வுகூட உபகரணங்கள், நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல் |
| 12. | அலுவலக உபகரணங்கள் (நிழற்பிரதி இயந்திரம், ரோனியோ இயந்திரம், தட்டச்சு) வழங்கல், நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல் |
| 13. | இசை, நடனப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல் |
| 14. | பாடசாலை மரச்சாமான்கள் வழங்கல், நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல் |
| 15. | பரிசுப் பொருட்கள் |
| 16. | பாடசாலை கட்டிட மூலப்பொருட்கள் வழங்கல் |
| 17. | கிழிந்த புத்தகங்கள், பத்திரிகைகளை விற்பனை செய்தல் |

**ஈ.எம்.என்.டபிள்யு. ஏகநாயக்க**
**மாகாண கல்விப் பணிப்பாளர்**
**மாகாண கல்வித் திணைக்களம்**
**வட மத்திய மாகாணம், அநுராதபுரம்.**

2021.12.09

# அறிவித்தல்

## மிஹிந்தலை பிரதேச சபை

மிஹிந்தலை பிரதேச சபையின் திண்ம கழிவுப்பொருள் மீள் சுழற்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2021.12.03 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட கேள்வி அழைப்பு அறிவித்தலில் கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி மற்றும் நேரம் 2021.12.16 பி.ப.01.00 என திருத்தப் படுவதாகவும், கேள்விப்பத்திரங்கள் திறத்தல் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் இடம்பெறும் எனவும், ஆர்வமுள்ள கேள்வி தாரர்களுக்கு இத்தால் தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

**தலைவர்**
**சபை பெறுகைக் குழு**
**மிஹிந்தலை பிரதேச சபை**
**மிஹிந்தலை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பாணந்துறை, ஹேனமுல்லை, சேர்க்கியூலர், இலக்கம் 19 எனும் முகவரியில் வசித்த, தற்போது இத்தாலி யூ2, இலக்கம் 1, இன்டர்நேஷனல் சிட்டி துபாய் U.A.E எனும் முகவரியில் வசிக்கும் மகீன் அப்துல் ரஹீம் ஆகிய நான் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசிற்கும், அதன் மக்களுக்கும் அறியத் தருவதாவது, கொழும்பு-7 ஹோட்டன் பிளேஸ் இலக்கம் 93/2 இல் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசாகிய முஹம்மத் தௌபீக் முஹம்மத் BாFபிக் அவர்களால் பதிவு செய்யப்பட்ட இலக்கம் 11238 மற்றும் 2012.01.03ம் திகதி அதிகாரம் 87, பக்கம் 33, மற்றும் 129வது பதிவின்படி 2012.01.06 ம் திகதி தெல்கந்த நுகேகொட நிலப்பதிவுகாரியாலயத்தில் பதிவு செய்யப்பட்ட அட்டோர்ணி அனுமதிப் பத்திரத்தின் படி, தொட்ட வத்தை யோனக மாவத்தை இலக்கம் 43 எனும் முகவரியைக் கொண்ட முஹம்மட் றிழா முஹம்மட் றுஸ்ணி என்பவருக்கு அளிக்கப்பட்ட அட்டோர்ணி அதிகாரத்தை இதனூடாக ரத்து செய்கின்றேன் எனவும் இதன் பிறகு மேற்கூறிய அட்டோர்ணி அதிகாரத்தின்படி மேற்கூறிய நபரால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் அல்லது செயல்களுக்கும் நான் பொறுப்பில்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

**மகீன் அப்துல் ரஹீம்**

# திறந்த மீள் கேள்வி அறிவித்தல் 2022

## மஸ்கெலியா பிரதேச சபை - மஸ்கெலியா

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட தற்காலிக கடை, பொது மலசலகூடத்தொகுதி மற்றும் பொது வாகன தரிப்பிடம் என்பவற்றுக்கான திறந்த மீள் கேள்வி அறிவித்தல்.

**கடையறை குத்தகைக்கு வழங்குதல்.**

| இல | குத்தகைக்கு விடப்படும் சேவைகள் | ஆகக் குறைந்த கேள்வி தொகை ரூ. | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு தொகை ரூ. | மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 01 | மஸ்கெலியா மாட்டிறைச்சி கடை இல 09 | 3,950,000.00 | 200,000.00 | 3,000.00 |

**பொது மலசலகூட தொகுதி மற்றும் பொது வாகன தரிப்பிட குத்தகைக்கு வழங்குதல்.**

| இல | குத்தகைக்கு விடப்படும் சேவை | கமிஷன் அடிப்படையில் சபையினால் வழங்கப்படும் குறைந்த தொகை % | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு தொகை ரூ. | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 01 | நல்லதண்ணி வாகன தரிப்பிடம் மற்றும் பொது மலசலகூட தொகுதி | 50% | 75,000.00 | 2500.00 |

**தற்காலிக கடையறைகளை குத்தகைக்கு வழங்கல்**

| இல | கடை இல | இடம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை ரூ. | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு தொகை ரூ. | மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | 04 | மஸ்கெலியா 4ஆம் வீதி | 5000.00 | 90,000.00 | 2500.00 |
| 02 | 05 | மஸ்கெலியா 4ஆம் வீதி | 5000.00 | 90,000.00 | 2500.00 |
| 03 | 06 | மஸ்கெலியா 4ஆம் வீதி | 5000.00 | 90,000.00 | 2500.00 |
| 04 | 09 | வேன் வாகன தரிப்பிடத்திற்கு அருகில் | 5000.00 | 90,000.00 | 2500.00 |

கேள்வி விண்ணப்பங்களை 2021.12.08 ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2021.12.21 ஆம் திகதி பி.ப.04.00 மணி வரை அரச வேலை நாட்களில் மஸ்கெலியா பிரதேச சபையின் பிரதான காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

டென்டர் மூல பிரதி, துணைப்பிரதி என தனித்தனியாக குறிப்பிடப்படுவதோடு தனியான கடித உறைகளில் இட்டு கேள்வி பத்திரங்கள் முன்வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ...................................... நகரம் மற்றும் கோரப்படும் வியாபார வகை அல்லது இடம்/ கடைதொகுதி இல என்பவற்றை தெளிவாக குறிப்பிடவும்.

உ-ம் : (மாட்டிறைச்சி கடை/ ஆட்டிறைச்சி கடை/ மீன் விற்பனை, நல்லதண்ணி வாகன தரிப்பிடம் மற்றும் மலசலகூட தொகுதி, தற்காலிக கடைதொகுதி இல என தனித்தனியாக தெளிவாக குறிப்பிட வேண்டும்.)

அனைத்து கேள்வி பத்திரங்களும் "தவிசாளர், மஸ்கெலியா பிரதேச சபை, மஸ்கெலியா" எனும் முகவரிக்கு 2021.12.22 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடல் வேண்டும். அன்றைய தினம் மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அதன் போது கேள்விதாரர் அல்லது அவர் சார்பாக பிரதிநிதி ஒருவர் வருகைதரல் அவசியமாகும்.

**நிபந்தனைகள் :**

1. மாட்டிறைச்சி வியாபாரஸ்தலம் மற்றும் கடையறை குத்தகைக்கு வழங்குதல் சம்பந்தமாக இதற்கு முன்பு 2021.11.20 ஆம் திகதி தினமின.'. தினகரன் பத்திரிக்கையில் அறிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.
2. நல்லதண்ணி பொது வாகனத்தரிப்பிடம் மற்றும் மலசலகூட தொகுதி என்பவற்றிற்காக முத்திரையுடனான டிக்கட்டுக்களின் ஆகக்கூடிய கமிஷன் தொகையினை சபைக்கு செலுத்தும் குத்தகைக்காரருக்கு டென்டர் வழங்கப்படும்.
3. மலசலகூடத் தொகுதி மற்றும் வாகன தரிப்பிடத்திற்கான சுத்திகரிப்புத் தொழிலாளர்களை குத்தகைக்காரரே சேவைக்கமர்த்த வேண்டும்.
4. ஆரம்பத்தில் வழங்கப்படும் டிக்கட்டுக்களின் பெறுமதிக்கு சமனான தொகையினை சபையின் வைப்புப்தொகையாக செலுத்த வேண்டும். பெறப்பட்ட டிக்கட்டுக்களின் தொகை மீள செலுத்தும் போது மீளவும் டிக்கட்டுக்கள் வழங்கப்படும்.
5. தலைவர் மற்றும் அவரினால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தருக்கு டிக்கட்டுக்களை பரிசோதிக்க இடமளித்தல் வேண்டும்.
6. குத்தகைக் கால வரையறை 2021.12.18 தொடக்கம் 2022.05.15 வரையாகும்.
7. வேறு நபருக்கு மீள் குத்தகைக்கு விடுதல் முழுமையாக தடைசெய்யப்படுகிறது. அவ்வாறு மீள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக சபைக்கு தெரியவரும் போது ஒப்பந்தம் செல்லுபடியற்றதாக்கப்பட்டு சபையினால் மீள கையேற்கப்படுவதோடு வைப்பு தொகை மீள கையளிக்கப்படாது என்பதுடன் குற்றம் இழைத்தவராக கருதி குற்றப்பதிவு ஆவணத்தில் பெயர் உள்ளடக்கப்படும்.
8. கேள்விதாரர் டென்டரிலிருந்து விலகும் பட்சத்தில் வைப்புப்பணமானது மீள செலுத்தப்பட மாட்டாது.
9. முன்னைய ஆண்டின் குத்தகைதாரர்களின் நிலுவைகள் செலுத்தப்படாதிருப்பின் அவற்றை செலுத்திய பின்னரே கேள்வி விண்ணப்பம் விநியோகிக்கப்படும்.
10. பெயரினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக விண்ணப்பப்பத்திரத்துடன் தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி மற்றும் கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் அவசியமானதாகும்.( கேள்வி விண்ணப்பத்திற்காக)
11. டென்டர் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

2021.12.08

**தவிசாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

# வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்தல் – 2022

## நுவரெலியா பிரதேச சபை

2022.01.01ம் திகதி முதல் 2022.12.31ம் திகதி வரையான காலப்பகுதியில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே உப அட்டவணை 01ல் குறிப்பிடப்பட்டுள்ள வழங்குநர்கள் மற்றும் சேவையாளர்கள், உப அட்டவணை 02ல் குறிப்பிட்டுள்ள நிதி பயன்பாட்டு நடவடிக்கைகளுக்காக நிறுவனங்கள் இதற்கான விண்ணப்பங்களை திருப்பி செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்டு நுவரெலியா பிரதேச சபை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தலைவர், நுவரெலியா பிரதேச சபை, நானுஓயா என்னும் முகவரிக்கு அஞ்சல் ஊடாகவோ விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை இடும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்தல் - 2022 என குறிப்பிடவும்.

ஒப்பந்ததாரர்களை பதிவு செய்யும் போது விண்ணப்பித்த நிதி வரம்பைக் கொண்டுவரும் முறையான நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் பிரதி ஒன்று விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

**2021.12.01ம் திகதி**
**நுவரெலியா பிரதேச சபை**

**வேலு யோகராஜ்**
**தலைவர் - நுவரெலியா பிரதேச சபை**

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்தல் – 2022

### நுவரெலியா பிரதேச சபை

**வழங்குநர்கள் மற்றும் சேவையாளர்கள் - உப அட்டவணை 01**

| இலக்கம் | வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்தல் மற்றும் பொருட்கள் | திருப்பி செலுத்தப்படாத பதிவு கட்டணம் |
|---|---|---|
| 01 | அலுவலக உபகரணங்கள் புதுப்பித்தல் மற்றும் சேவை செய்தல் (பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திரம், முத்திரை இயந்திரம், கணனி இயந்திரங்கள் போன்ற அலுவலக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்). | ரூ.3000.00 |
| 02 | கணனிகள் மற்றும் கணனி பாகங்கள் வழங்குதல். | ரூ.3000.00 |
| 03 | கணனிகள், பெக்ஸ், பிரதி இயந்திரம் போன்ற இயந்திரங்களுக்கு தேவையான டோனர் (Cartridge) வழங்குதல். | ரூ.3000.00 |
| 04 | காரியாலய உபகரணங்கள் மற்றும் எழுதுபகரணங்கள் வழங்குதல். | ரூ.3000.00 |
| 05 | மனை உபகரணங்கள், அலுவலக மர தளபாடங்கள் வழங்குதல். | ரூ.3000.00 |
| 06 | சுகாதாரம் தொடர்பான பொருட்கள் வழங்குதல் | ரூ.3000.00 |
| 07 | வீட்டு மின் உபகரணங்கள், வீட்டுப் பாவனை பொருட்கள், ஏனைய மின் உபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் வழங்குதல். | ரூ.3000.00 |
| 08 | மென்பொருள் பதிவு செய்யும் பொருட்கள், (சீடி தட்டுகள், பென் ட்ரைவ்கள், கெமரா) தொலைபேசிகள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் | ரூ.3000.00 |
| 09 | அச்சிட்ட புத்தகங்கள், அறிவித்தல் பலகை, போஸ்ட்டர்கள், பேனர்கள், கட்டவுட் டிஜிடல் பிரின்டிங், மக் பிரின்டிங், ஹேன்ட்பில், பத்திரிகைகள் போன்ற அனைத்து அச்சு வேலைகள் மற்றும் சேவைகள் வழங்குதல். | ரூ.3000.00 |
| 10 | நினைவு பதிவேடு, உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் தின முத்திரை | ரூ.3000.00 |
| 11 | வாகன டயர் மற்றும் டியூப் வழங்குதல். | ரூ.3000.00 |
| 12 | வாகன பெற்றரி வழங்குதல். | ரூ.3000.00 |
| 13 | வாகனங்கள் திருத்துதல் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் | ரூ.3000.00 |
| 14 | வாகன சீட் குஷன் செய்தல், காபட் செய்தல், ஸ்டிகர் செய்தல், டிங்கரிங் செய்தல் மற்றும் சேவை வழங்குதல். | ரூ.3000.00 |
| 15 | வாகனம் சேவை (சேர்விஸ்) செய்தல். | ரூ.3000.00 |
| 16 | வாகனம் கூலிக்கு வழங்குதல். | ரூ.3000.00 |
| 17 | வீதி விளக்குகள் மற்றும் சூரிய ஒளி (சோலர்) வீதி விளக்குகள் வழங்குதல். | ரூ.3000.00 |
| 18 | விளையாட்டு உபகரணங்கள் மற்றும் இசைகருவிகள் வழங்குதல். | ரூ.3000.00 |
| 19 | ஹார்ட்வெயார் உதிரிப் பாகங்கள் மற்றும் அனைத்துவிதமான நிறப்பூச்சு வகைகளும் வழங்குதல். | ரூ.3000.00 |
| 20 | கோவிட் தொற்றுடன் தொடர்புடைய சுகாதாரப் பொருட்கள் (மாஸ்க், செனிடைசர், கிருமிநாசினிகள்) வழங்குதல். | ரூ.3000.00 |
| 21 | பீ.வீ.சீ குழாய்கள் மற்றும் சொக்கட்டுகள் வழங்குதல். | ரூ.3000.00 |
| 22 | அங்கீகரிக்கப்பட்ட அளவையாளர்களை வழங்குதல். | ரூ.3000.00 |

**ஒப்பந்ததாரர்கள் - உப அட்டவணை 02**

| இலக்கம் | கட்டுமான வரம்புகள் | திருப்பி செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | ரூ.50,000.00 ற்கு குறைந்த | ரூ.2000.00 |
| 02 | ரூ.100,000.00 வரை | ரூ.3000.00 |
| 03 | ரூ.200,000.00 வரை | ரூ.4000.00 |
| 04 | ரூ.500,000.00 வரை | ரூ.5000.00 |
| 05 | ரூ.1,000,000.00 வரை | ரூ.6000.00 |
| 06 | ரூ.1,000,000.00 ற்கு மேல் | ரூ.7000.00 |

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் – 2022

### நுவரெலியா பிரதேச சபை

01. வழங்குநரின்/ ஒப்பந்ததாரரின் பெயர் -..............................................................................
02. வர்த்தக நிறுவனத்தின் பெயர் - ..............................................................................
03. முகவரி - ..............................................................................
04. தொலைபேசி இலக்கம் -..............................................................................
05. தொலை நகல் இலக்கம் - ..............................................................................
06. மின்னஞ்சல் முகவரி - ..............................................................................
07. தேசிய அடையாள அட்டை இலக்கம் - ..............................................................................
08. வழங்கப்படும் பொருள்/ சேவை குறியீட்டு எண் -..............................................................................
    (i) ..............................................................................
    (ii) ..............................................................................
09. கடன் சலுகை கால எல்லை - ..............................................................................
10. வியாபார பதிவு இலக்கம் - ..............................................................................
11. இக்டாட் பதிவு இலக்கம் - ......................(கட்டிட, பாதை நிர்மாணப் பணிகள் தொடர்பாக)

மேற்குறிப்பிட்ட விடயங்கள் சரியானவை எனவும், பொருத்தமான பதிவுச்சான்றிதழ் பிரதி இதனுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன் என இத்தால் உறுதி செய்கின்றேன்.

திகதி - ................................................ கையொப்பம் - .........................................

**அலுவலக உபயோகத்திற்கு**

- ❖ பற்றுச் சீட்டு இலக்கம் - ...................................................................
- ❖ விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் - ..................................

**அங்கீகரித்தல்**

திகதி - .................................................. கையொப்பம் - ................................................


**செயலாளர்**
**நுவரெலியா பிரதேச சபை**


## வ/ப பஸ்ஸர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் – பஸ்ஸர

### மீட்டுக்கொள்ளப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

லுணுகல, பஸ்ஸர, மெதவெலகம, பிட்டமாறுவ, இடம்கெதர, பெல்கஹதென்ன, மடொல்சீம, நமுனுகுல, மீதும்பிட்டிய, மா உஸ்ஸாகொல்ல, கோணகல, ஹொப்டன், கொட்டுகஹதென்ன, சூரியகொள்ள, ஆகரதென்ன, அடகு மத்திய நிலையம், குருவிகொள்ள ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2019.08.01 முதல் 2020.09.30 வரை அடகு வைத்து 2021.12.18 வரை மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகள் 2021.12.19 அன்று மு.ப.10.30 இற்கு கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான அலுவலக வளாகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**பொது முகாமையாளர்**
**வ/ப, பஸ்ஸர ப.நோ.கூ.சங்கம்**
**பஸ்ஸர**



# விலைமனு அறிவித்தல்

## பிரதேச சபை, மடுல்ல - தம்பகல்ல

மடுல்ல பிரதேச சபையின் அதிகாரப்பிரிவிலுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சபைக்கு உரித்தான ஆதனங்களின் உரிமையை 2022.01.01 முதல் 2022.12.31 வரையான ஒரு வருட காலத்திற்குக் குத்தகைக்கு கொடுப்பதற்காக மொனராகல மாவட்டத்தில் பதிவு செய்யப்பெற்றுள்ள தொண்டர் நிறுவனங்கள் அல்லது நிரந்தர வதிவிடத்தை கொண்டுள்ள பதிவுசெய்யப்பட்ட தனி நபர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2021.12.22 அன்று மு.ப.10.00 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் (விலைமனுப் படிவங்களை வழங்கல் 2021.12.09 முதல் மேற்கொள்ளப்படும்)

